கிராம நலம்



ஜுலை '61
13 ந. பை

கிராமமக்கள்-மக்களின் கலையாய கடன்

... LIBRARY
31 JUL 1961
MADRAS

உழைப்பாளரின் அடிச்சுவட்டில்

"உழைப்பின் உயர்வு"

"உழைப்பை இழிவாகக் கருதி உதாசீனம் செய்யத் தொடங்கிய நாளன்றே நாட்டுக்கு நாசம் பிறந்து விட்டது. நாட்டுக்கு உயிர் நாடியாக இருந்த, உண்மையான உழைப்பின் மூலம் நாட்டை உயிர்ப்பித்து வந்த லட்சக்கணக்கான ஏழைத் தொழிலாளர் இழி குலத்தினராக மதிக்கப்பட்டனர். உழைக்காமல், உடல் வாடாமல் சுகித்து வந்த ஒரு சிலர் உயர்ந்தோராகிவிட்டனர். இதனுல் நாட்டுக்கு, ஆன்மீகத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் நஷ்டம் ஏற்பட்டது. ஆன்மீகச் சீர்கேடு, பொருளாதார நஷ்டம் ஆகிய இரண்டில் எது பெரிய நஷ்டம் என்று மதிப்பிடுவது அரிது. உழவரையும் தொழிலாளிகளையும் நாம் உதாசீனம் செய்து விட்டதால், வறுமைக்கும், சோம்பலுக்கும் அடிமையாகிவிட்டோம்."

—மகாத்மாவின் மணிமொழி

CONNEMARA PUBLIC LIBRARY
31 JUL 1961

கிராம நலம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால், பின் நமக்கெது வேண்டும்?"

—பாரதியார்.

மாடி 6 | ஜூலை 1961 | படி 10

பொருளடக்கம்

	பக்கம்.
சிறந்த கட்டுரைகளுக்குப் பரிசுத்திட்டம்	2
பரிசுப்பத்திரங்கள்	3
'மரங்கள்—நாட்டின் செல்வம்—பிரதமர் நேரு	5
குடும்பக் கட்டுப்பாடு பயிற்சி நிறுவனம்	6
கிராமவாசியின் வீரச்செயலுக்குப் பரிசு	6
கதர்ப் பொருளாதாரம்—திரு. வெ. பரஞ்சோதி, எம்.ஏ.,	7
பசி தீருமா ? (கவிதை)—கவிஞர். மின்னூர் சீனிவாசன் எம்.ஏ.,	8
பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு (கடிதம்)—திரு. கோ. வேங்கடாசலபதி	9
காந்தியடிகளும் கிராம வாழ்க்கையும்—திரு, வெ. சாமிநாத சர்மா	11
கடிதக் கருத்தரங்கு	13
பள்ளி ஆசிரியர் குழந்தைகளுக்கு உபகாரச் சம்பளங்கள்	14
உத்தமமான வழி (நாடகம்) "விஜயாலயன்"	15
கேள்வியும் பதிலும்	19
பொலிவு மிகு பொத்தனூர்—திரு, மி. செல்வராஜ்	21
வானொலியில் கிராம நிகழ்ச்சிகள்	48

பகுதி 2—பஞ்சாயத்து—அரசினர் இதழ்

அரசாங்க ஆணைகள்	i—xxi

'கிராம நல' இதழ் ஆலோசனைக் குழு

ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.ஸி.எஸ்.,
பிரதமச் செயலாளர்.

ஸ்ரீ கோ. வேங்கடாசலபதி
கிராம அபிவிருத்திக் கமிஷனர்

ஸ்ரீ எஸ். கிருஷ்ணசாமி பிள்ளை
துணைக் காரியதரிசி [பஞ்சாயத்து]

ஸ்ரீ கே. சுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.,
துணைக் காரியதரிசி [பயிற்சி]

ஸ்ரீ டி. என். சேஷன், ஐ.ஏ.எஸ்.,
துணைக் காரியதரிசி [வேலைமுறை]

ஸ்ரீ எஸ். வேங்கடரமணன், ஐ.ஏ.எஸ்.,
துணைக் காரியதரிசி, நிதித்துறை [திட்டம்

ஸ்ரீ எஸ். வேங்கடசாமி, எம்.ஏ.,
பொதுஜனத் தொடர்பு அதிகாரி-ஆசிரியர்.

"கிராம நலம்" பத்திரிகையில் வெளியிட கதை, கட்டுரை, பாட்டு முதலியனவும் அவை சம்பந்தப்பட்ட கடிதங்கள் அனைத்தும் "ஆசிரியர், "கிராம நலம்", கிராம அபிவிருத்தி தல நிர்வாகத் துறை, சென்னை-9" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

கிராம நலம்—சந்தா விவரம்:

ஆண்டு சந்தா ரூ. 1·50 ந.பை.
ஆறுமாத சந்தா 0·75 ந.பை.
தனிப் பிரதி 0·13 ந.பை.

சந்தா, மற்றும் "கிராம நலம்" பத்திரிகை சம்பந்தப்பட்ட எல்லா கடிதப்போக்குவரத்துகளும் 'பொது ஜனத் தொடர்பு அதிகாரி, கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறை, சென்னை-9" என்ற முகவரிக்கு எழுதப்படவேண்டும். ஸ்டாம்புகள் பெற்றுக்கொள்ளப்பட மாட்டா. வி. பி. பி. மூலம் பிரதிகள் அனுப்பப்படமாட்டா.

சிறந்த கட்டுரைகளுக்குப் பரிசுத் திட்டம்

சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துக்கள் தமிழ்நாட்டில் ஏராளமாக உள்ளன. புதிய பஞ்சாயத்துச் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு, பஞ்சாயத்து சம்பந்தப்பட்டவர்களும், கிராம மக்களும் ஊரை உயர்த்தும் திருப்பணியில் ஆர்வத்துடன் ஈடுபடுவதைக் காண்கிறோம். இந்த ஆர்வம் மேலும், நல்ல முறையில் பயன்படும் வகையில், ஒரு பரிசுத் திட்டத்தை அளிக்க " கிராம நலம் " முன்வந்துள்ளது.

கீழே எட்டுத் தலைப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதில் ஏதாவது ஒன்றினை அடிப்படையாக வைத்துக் கட்டுரைகள் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். கட்டுரைகள் "கிராம நல"த்தில் இரண்டு பக்கங்களுக்குமேல் போகக்கூடாது. வெள்ளைத் தாளில், இரண்டு பக்கங்களிலும் எழுதாமல், ஒரே பக்கத்தில் எழுதி அனுப்ப வேண்டும்.

பொருள் :—

1. கிராமப் பொருளாதார வளத்தைப் பெருக்கப் பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள்.
2. வயது வந்த குழந்தைகள் எல்லோருக்கும் கல்வியறிவு புகட்ட, பஞ்சாயத்துக்கள் செய்ய வேண்டியதென்ன ?
3. பள்ளிச் சிறுவர்களுக்கு மதிய உணவு அளிக்கும் திட்டத்தை, திறமையுடன் நடத்துவது எப்படி ?
4. கிராமக் கைத்தொழில் வளர்ச்சிக்கு, பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் என்ன செய்யலாம் ?
5. வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க, பஞ்சாயத்துக்கள் என்ன திட்டங்களை மேற்கொள்ளலாம் ?
6. பொது இடங்களில் மரங்களை நட்டுப் பராமரித்தல் பற்றி, பஞ்சாயத்துக்களின் கடமைகள்.
7. ஜனத் தொகைப் பெருக்கத்தைக் குறைக்க, பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் என்ன செய்யலாம் ?
8. உணவு உற்பத்தி விஷயத்தில், பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் மேற்கொள்ள வேண்டிய பொறுப்புக்கள்.

மேற்குறிப்பிட்ட துறைகளில், உங்கள் கிராமத்தில் எத்தனையோ திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கலாம். செய்துள்ள சாதனைகள் என்னென்ன, கிடைத்த பலன்கள், வெற்றி தோல்விகள் எல்லாவற்றையும், அனுபவ வாயிலாக அடைந்த படிப்பினைகளின் அடிப்படையில், விளக்கிக் கட்டுரை வடிவில் எழுதி அனுப்ப வேண்டும். என்னென்ன செய்யலாம் என்பதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்காமல், மற்றப் பஞ்சாயத்துக்களுக்கும் பயன்படும் வகையில், செய்துள்ளவேலைகளைப்பற்றிய விவரங்கள் மட்டுமே முக்கிய இடம் பெறவேண்டும்.

ஒவ்வொரு மாதமும் மூன்று சிறந்த கட்டுரைகளுக்குப் பரிசளிக்கப்படும்.

முதற் பரிசு ரூ. 25.
இரண்டாவது பரிசு ரூ. 15.
மூன்றாவது பரிசு ரூ. 10.

ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து இப்பரிசுகள் வழங்கப்படும். கட்டுரையின்மேல் "கிராம நலம் கட்டுரைப் போட்டி" என்று தலைப்பிட்டு அனுப்பவும். அத்துடன் தங்களுடைய முழு முகவரியையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். பஞ்சாயத்து உறுப்பினர்கள், பஞ்சாயத்து யூனியன் உறுப்பினர்கள், மற்றும் பஞ்சாயத்து வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள பொது மக்கள் அனைவரும் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம்.

ஆசிரியர்,
" கிராம நலம்,"

கிராம அபிவிருத்தி—தல நிர்வாகத் துறை,
தமிழ்நாடு அரசாங்கத் தலைமை அலுவலகம்,
சென்னை-9

[Editor, "Grama Nalam",
Rural Development and Local
Administration Department,
Secretariat, Madras-9.]

வெள்ள நிவாரண வேலைகள்....

இயற்கை விபத்தாக ஏற்பட்ட வெள்ளக் கொடுமையின் காரணமாய் எண்ணற்ற மக்கள் துன்பத்துக்குள்ளானார்கள்! வெள்ளத்தால் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களைத் தீர்க்க, அரசாங்கத்தாரும் பொது மக்களும் ஒன்றுகூடி தம்மாலான உதவியைச் செய்து வருகின்றனர். சிறப்பாக, காவிரி பாயும் மாவட்டங்களில், முதலமைச்சர் திரு. காமராஜ் அவர்களும், மற்ற அமைச்சர்களும், அதிகாரிகளும், இராணுவத்தினரும் நேரில் சென்று, உடனடியாக நிவாரண வேலைகள் மேற்கொண்டதை அனைவரும் அறிவர்.

வெள்ள நிவாரண வேலைகளைப் பற்றிய சாதனைக் குறிப்புகளையும், ஆலோசனைகளையும் " கிராம நல"த்துக்கு எழுதி அனுப்புமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். " பஞ்சாயத்து ஸ்தாபனங்கள், இந்த வகையில் சிறந்த பணியாற்றுவது எப்படி " என்பதைக் குறித்து, " கட்டுரைகள் " வரவேற்கப்படுகின்றன, இந்தக் கட்டுரைகள் "கிராம நல"த்தில் வெளியிடப்படுவதோடு, மேற்சொன்ன பரிசுத் திட்டத்தை ஒட்டி, தக்க அன்பளிப்பும் தரப்படும்.

—ஆசிரியர்.

பரிசுப் பத்திரங்கள்

பரிசுப் பத்திரங்கள் என்பவை, அரசாங்க உத்தரவாதப் பத்திரங்களில் ஒரு புது விதமானவையாகும். நம் நாட்டு மக்களிடையே, சிறு சேமிப்புப் பழக்கத்தைத்தூண்டும் வகையில், அரசாங்கம் பரிசுப் பத்திரங்களை விற்பனை செய்கிறது. 1960 எப்ரல் 1-ம் தேதி முதல் இவை விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அரசாங்கத்தின் மற்ற உத்தரவாதப் பத்திரங்களுக்கும் இந்தப் பரிசுப் பத்திரங்களுக்கும் வித்தியாசம் உண்டு. அதாவது, இந்தப் பத்திரங்களுக்கு வட்டிப் பணம் அளிப்பதில்லை. அதற்குப் பதிலாக மூன்று மாதத்துக்கொரு முறை அவை ஒன்றுகச் சேகரிக்கப்பட்டு, சீட்டு குலுக்கி, பரிசுகள் வழங்கப் படுகின்றன.

இந்தப் பரிசுப் பத்திரங்களை மாற்றுவது சுலபம். அவற்றை, யார் வேண்டுமானாலும், பின்னர் பணமாக மாற்றிக் கொள்ளலாம். 1965 எப்ரல் 1-ம் தேதி முதல், யார் இந்தப் பரிசுப் பத்திரங்களைக் கொண்டு வந்து அரசாங்கத்திடம் அளிக்கிறார்களோ, அவர்களிடம் அதற்கான பணம் கொடுக்கப்பட்டுவிடும்.

எங்கே கிடைக்கும் ?

கீழ்க் கண்ட அலுவலகங்களில் பரிசுப் பத்திரங்கள் விற்கப்படுகின்றன :

(i) ரிசர்வ் பாங்க் (Reserve Bank of India), சென்னை அலுவலகம்.

(ii) அரசாங்க கஜானு அலுவல்களை நடத்தும் அரசாங்க பாங்கின் (State Bank of India) கிளைகள்.

(iii) இந்தியாவிலுள்ள கஜானுக்கள் (Treasuries), கிளைக் கஜானுக்கள் (Sub-Treasuries). [மேலே (i)-ல் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் உள்ளவையும் மேலே (ii)-ல் குறிப்பிடப்பட்டுள்ள பாங்குகளில் கிளைகள் இருக்குமிடங்களும் நீங்கலாக.]

(iv) எல்லாத் தலைமைத் தபாலாபீசுகள், இலாகா சப்-தபாலாபீசுகள்.

பரிசுப் பத்திரங்களை வயது வந்தவரோ, மைனரோ, யார் வேண்டுமானுலும் வாங்கலாம். மேலே குறிப்பிடப் பட்ட அலுவலகங்களில் ரொக்கம் கொடுத்து, பரிசுப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். இதற்கென மனு பாரம் எதுவும் கிடையாது. ஒருவர் எவ்வளவு பத்திரங்கள் வேண்டுமானுலும் வாங்கலாம்.

மூன்று மாதத்துக்கு ஒரு முறை பரிசு

மூன்று மாதத்துக்கு ஒரு முறை சீட்டுக் குலுக்கப் படும். ஒவ்வொரு தொகுதி பத்திரங்களுக்கும் தனியாக சீட்டுக் குலுக்கி பரிசு வழங்கப்படும். ஒவ்வொரு பத்திரமும், விற்பனையான இரண்டு மாதம் கழிந்தானதும், சீட்டுக் குலுக்கச் சேர்க்கப்படும். அதன்பின், எல்லாத் தடவை சீட்டுக் குலுக்கலிலும் அது இடம் பெறும். முதன் முதலாக, 1960 செப்டம்பர் 1-ல் சீட்டு குலுக்கப் பட்டது. அதன் பின்னர் 1960 டிசம்பர் 1, 1961 மார்ச்சு 1, ஜூன் 1, ஆகிய தேதிகளில் சீட்டுக் குலுக்கப்பட்டது. இப்படியே 1965 மார்ச்சு வரை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை சீட்டுக் குலுக்கப்பட்டு பரிசளிக்கப்படும். 1961-ம் ஆண்டு ஜூன் 30 வரை வழங்கப்பட்ட பத்திரங்கள் 1961-ம் ஆண்டு செப்டம்பர் 1-ல் நடைபெறப் போகும் அடுத்த குலுக்கலிலிருந்து பரிசு பெறத் தகுதியுடையவை. முழுமையாக விற்கப்பட்ட தொகுதிகளுக்கும், அரைகுறையாக விற்கப்பட்ட தொகுதிகளுக்கும் சேர்த்துத்தான் சீட்டுக் குலுக்கப்படும். ஆனுல் விற்கப்படாத பத்திரங்களோ சீட்டுக் குலுக்கும் மாதத்திலிருந்து இரண்டு மாத கால அளவுக்குள் விற்கப்பட்டிருந்த பரிசுப் பத்திரங்களோ, பரிசு பெறத் தகுதியுடையன அல்ல.

இந்திய அரசாங்கம், அதிகாரிகள், அதிகாரப் பற்றற்ற முக்கியஸ்தர்கள் ஆகியோர் அடங்கிய குழு ஒன்றின் மேற்பார்வையில், சீட்டுக் குலுக்கல் நடைபெறும். சீட்டுக் குலுக்கும் நிகழ்ச்சி பொதுமக்கள் முன்னிலையில் நடைபெறுவதால் அதை யாரும் பார்வையிடலாம்.

பரிசுத் தொகை வழங்குதல்

ரூபாய் 100 மதிப்புள்ள ஒரு லட்சம் பத்திரங்கள் கொண்ட ஒவ்வொரு தொகுதிக்கும் மூன்று மாதத்துக்கொரு முறை சீட்டுக் குலுக்கி கீழ்க்கண்ட முறையில் 40 பரிசுகள் வழங்கப்படும் :—

25,000 ரூபாய் பரிசு	1	..	ரூ. 25,000
10,000 ரூபாய் பரிசுகள்	2	..	ரூ. 20,000
5,000 ரூபாய் பரிசுகள்	5	..	ரூ. 25,000
1,000 ரூபாய் பரிசுகள்	12	..	ரூ. 12,000
500 ரூபாய் பரிசுகள்	20	..	ரூ. 10,000
மொத்தப் பரிசுகள்	..40		ரூ. 97,000

ஒவ்வொரு தொகுதிக்கும் கால் ஆண்டுக்கு ஒரு முறை, அளிக்கப் பெறும் 40 பரிசுகளின் மொத்தத் தொகை ரூ. 97,000.

ரூபாய் 5 மதிப்புள்ள 10 லட்சம் பத்திரங்கள் கொண்ட ஒவ்வொரு தொகுதிக்கும், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை 278 பரிசுகள் வழங்கப்படும். அந்தப் பரிசு முறை வருமாறு :—

7,500 ரூபாய் பரிசு	1	..	ரூ. 7,500
2,500 ரூபாய் பரிசுகள்	2	..	ரூ. 5,000
1,000 ரூபாய் பரிசுகள்	10	..	ரூ. 10,000
500 ரூபாய் பரிசுகள்	20	..	ரூ. 10,000
100 ரூபாய் பரிசுகள்	25	..	ரூ. 2,500
50 ரூபாய் பரிசுகள்	220	..	ரூ. 11,000
மொத்தப் பரிசுகள்	..278		ரூ. 46,000

ஒவ்வொரு தொகுதியிலும் கால் ஆண்டுக்கு ஒரு முறை அளிக்கப்படும் 278 பரிசுகளின் மொத்தத் தொகை—ரூபாய் 46,000.

பரிசு பெறும் பணத்திற்கு வருமான வரி விதிக்கப்பட மாட்டாது.

பரிசுத் தொகையைப் பெறுவது எப்படி ?

ஒவ்வொரு தடவையும், சீட்டுக் குலுக்கி முடிந்ததும், பரிசு பெற்ற பத்திரங்களின் எண்கள், இந்திய அரசினர் இதழிலும் (Government of India Gazette) பத்திரிகைகளிலும் வெளியிடப்படும்.

பரிசு பெற்ற பத்திரத்தை வைத்திருப்பவர், அப்பத்திரத்துடன், தமது பரிசுக் கோரிக்கையை, பரிசுப் பத்திரங்கள் விற்கும் இடங்களில் (இலாகா துணைத் தபாலாபீசுகள் நீங்கலாக) எப்பொழுது வேண்டுமானாலும் சமர்ப்பித்துக் கொள்ளலாம். அக்கோரிக்கையை இந்திய ரிசர்வ் பாங்க் (Reserve Bank of India) அனுமதித்த பின்னர், பத்திரம் சமர்ப்பிக்கப்பட்ட அலுவலகத்தில் அன்னாருக்குப் பரிசுத் தொகை கொடுக்கப்படுவதுடன் பத்திரமும் திருப்பிக் கொடுக்கப்படும்.

பத்திரப் பணம் திருப்பித்தரும் தேதி

தற்போதைய பரிசுப் பத்திரத் தொகுதிகள் 1965-ம் ஆண்டு ஏப்ரல் 1-ம் தேதியில் கால நிறைவடைகின்றன. அத்தேதியிலிருந்து, இப்பத்திரங்களை, அரசாங்க கஜானா அலுவல் நடத்தும் இந்திய ரிசர்வ் பாங்கின், இந்தியக் கிளை அலுவலகங்கள், அல்லது அரசாங்க கஜானா அலுவல் நடத்தும் வேறு ஏஜென்ஸி பாங்குகள், இந்தியாவிலுள்ள கஜானாக்கள், கிளைக் கஜானாக்கள் அல்லது இது விஷயத்தில் அதிகாரமளிக்கப்பட்டுள்ள தபால் நிலையங்கள் ஆகியவைகளில் இப் பத்திரங்களைக் கொடுத்து ஈடான தொகையைத் திருப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

மக்களின் ஒத்துழைப்பு நாட்டுக்குத் தேவை

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் என்பது மகத்தான தொரு காரியமாகும். மிகப் பெரிய பொறுப்புக்கள் நம்மை எதிர் நோக்கியுள்ளன. அரசாங்கம் இதில் முழு மூச்சுடன் இறங்கி வேலை செய்தால் மட்டும் போதாது. மக்களின் தீவிர ஒத்துழைப்பும் இந்த மகத்தான பணிக்கு அவசியம் தேவை. இந்த மாநிலத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். மக்களின் வாழ்வில் மகிழ்ச்சியும், மன நிறைவும் நிலை பெற வேண்டியே ஐந்தாண்டுத் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

இந்தப் பெரும் பணியிலே, மக்கள் தன்னலத்தை உதறி எறிந்துவிட்டு, சேவை மனப் பான்மையுடனும், தொண்டுள்ளத்துடனும் பணியாற்ற முன் வர வேண்டும். இந்த வகையில் மக்களின் பங்காக, சிறு சேமிப்புத் துறையில் அவர்கள் காட்டுகின்ற ஆர்வத்தையும், ஒத்துழைப்பையும் அரசாங்கம் பெரிதும் நம்பியிருக்கிறது. சிறு சேமிப்பு முறைகளில் பரிசுப் பத்திரங்களை வாங்குவதும் ஒன்றாகும். பரிசுப் பத்திரங்களை வாங்குவதால் மக்களின் பணம் சேர்த்து வைக்கப்படுகிறது. பரிசு பெறவும் வாய்ப்பு இருக்கின்றது. மேலும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றி வைக்கும் நல்ல பணியில் ஈடுபட்டு, நாட்டிற்கு நேரடியாக உதவி செய்கின்ற நல்வாய்ப்பும் மக்களுக்குக் கிடைக்கிறது.

தமிழ்நாட்டில் நான்காவது பரிசுப் பத்திரக் குலுக்கல்

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ள பல்வேறு வேலைத் திட்டங்களை நிறைவேற்றப் பணம் வேண்டும். பரிசுப் பத்திரங்கள் அரசாங்கத்துக்கு, இத்துறையில் ஓரளவு பணவுதவி அளிக்கின்ற ஓர் அம்சமாகும்.

தமிழ் நாட்டைப் பொருத்த வரையில், ஐந்துவகைத் தொகுதிப் பத்திரங்கள் அனைத்தும் தமிழ்நாடு அரசாங்கத்தாரால் ஒன்றாக முதலில் வாங்கப்பட்டு பின்பு அவை மக்களிடம் விற்கப்பட்டன. இந்த ஐந்து வகையில் அடங்கிய பரிசுப்பத்திரங்களின் குலுக்கல் 1-ம் தேதி ஜூன் மாதம் 1961-ம் ஆண்டு அன்று சென்னையில் நடைபெற்றது. இவ்வைந்து தொகுதியில் விற்கப்பட்ட பத்திரங்களைக் குலுக்கியதில்—பரிசுபெற்ற பத்திரங்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. (பரிசு பெற்றோர் விவரங்கள் முன்னரே பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன). பொதுவாக இப்பரிசு பெற்றவர்களுக்குப் பரிசுப் பணமளிக்கச் சற்று காலதாமதம் ஆகத்தான் செய்யும். தமிழ்நாடு அரசாங்கம் கால தாமதத்தை தவிர்க்க

[6-ம் பக்கம் பார்க்க]

மரங்கள்--நாட்டின் செல்வம்

பிரதமரின் வேண்டுகோள்

“ஆண்டு முழுதும் நாம் மரங்கள் நடுதலை, ஒரு முக்கிய கடமையாகக் கொள்ள வேண்டும். ஜூலை 1 முதல் 7-ம் தேதிவரையில் வனமகோத்சவ வாரமாகக் கொண்டாடப்படுகிறது. இந்த நல்ல தருணத்தை, மரங்களைப் பெருமளவில் நடுதல் மூலம் நாம் வெகுவாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மரங்களை நட்டால் மட்டும் போதாது. அவைகளைப் பாதுகாத்து, அவை அழிந்து போய்விடாமல் பராமரிக்க வேண்டியது மிகவும் அவசியம். சிறு குழந்தைகளை எவ்வளவு அன்புடனும், கனிவுடனும், கவனித்துப் போஷித்து வளர்க்கிறோமோ, அதேபோன்று, அன்புடனும், கனிவுடனும் சிறு சிறு செடிகளையும் பாதுகாத்துப் பராமரிக்கின்ற மனப்பான்மை நம்மிடையே வளரவேண்டும்.”

“மூன்றாண்டுகளுக்குப் பிறகு நான் மணலிக்கு வந்து பத்து தினங்கள் தங்கியுள்ளேன். தியோடர் பாலைவனத்தின் எல்லையில் ஒரு சிறு குடிசையில் நான் வாழ்ந்தேன். வானளாவிய கம்பீரமான மரங்கள் அடங்கியுள்ள இந்தச் சூழ் நிலையில், நான் இத்தனை தினங்கள் இருந்தது எனக்குப்பெருத்த நன்மையை விளைத்துள்ளது.”

“நாம் ஏன் நல்ல மரங்களை நட்டு வளர்க்க வேண்டுமென்பதற்குப் பல காரணங்களைக் கூறலாம். பொருளாதார அடிப்படையில் அவை நமக்குத் தேவையாக இருக்கின்றன. அத்துடன், மண் வளத்தைக் காப்பாற்றித் தருகின்றன. ஆனால், நான் மரங்களை விரும்பிப் போற்றுவது இந்தக் காரணங்களுக்காக மட்டுமல்ல ; எல்லாவற்றிற்கும் மேலாக, அவைகளை, நான், மனித உணர்ச்சியின் அடிப் படையில் பார்க்கிறேன். அவை எனக்கு நண்பர்களாகத் தென்படுகின்றன; அவை என் இதயத்திற்கு ஓர் ஆறுதலையும் அமைதியையும் அளிக்கின்றன.”

“இந்திய மக்கள், மரங்களைத் தங்களுடைய நண்பர்களாகக் கருதி, அவைகளைப் பெருவாரியாக நட்டு, பெருக்குவார்கள் என நான் நம்புகிறேன். அது தான் என் ஆசையும் கூட. ஒரு மரத்தை வெட்டி எறிந்து விடுவது மிகவும் சுலபம். ஆனால் அதை நட்டுப் பராமரித்து, பெரிய மரமாக ஆக்க எவ்வளவு காலம் பிடிக்கிறது !.

குறிப்பாக, கல்லூரியிலும், பள்ளிச் சாலைகளிலும் பயிலும் நம் மாணவ, மாணவிகள் மரங்களை நட்டு, பராமரிக்கும் வேலையில் மிகுந்த ஆர்வம் கொள்ளவேண்டுமென்று நான் மனப்பூர்வமாக விரும்புகிறேன். அதேபோல், நமது பஞ்சாயத்து ஸ்தாபனங்களும், மற்ற நிறுவனங்களும், இந்த மரம் நடும் வேலையில் அக்கறையுடன் ஈடு பட வேண்டும். மரங்களை நட்டு வளர்த்தால், அவை நம் பள்ளிச்சாலைகளுக்கும், பஞ்சாயத்துப் பிரதேசங்களுக்கும் ஒரு தனி அழகை அளித்துச் சோபையுடன் மிளிரச்செய்யும். நாம் மரங்களிடமிருந்து ஆதாயம் பெறுவதோடு, அவைகளிடமிருந்து பல விஷயங்களையும் அறிந்து கொள்ளலாம்.”

(வனமகோத்ஸவ வாரத்தை முன்னிட்டு பிரதமர் நேரு விடுத்த செய்தியின் சாரம்.)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டி, இந்தத் தடவை அதற்கான விசேஷ ஏற்பாடுகள் செய்தது. இந்த ஏற்பாடுகளினால் நல்ல பயன் விளைந்துள்ளது. மேலும் பரிசு பெற்றோர் யார் யார் என்று கண்டு பிடிப்பது எளிதாக இருந்தது. 30-ம் தேதி ஜூன் மாதம் 1961-ம் ஆண்டுக்குள் பரிசுகளை வழங்கிவிடவேண்டும் என்று உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

பரிசுபெற்ற அதிர்ஷ்டசாலிகளை வாசகர்களுக்கு அறிவிப்பதில் **கிராமநலம்** பெருமகிழ்ச்சி அடைகிறது.

மதுரையில் முதற் பரிசு 7,500 ரூபாய் பெற்றவர் திண்டுக்கல் தாலூகா ஆவாரம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. எம். சங்கரன். இவருக்குப் பரிசுப்பத்திரம் வாங்க பணம், அவருடைய தாய் கூலிவேலை செய்து சம்பாதித்த பணத்திலிருந்து கொடுத்தார். திரு. சங்கரன் அவர்களுக்கு சொந்தமாக $1\frac{1}{2}$ ஏகர் நிலம்தான் இருக்கிறது. கிடைத்த பரிசுப் பணத்திலிருந்து அதிர்ஷ்டக்காரராகிய அவர், நிலம் வாங்கவும், தன் மனையைத் திருத்தி அமைக்கவும் உத்தேசித்துள்ளாராம்.

சேலம் மாவட்டம் பாண்ட மங்கலம் கிராமத்தைச் சேர்ந்த, 26 வயதுடைய சட்டக் கல்லூரி மாணவராகிய திரு. எஸ். எம். சுப்பிரமணியம் முதற்பரிசு 7,500 ரூபாயைத் தட்டிக் கொண்டு போய்விட்டார். தஞ்சையில் சீர்காழி தாலூகா வைத்தீஸ்வரன் கோயிலைச் சேர்ந்த வேலூர் தேவஸ்தானத்துக்கு முதற்பரிசு கிடைத்திருக்கிறது.

மாவட்டத் தலை நகரங்களில் பரிசு வழங்கும் விழாக்கள் கொண்டாடப்பட்டன. [படங்கள் 25-ம் பக்கம் பார்க்க]

பொது மக்கள் பரிசுப் பத்திரங்களை மேலும் மேலும் வாங்கி அரசாங்கத்துக்கு நல்லதொரு உறுதுணையாக இருக்க வேண்டும். சிறுதுளி பெரு வெள்ளம் ஆகும் அல்லவா?

குடும்பக் கட்டுப்பாடு பயிற்சி நிறுவனம்

தமிழ் நாட்டிலுள்ள பிராந்திய குடும்பக் கட்டுப்பாடு பயிற்சி நிலையத்தை (Regional Family Planing Centre), குடும்ப கட்டுப்பாடுபயிற்சி நிறுவனமாக(Training Institute) தரம் உயர்த்த இந்திய அரசாங்கம் அனுமதித்துள்ளது. புதிய வான் ஒன்று வழங்கப்படும் வரை, சென்னை நகரில், குடும்பக் கட்டுப்பாடு பிரசாரத்துக்காக ரூ. 25,000 பெறுமானமுள்ள ஸ்டேஷன் வாகனைப் பயன்படுத்திக்கொள்ளவும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

டாக்டர்களுக்கு சுமார் 4 வார காலத்துக்கும், சமூக ஊழியர்களுக்கும் (Social worker) சுகாதாரப் பார்வையாளர்களுக்கும் (Health visitor) 6 வார காலத்துக்கும் குடும்பக் கட்டுப்பாடு முறைகளில் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படும். ஒவ்வொரு கோஷ்டியிலும் 20 பயிற்சியாளர்கள் இருப்பார்கள். இந்த ஏற்பாட்டின் மூலம், ஒவ்வொரு நிலையத்திலும் வருடம் ஒன்றுக்கு 100 பேர் [illegible] டாக்டர்கள், 70 சமூக ஊழியர்களும், சுகாதாரப் [illegible]யாளர்களும்) பயிற்சி பெறுவார்கள்.

கிராம வாசியின் வீரச் செயலுக்குப் பரிசளிப்பு

வட ஆர்க்காடு மாவட்டம், திருப்பத்தூர் தாலூகா, காட்டேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. கரிய கௌண்டரின் மகன் திரு. கே. டி. கண்ணன் என்பவர், 1960-ம௵ செப்டெம்பர்மீ 15௳ அன்று நண்பகல் தன்னந்தனியாக ஒரு சிறுத்தையை எதிர்த்துப் போராடிக் கொன்று, தனது கிராமத்தைச் சேர்ந்த மூன்று நபர்களைக் காப்பாற்றியிருக்கிறார். இதற்காக அவருக்கு ரூ. 100 பரிசளிக்க அரசாங்கம் அனுமதித்துள்ளது. கொல்லப்பட்டது ஆண் சிறுத்தை; நான்கடி நீளமும், மூன்றடி உயரமும், உள்ளது. அது, சுற்றுப்புரங்களிலிருந்து கால்நடைகளைத் தூக்கிச் சென்றதாகவும், அப்பிரதேசத்தில் பீதியை ஏற்படுத்தி வந்ததாகவும் சொல்லப்படுகிறது. சிறுத்தையுடன் போராடிய திரு. கண்ணன் படுகாயமடைந்தார். இப்பொழுது அவர் தேறியுள்ளபோதிலும், அவரது இடக்கை ஆள்காட்டி விரல் இன்னமும் மடக்க முடியாதபடி உணர்ச்சியற்றிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

அந்தக் கிராம மக்களின் வேண்டுகோளைப் பரிசீலனை செய்து பார்த்த அரசாங்கம், மூன்று கிராமவாசிகளைக் காப்பாற்றித் தனது உயிரை லட்சியம் செய்யாத அவரது வீரச் செயலையும், சிறுத்தையை எதிர்த்துப் போராடிக் கொன்ற அசாதாரணத் துணிச்சலையும் பாராட்டுகிறது. இந்த வீரச் செயல் பாராட்டத் தக்கது என்றும், பரிசளித்துப் புகழத்தக்கது என்றும் எண்ணுகிறது. பரிசுப் பணமான ரூ. 100, பரிசுப் பத்திரமாக வழங்கப்படும். அதைத் தவிர ரூ. 40 மதிப்புள்ள ஒரு வெள்ளிப் பதக்கமும் அளிக்கப்படும். இப்பரிசை வட ஆர்க்காடு மாவட்டக் கலெக்டர், பொது மக்களின் முன்னிலையில் நடத்தப்படும் ஒரு விழாவில் வழங்குவார்.

பாலாறு படுகை விதிகள் தளர்த்தப்படுகின்றன

பாலாறு படுகை விதிகளைத் தளர்த்தி அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. பாலாறு படுகையில் உள்ள நிலங்களுக்குப் பாசனம் அளிக்கும் பொருட்டுப் புதிய கிணறுகளை எடுத்துக் கொள்ள அனுமதித்துள்ளது. ஆனால், அந்தக் கிணறுகள் கால்வாய்களின் தலையூற்றுக்களிலிருந்து இரண்டு பர்லாங்கு தொலைவிலும், ஊற்றுக் கால்வாயிலிருந்து ஒரு பர்லாங்கு தொலைவிலும் இருக்க வேண்டும்; நிலத்தின், பதிவு செய்யப்பட்ட தரப்பாகுபாடுகளுக்கு ஏற்ற வகையில், ஒரு போக நஞ்செய், இரு போக நஞ்செய், புஞ்செய்ப் பயிர்களைப் பயிரிட வேண்டும்.

அமைக்கப்படும் மின்சாரப் பம்பு செட்டுகள் ஒவ்வொன்றும் 5 குதிரையோட்டத்துக்கு மேற்பட்டதாக இருக்கக் கூடாது என்றும் அரசாங்கம் உத்திரவிட்டுள்ளது. ஐந்தாண்டுகளுக்கு விதிகள் தளர்த்தப்பட்டுள்ளன.

கதர்ப் பொருளாதாரம்

(திரு. வெ. பரஞ்சோதி, எம். ஏ.)

ஏழு லட்சம் கிராமங்களைக் கொண்ட இப்பரந்த பாரதத்தின் ஜீவநாடி கிராமந்தான். கிராம மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர். நபர் ஒன்றுக்கு சராசரி 1.3 ஏக்கர் நிலம்தான் உள்ளது. விவசாய வேலை வருடத்தில் ஆறு மாதங்கள் நடைபெறும். வேறு எவ்விதத் தொழில் வாய்ப்பும், வசதியுமில்லாத காரணத்தால் ஆறு மாத காலத்தை வீணில் கழிக்கின்றனர் கிராம மக்கள். இந்த அவல நிலைமையைப் போக்கி, கிராம மக்களுக்கு வருவாயும், தன்னம்பிக்கையும் அளிக்க வல்லது கதர்த் தொழில்தான். இந்த இரகசியத்தை அறிந்த நமது தேசப் பிதா அண்ணல் காந்தியடிகள் கதர்த் திட்டத்தை நமக்கு அளித்துச் சென்றுள்ளார்கள். சுதந்திர இந்தியாவில் கதருக்கு ஒரு சிறந்த இடம் உண்டு.

கதர்த் திட்டத்தை அகில பாரத சர்வ சேவா சங்கமும், அகில இந்திய கதர், கிராமக் கைத் தொழில் குழுவும், ஏனைய தனியார் அமைப்புகளும் ஏற்று நடத்தி வருகின்றன. சென்னை மாநிலத்திற்கு ஒரு தனிச் சிறப்பு என்னவென்றல் முதன் முதலில் இம்மாநிலத்தில்தான் கதர் இலாகா என்ற அரசினர் பகுதி, கதர்த் திட்டத்தை ஏற்று, பணிபுரிந்து வருகிறது. இவ்வாண்டு "கதர்-கிராமத் தொழில் குழு" ஒன்று நிறுவப்பட்டு கதர்த் திட்டத்தைத் தீவிரப்படுத்தி வருகின்றது. ஐந்து லட்சம் மக்கள் இம் மாநிலத்தில் கதர்த் திட்டத்தால் பயன் அடைகின்றனர்.

கதர்த் திட்டத்தில், பொருளாதாரக் கருத்துக்கள் நிறைந்து இருக்கின்றன. வேலையில்லா நிலையைப்போக்கி, கிராம மக்களின் வருவாயை அதிகப்படுத்தி, கிராம அமைப்பில், அமைதியையும், பொருளாதார வலுவையுமளிக்க வல்லது கதர்ப் பொருளாதார தத்துவந்தான். "விஞ்ஞானம் விஞ்ஞானமாகக் கருதப்பட உடல், உள்ளம், ஆத்துமா ஆகிய மூன்றின் பசியினைப் போக்கும் திறன் பெற்றிருக்க வேண்டும்" என்று 1937-ம் ஆண்டு அண்ணல் காந்தியடிகள் கூறினர். உச்சக்கட்ட மாநாடுகள் நடக்கும் இக் காலத்தில், காந்தியடிகளின் இந்த விளக்கத்தை உலக மக்களும், வல்லரசுகளும் புரிந்து கொள்வது அவசியமாகும். "எப்போதும் வேலை வசதியினை உண்டுபண்ணுவதுதான் பொருளாதாரத் தத்துவத்தின் அடிப்படை நோக்கமாகும்" என்று மேனாட்டுப் பொருளாதார நிபுணர் வார்டுகின்ஸ் கூறும் கருத்தின் அடிப்படையில்தான் கதர்த் திட்டம் அமைந்துள்ளது.

கீழே கொடுக்கப்பட்டுள்ள புள்ளிவிவரங்கள் கதர்த் திட்டத்தின் சிறப்பினை எடுத்துக் கூறுகின்றன:

இந்தியாவின் மக்கள் தொகை 38 கோடி.

கிராம மக்களின் எண்ணிக்கை—31.5 கோடி.

தேசிய சராசரி வருமானம்—ரூபாய் 284

கிராம சராசரி வருமானம்—ரூபாய் 104

பலகோடி மக்கள், ரூபாய் 104-க்கும் குறைவான வருட வருமானம் உள்ளவர்களாக இருக்கின்றனர். 20 கோடி மக்கள், நாள் ஒன்றுக்கு, எட்டு அணவுக்கும் குறைந்த வருமானத்தில் வாழ்கின்றனர். கிராம மக்களின் பொருளாதார சீர்கேட்டினை இப்புள்ளி விவரங்கள் எடுத்துரைக்கின்றன. இந்த வருந்தத்தக்க நிலைக்கு, தக்க வருவாயளிக்கும் தொழில் வாய்ப்பு அளிக்காதது தான் காரணம் இதனைக் கீழே சொல்லி யுள்ள புள்ளி விவரம் எடுத்துக்காட்டுகின்றது.

இரண்டு கோடி மக்கள் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் அல்லது அதற்கும் குறைந்த நேரம் உழைக்கின்றனர்.

ஏழு கோடி மக்கள் ஒரு நாளுக்கு இரண்டு மணி நேரம் அல்லது அதற்கும் குறைந்த நேரம் உழைக்கின்றனர்.

ஐந்து கோடி மக்கள் ஒரு நாளுக்கு நான்கு மணி நேரம் அல்லது அதற்கும் குறைந்த நேரம் உழைக்கின்றனர்.

இந்த நிலையில் கதர்த் தொழில் நல்லதொரு பலனை அளிக்கின்றது. இந்தியா முழுவதிலும் 15 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கதர்த் திட்டத்தால் வாழ்கின்றனர். வருடந்தோறும் 13 கோடி ரூபாய் பெறுமானமுள்ள கதர் உற்பத்தி செய்யப்படுகின்றது.

ராட்டையால் நூற்பது மிகவும் எளிது. தொழில் நுட்பம் (Technical knowledge) எதுவும் தேவையில்லை. கிராமப் பகுதியில் கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு ராட்டையை உற்பத்தி செய்யலாம். இதன் விலையும் ஏழை மக்களின் திறனுக்கு அப்பாற்பட்டதல்ல. தொழில் அமைப்பு (Location of Industries) முறையின் அம்சத்திற்கு இது ஒத்துள்ளது.

எந்தப் பொருளாதார அமைப்பிலும், இந்த மனித உணர்வு மிக அவசியமாகும். கதர்ப் பொருளாதாரத்தில் இது தெளிவாகக் காணப்படுகின்றது. ஒரு ரூபாய்க்கு கதர்த்துணி வாங்கினல் 68ந.பை., நூற்பவர், நெசவாளர், இதர தொழிலாளர்களுக்குச் சேர்கின்றது. அதே பணத்திற்கு மில் துணி வாங்கினல் தொழிலாளர்களுக்குச் சேரும் தொகை 4 நயா பைசாதான். மீதிப் பகுதி முதலாளி, இடைத் தரகர்கள் முதலான பணமிக்கவர்களிடம் போய்ச் சேருகின்றது. ஒரு குறிப்பிட்ட வகுப்

பாரிடம் பொருள் குவிவதைத் தடுக்கும் முறையில் எத் திட்டமும் அமைய வேண்டும். இம்முறையில் கதர்த் திட்டம் அமைந்துள்ளது.

இந்தியாவைப் போன்ற நாட்டில் மனித சக்தியை உற்பத்தி முறையில் உபயோகிப்பது அறிவுடைமையாகும்.

ஒரு இந்தியனின் சராசரி உழைப்புத் திறனை – குதிரை சக்தி (Horse power) என்று பொருளாதார நிபுணர்கள் கணக்கிட்டுள்ளனர். கதர், மனித சக்தியை நல் வழிப்படுத்தும் சிறந்த தொழிலாக உள்ளது. கோவை மாவட்டத்தைச் சேர்ந்த கன்மலையம்பட்டியில் எவ்வித வருவாயுமின்றி வருந்திய 200 குடும்பங்கள் இருந்தன. மக்கள் எண்ணிக்கை ஆயிரத்துக்கு மேல் இருக்கும். தற்போது 20 அம்பர் ராட்டைகளும், 250 கிசான் முதலான ராட்டைகளும் இங்கு இயங்குகின்றன. ஆண்டொன்றுக்கு 45,000 சிட்டம் அம்பர் நூலும், 36,000 சிட்டம் கிசான் ராட்டை நூலும் உற்பத்தியாகின்றன. நூற்பு மூலம் ஆண்டொன்றுக்கு ரூபாய் 12 ஆயிரம் வருமானம் கிடைக்கிறது. நடைமுறையில், கதரியக்கம் எவ்வாறு கிராம நலனை வளப்படுத்துகின்றது என்பதை மேலே கண்ட விவரம் தெளிவாக எடுத்துக் கூறுகிறது.

தென் இந்தியாவில் ஆலைத் தொழிலின் இருப்பிடமான கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள 50 ஆலைகளில் (நூற்பு, நெசவு) 45,000 தொழிலாளருக்குத்தான் வேலையளிக்க முடிகின்றது. ஆனால் இம்மாவட்டத்தில் ஒரு லட்சத்திற்கு அதிகமான மக்கள் கதர்த்தொழிலின் மூலம் வாழ்கின்றனர் என்ற விவரம், பரவல் முறையில் உற்பத்தியும், விநியோகமும் நடைபெறவேண்டுமென்ற உண்மையைப் புலப்படுத்துகின்றது.

"கைத்தொழில் காத்திடும் ஒரு நாடே
கலகம் குறைந்துள திருநாடாம்;
எத்தனைக் கெத்தனை எந்திரமோ
அத்தனைக் கத்தனை தொந்தரவே" என்னும்

நாமக்கல் கவிஞரின் பாடல் சிறந்த கருத்தினை வெளியிடுகிறது. இந்திய நாடு விவசாய நாடாக இருக்கும் வரை கதர்த் தொழிலுக்கு இடமுண்டு. கதரை நாட்டினர் நலன் விழையும் யாவரும் ஆதரிக்க வேண்டும்.

அங்கவீனமுற்ற குழந்தைகளுக்கு உபகாரச் சம்பளம்

குருடாகவும் செவிடாகவும், மற்றும் அங்கஹீனமுற்றும் உள்ள குழந்தைகளுக்கு 1961–62–ல் உபகாரச் சம்பளங்கள் சம்பந்தமாக, விண்ணப்பப் பாரங்களை, கல்வித் துறை நெறியாளர், சென்னை 6, என்ற முகவரியிலிருந்து பெறலாம். மனுச் செய்ய விரும்பும் மாணவர்கள், கல்வித் துறை நெறியாளரிடமிருந்து மனுப் பாரங்களைப் பெற்று, மனுப் பாரங்களை அவர் மூலமாக அனுப்ப வேண்டும்.

பசி தீருமா?

கவிஞர் மின்னூர் சீனிவாசன் எம், ஏ.

பள்ளிக்குச் செல்வதென்றால்
பாரதப் புதல்வரெல்லாம்
துள்ளித்தான் போவார், ஆனால்
துளைக்கின்ற ஏழ்மை, வாழ்வைக்
கிள்ளிக் கொண்டிருப்பதாலே
கிளர்ந்தெழும் ஆசையெல்லாம்
வெள்ளத்தில் அடித்துச் செல்லும்
வெல்லம் போல் கரைந்து போகும்!

வேளைக்குக் கூழில்லாமல்
விழித்திடும் சிறுவர் தம்மை
நாளைக்கு நாடுதன்னை
நடத்துவோர் என்று போற்றி
நீளப் பேசிடுவோர்க்கு ஓர்சொல்
நிகழ்த்துவேன், "வறுமை என்னும்
தேளுக்குப் பதில் சொல்வீரோ?
சிறுவர் தம் பசி தீர்ப்பீரோ?"

அன்ன சத்திரங்கள் வைத்துச்
சலியாமல் அறங்கள் செய்வோர்
சின்னஞ் சிறார் தமக்கும்
செய்கவே அறங்கள் கோடி!
அன்னை நாடளிக்கும் இந்த
அரும்புகள், எதிர் காலத்தின்
மன்னராய்ச் சீர்பெற்றோங்க
மறவாது புரிக தொண்டு!

நிரம்பிய ஆர்வத்தோடும்
நிரம்பாத வயிற்றினோடும்
விரும்பியே பள்ளி செல்லும்
சிறுவர் தம் விழி நீர் போக்கப்
புரிந்திடும் பணியால், நானை
பூத்திடும் புதிய வையம்;
எரிந்திடும் மடமைக் குப்பை!
எழுந்திடும் அறிவுத் தென்றல்!

பருவத்தே பயிர் செய்தாற் போல்
பள்ளிக்குச் செல்லும் அன்பின்
உருவங்கள், கலைகள் கல்வி
ஓயாது கற்க வேண்டி
நிறுவுக அறக் கூழ்ச் சாலை!
நிலவிடும் பசியாம் பேயின்
உருவமே அற்றுப்போக
உலகோரே தொண்டு செய்வீர்!

கிராம அபிவிருத்திக் கமிஷனரின் கடிதப் பேச்சு:

"ஊருக்கு நல்லது சொல்வேன்" (பாரதியார்)

பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு

அன்புள்ள பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு,

வணக்கம். எனக்கு உடல் நலமில்லாமலிருந்ததால், சென்ற ஒரு மாதமாக "லீவில்" இருந்தேன். எனவே, "கிராம நலம்" மூலம், உங்களுடன் பேசுவதற்கு, எனக்கு வாய்ப்பு இல்லை. ஆண்டவன் அருளால், திரும்பவும் வேலையில் சேர்ந்து, உங்களுடன் பேசுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

பஞ்சாயத்துத் தலைவர்களும் உபதலைவர்களும், பஞ்சாயத்துச் சட்டத்திலுள்ள விதிகளை, நன்ருகத் தெரிந்துகொண்டு, செயலாற்றுவதற்கு வேண்டிய ஆர்வத்தையும், ஆற்றலையும் தருவதற்காக, ஒரு பயிற்சி முகாம் நடத்த வேண்டுமென்பது, சர்க்காரின் நோக்க மாக இருந்து வருகிறது. இந்தப் பயிற்சி முகாம், எத்தனை நாட்களுக்கு நடைபெற வேண்டும், இரண்டு நாட்கள் போதுமா, நான்கைந்து நாட்கள் வேண்டி யிருக்குமா என்பதைப் பற்றியும், யோசித்து வருகிறோம். இந்தப் பயிற்சியில் என்னென்ன விஷயங்களை, எந்தெந்த முறையில், யார்யாரைக் கொண்டு சொல்ல வைப்பது என்பவற்றைப் பற்றியும், சிந்தித்து வருகிறோம்.

பஞ்சாயத்தினுடைய வரவு செலவு இனங்களைப்பற்றி, பஞ்சாயத்துத் தலைவர்கள், நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான், பஞ்சாயத்து ஆட்சியை நல்ல முறையில் நடைபெறச் செய்ய இயலும். எந்தெந்த இனங்களின் மூலம், பஞ்சாயத்துக்களுக்கு வருமானம் வருகிறது என்பது, பஞ்சாயத்துத் தலைவர்களுக்குத் திட்ட வட்டமாகத் தெரிய வேண்டும். இன்னும் எந்தெந்த வழிகளில் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ளலாம் என்பதைப்பற்றியும் தெரிந்திருந்தால், பஞ்சாயத்து, நல்ல முறையில் நடைபெறுவதற்கு உதவியாகவிருக்கும். செலவினங்களில், எதை எதை, எவ்வளவு எவ்வளவு குறைக்கலாம் என்பதைப்பற்றியும், தெரிந்துகொள்ள வேண்டும். ஒரு குடும்பமோ, ஸ்தாபனமோ அல்லது சர்க்காரோ, தம் வரவு இனங்களைப் பெருக்குவதற்கும், செலவு இனங்களைக் குறைப்பதற்கும் செய்ய வேண்டிய வழிவகைகளைத் தெரிந்துகொண்டால், அத்தகைய குடும்பமோ, அல்லது பொது நிர்வாகமோ, மிகவும் நல்ல முறையில் நடைபெற்றுவரும் என்பதில் சந்தேக மில்லை.

இந்தக் கருத்தை, வள்ளுவப் பெருந்தகை, மிகவும் அழகாக, ஒரு திருக்குறளில் நமக்கு எடுத்துச் சொல்லி யிருக்கிருர். அந்தக் குறள் வருமாறு:—

"ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை,
போகாறு அகலாக் கடை."

அதாவது—பொருள் வரும் வழி (வருவாய்) சிறிதாக இருந்தாலும், போகும் வழி (செலவு) விரிவுபடாவிட்டால், அதனல் தீங்கு இல்லை. வருமானம் குறைவாயிருந் தாலும், பரவாயில்லை; செலவினம் அதிகமாகாமல் இருந்தால், போதும் என்பது கருத்து. அத்துடன் "வரு கின்ற வரு மானத்தை அதிகப்படுத்துவது எப்படி" என்பதைப்பற்றியும் நாம் ஆலோசிப்பது நல்லது.

கிராமத்தைச் சுற்றியுள்ள புறம்போக்கு நிலங் களனைத்தையும், சர்க்கார், பஞ்சாயத்துக்களிடம் ஒப் படைத்திருக்கிருர்கள். இந்தப் புறம்போக்கு நிலங்கள் எந்தெந்த இடங்களில், எத்தனை ஏக்கர், எத்தனை செண்டுகள் இருக்கின்றன என்பதைப் பஞ்சாயத்துத் தலைவர்கள், முதலில் நன்ருகத் தெரிந்துகொள்ள வேண்டும். இதற்குக் கிராமக் கர்ணங்கள் உதவி செய்ய வேண்டும் என்று, சர்க்கார் உத்தரவிட்டிருக்கிருர்கள். அவர்கள் உதவியைப்பெற்று, பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் நிலங்கள், எங்கெங்கே இருக் கின்றன என்பதை நன்ருகத் தெரிந்துகொண்டு, அந்த இடங்களையெல்லாம் எப்படியெப்படிப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதை, பஞ்சாயத்துத் தலைவர்களும், அங்கத்தினர்களும், ஊரிலுள்ள மற்ற பெரியவர்களும் சேர்ந்து ஆலோசித்து, அந்த நிலங்களிலிருந்து பஞ்சா யத்திற்கு நல்ல வருமானம் வரும்படிச் செய்யவேண்டும்.

சர்க்கார், பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைத்திருக்கும், எந்தப் புறம்போக்கு எந்த இடத்தில் இருக்கிறது என்பது தெரியாமலிருந்தால், அது பஞ்சாயத்துத் தலைவர்களுடைய குறையேயாகும். எனவே, தயவு செய்து, புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் படி, உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட புறம்போக்கு நிலங்கள், ஊரைச்சுற்றி எந்தெந்த இடங்களில், எத்தனை ஏக்கர்கள் இருக்கின்றன என்பதைப்பற்றி, நீங்கள் நன்ருகத் தெரிந்துகொள்ள வேண்டும்

என்பதே, என்னுடைய வேண்டுகோள். இதில், ஏதேனும் தடைகளிருந்தால், உங்கள் பஞ்சாயத்து யூனியன் கமிஷனரிடமும், உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து யூனியன் தலைவர்களிடமும் சொல்லுங்கள். உங்களைச் சந்திக்கும் மற்ற ரெவின்யூ அதிகாரிகளிடமும் இதைப்பற்றிக் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.

ஆண்டுதோறும் வருமானம் தரக்கூடியதும், நிலங்களுக்கு நல்ல உரமாக உபயோகப்படக்கூடியதுமான செடி, கொடி, தழைகள் முதலியவற்றை, எவ்வளவு பயிர் செய்ய முடியுமோ, அவ்வளவையும், பயிர் செய்வதற்கு ஏற்பாடு செய்யுங்கள். இன்னும், பல வருடங்களுக்குப் பிறகும் பயன் தரக்கூடிய பனை, தென்னை முதலிய மரங்களை வைத்து வளர்க்கப்பட வேண்டிய இடங்களைத் தேர்ந்தெடுத்து, அங்கே, பனை, தென்னை முதலிய மரங்களை வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள். பஞ்சாயத்திற்குச் சொந்தமான பனை மரங்களோ, தென்னை மரங்களோ இருந்தால், மரம் ஒன்றுக்கு, வருடத்திற்கு ரூபாய் 5-க்கு குறையாமல், அதனால் வருமானம் பெறலாம் என்று தெரிகிறது.

இந்தப் பனை மரங்களை வளர்க்க வேண்டிய முறையைப் பற்றி, அனுபவம் உள்ளவர்களை, இது விஷயமாகப் பஞ்சாயத்துக்களுக்கு ஆலோசனை சொல்ல வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். இது விவரங்களைப்பற்றி நன்கு அறிந்தவர்களைக்கொண்டு, நல்ல கட்டுரைகளை எழுதி, அவற்றைக் "கிராமநல"த்தில் பிரசுரிக்கவும் ஏற்பாடாகியிருக்கிறது.

சென்ற மே மாதத்திய "கிராம நலம்" பத்திரிகையில் மரங்கள் வளர்ப்பதைப்பற்றி என்னுடைய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். அதைப் படித்திருப்பீர்கள், அதைப்பற்றிச் சிந்தித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

இன்று, பாலைவனம் போலுள்ள ஊர்களெல்லாம், பஞ்சாயத்துக்கள் செய்யும் நல்ல முயற்சிகளின் மூலம், சோலைவனம் போல் ஆக வேண்டும் என்பதே, என்னுடைய ஆசை.

மற்ற விவரங்களைப்பற்றி, அடுத்த கடிதத்தில், உங்களுடன் பேசுகிறேன். என்னுடைய கடிதங்களைப் படித்துப் பார்த்து அவற்றில் உங்களுக்கு ஏதேனும் சந்தேகங்கள் ஏற்பட்டு, அவற்றைப்பற்றிய விவரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், நான்முன்பு குறிப்பிட்டிருப்பதுபோல, "கிராமநலம்" ஆசிரியருக்கு எழுதுங்கள். உங்கள் சந்தேகங்களுக்கான பதில்களை அவ்வப்போது "கிராமநல"த்திலேயே வெளியிட்டு வர ஏற்பாடு செய்திருக்கிறோம் என்பது, நீங்கள் அறிந்ததே.

"ஊரெல்லாம் ஒரு குடும்பம் ஆகவேண்டும்;
ஊரிலுள்ள பேரெல்லாம் ஒருமித்து உழைக்க வேண்டும்.
சீரான வாழ்வுக்குத் தேவையான, செல்வங்கள் அத்தனையும் சேர்க்க வேண்டும்;
மாறுத கூட்டுறவின் முறை வளர்ந்து, மக்களெல்லாம் இன்புற்று வாழ வேண்டும்."

என்ற பிரார்த்தனையுடன், இக் கடிதத்தை முடிக்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

கோ. வேங்கடாசலபதி.

[மகாத்மாவின் 'கிராமராஜ்யம்' என்ருல் என்ன? அதன் உட்கருத்து என்ன என்பதுபற்றி இந்த இதழில் கட்டுரை ஆசிரியர் விளக்குகிருர்].

கிராம ராஜ்யம்

அகமதாபாத்தில் குஜராத்தி சபை என்ற ஒரு சபை தோன்றி, இந்திய தேசிய காங்கிரஸின் கொள்கைகளைப் பரப்பி வந்தது. இதன் தலைவராக இருக்கும்படி 1917-ம் வருடத் தொடக்கத்தில் காந்தியடிகள் கேட்டுக்கொள்ளப்பட்டார். அடிகளாரும் ஒப்புக் கொண்டார். சபையின் தலைவர், செயலாளர் முதலியவர்களுடைய பெயர்களை குறிப்பிட்டுக்காட்டும் கடிதத் தாள்கள் (லெட்டர் பேப்பர்) வழக்கம்போல் அச்சடிக்கப்பட்டன. கடிதத்தாளின் இடப்பக்கத் தலைப்பில் "தலைவர்: மோகன தாஸ் கே. காந்தி—பார்—அட்—லா" என்று குறிக்கப்பட்டிருந்ததைக் காந்தியடிகள் பார்த்தார். செயலாளரை அழைத்து "என்னை ஏன் பார்-அட்-லா" என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார். "தாங்கள் பார்-அட்-லா" தானே? அப்படிக் குறிப்பிட்டதில் தவறு எதுமில்லையே" என்றுகூறினர் செயலாளர். "தவறில்லையானலும் சரியில்லை" என்ருர் காந்தியடிகள். செயலாளர் சிறிது திகைத்துப்போய், "அப்படியானல் என்னவென்று குறிப்பிடுவது?" என்று கேட்டார். இதற்குக் காந்தியடிகள் "நான் ஒரு விவசாயி, நெசவாளன். அப்படியே குறிப்பிடுங்கள்" என்று பதிலளித்தார். இதைக்கொண்டு காந்தியக் கொள்கைகளனைத்தும் எதை மையமாகக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் ஒருவாறு தெரிந்துகொள்ளலாம்.

உழைப்புக்கு உயர்ந்த ஸ்தானம்

உழவுத் தொழிலுக்கும் நெசவுத் தொழிலுக்கும் காந்தியடிகள் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துவந்தார் என்பதைப்பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை. பல சந்தர்ப்பங்களிலும் தம்மை ஒரு விவசாயி என்றும், தொழிலாளி என்றும் சொல்லிக்கொண்டு வந்திருக்கிருர். 1917-ம் வருடம் பீகார் மாகாணத்திலுள்ள சாம்பாரானில் விவசாயிகளின் விமோசனத்திற்காக ஒரு இயக்கம் தொடங்கியபோது, காந்தியடிகள், அநேக விவசாயிகளை நேருக்கு நேர் சந்தித்து அளவளாவும் வாய்ப்புப் பெற்ருர். அதைப்பற்றிக் கூறுகிறபோது "விவசாயிகளை நான் சந்தித்ததன் மூலமாக, தெய்வத்தையும், அகிம்ஸையையும், சத்தியத்தையும் நேருக்கு நேராகச் சந்தித்தேன் என்றே சொல்ல வேண்டும்" என்று குறிப்பிடுகிருர்.

ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியமான தேவைகள் இரண்டு. ஒன்று உணவு; மற்ரென்று உடை. இவ்விரண்டும் போதுமான அளவு கிடைத்துவிட்டால், அவன் வாழ்க்கையின் பல துறைகளிலும் தன் சக்தியைச் செலவழித்து அவற்றை வளம் பெறச் செய்ய முடியும். உண்பதும், உடுப்பதும் மட்டுமே வாழ்க்கையாகாதென்ருலும், உயிரோடு இருப்பதற்கும், மானத்தோடு உலவுவதற்கும் இவை யிரண்டும்—உணவும், உடையும்—தேவையல்லவா? ஒரு வண்டிக்கு இரண்டு அச்சாணிகள் போன்றவை இவை யென்று சொல்லலாம்.

கிராமங்கள் தன்னிறைவு பெற்றுத் திகழ....

தன்னுடைய இந்த இரண்டு அவசியமான தேவைகளை, ஒவ்வொரு மனிதனும் கூடியமட்டில் தானே நிறைவேற்றிக்கொள்ள முயலவேண்டும் என்பதே காந்தியடிகளின் கருத்து. இப்படிச் சொன்னதனல் நான்கு பேரோ ஐந்து பேரோ அடங்கிய ஒரு குடும்பத்தில், ஒவ்வொருவரும் தனித்தனியாக, பத்து அல்லது பதினைந்து சதுர அடி நிலத்தைப் பங்கிட்டுக்கொண்டு அதில் உழுது பயிரிட்டுச் சாப்பிட வேண்டும்; அப்படியே எட்டு அல்லது பத்து முழத் துணியை மட்டும் நெய்து உடுத்திக்கொள்ள வேண்டுமென்பது அர்த்தமில்லை. இது சாத்தியமுமன்று. அனுபவ சாத்தியமில்லாததைக் காந்தியடிகள் ஒரு போதும் கூறமாட்டார். ஒரு கிராமத்தைக் குறைந்த பட்ச அளவாகக் கொள்ள வேண்டுமென்பதே காந்தியடிகளின் உட்கருத்து. அதாவது, ஒரு கிராமத்தின் தேவைகளை, கூடிய மட்டில் அந்தக் கிராமவாசிகளே பூர்த்தி செய்துகொள்ளவேண்டும். தேவைகள் என்று சொன்னதனல், உணவு, உடை என்று மட்டும் அர்த்தப்படுத்திக்கொள்ளக்கூடாது. மனித வாழ்க்கை ஒழுங்குடையதாகவும், ஒழுக்கம் நிறைந்ததாகவும் இயங்க என்னென்ன சாதனங்கள் உண்டோ, என்னென்

னென்ன வசதிகள் தேவையோ, அவை யாவும் அந்தக் கிராம வாசிகளாலேயே தயாரித்துக்கொள்ளப்பட வேண்டும். தேவைப்படுகிற எல்லாச் சாதனங்களும் வசதிகளும் ஒவ்வொரு கிராமத்திலும் கிடைக்குமென்று சொல்ல முடியாது. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில், கிராமத்துக்குக் கிராமம் இந்தச் சாதனங்களையோ, வசதிகளையோ பரிவர்த்தனை செய்து கொள்ளலாம். இத்தகைய ஒரு பரந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தான், காந்தியடிகளின் கிராமப் புனர் நிர்மாணத் திட்டம் அமைந்துள்ளது. இதைப் போகப்போகப் பார்ப்போம்.

சுய தேவைப் பூர்த்திக்காக, ஒரு கிராமத்தை வன் குறைந்த பட்ச அளவாகக் கொள்ள வேண்டும்? கிராம வாழ்க்கைக்கு முக்கியத்துவமும் புனிதத்தன்மையும் கொடுத்து காந்தியடிகள் பேசி வந்ததன் நோக்கம் யாது? இவை நியாயமான கேள்விகளே. காந்தியடிகள், இவைகளுக்குப் பல தடவைகளில் பல மாதிரிக் காரணங்களுடன் பதில் சொல்லியிருக்கிறார். அவற்றின் சாரம் என்ன?

கிராமம்—நாகரிகத்தின் அச்சாணி

இந்தியா ஒரு விவசாயநாடு. உழுதுதுண்டு வாழ்கின்றவர்களே உண்மையான வாழ்க்கையை நடத்துகின்றவர்கள் என்ற கொள்கை நெடுங்காலமாக நிலவி வந்திருக்கின்றது. இந்தக் கொள்கையையொட்டியே நமது பழக்க வழக்கங்கள், ஆசார அனுஷ்டானங்கள் ஆகிய பலவும் வளர்ந்து வந்திருக்கின்றன. வளர்வதற்கேற்ற இடமாய் அமைந்தது கிராமம். இதனாலேயே கிராம வாழ்க்கையைப் பெருமைப் படுத்திப் பேசினர் நமது முன்னோர்.

பொதுவாக, இந்தியாவின் நாகரீகத்தை கிராம நாகரீக மென்றே சொல்ல வேண்டும். உண்மையில், கிராம வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டே இந்திய நாகரிகம் அமைந்து வளர்ந்து வந்திருக்கின்றது. நம்முடைய நாகரிக வாழ்க்கை, கலை, உணர்ச்சி, வாழ்க்கைக்கு வழி காட்டிக் கொடுக்கும் நூல்களைப் பற்றிய அறிவு, சிறந்த தத்துவங்கள், கோட்பாடுகள் முதலியன, உயர்ந்த எண்ணங்களில் நமக்கு இயற்கையாக ஏற்பட்டிருக்கும் ஈடுபாடு, இவையெல்லாம் எங்கிருந்து பிறந்தன? ஆரவாரமில்லாத காடுகளிலிருந்தும், அமைதியான குடிசைகளிலிருந்தும், பகட்டும் போலித்தனமும் இல்லாத கிராமங்களிலிருந்தும் பிறந்தன ; பிறகு தான் நகரங்களுக்குப் பரவின. ஓர் அறிஞர் கூறுகிற மாதிரி, 'சந்தடியில்லாத அமைதியான கிராமாந்திரங்களில் இருந்த ரிஷிகளின் மூளைகள்தான், ஆழ்ந்த அறிவுக்கும் அழகான உணர்ச்சிகளுக்கும் ஊற்றுக்கண்களாயிருந்தன. இராமாயணம், மகாபாரதம் முதலான சிரஞ்சீவிகளான காவியங்கள், சர்வகலாசாலையில் தேறிய பட்டதாரிகளாலும், இலக்கண இலக்கியப் புலவர்களாலும் இயற்றப்பட்டவையல்ல. அஜெந்தா குகைச் சித்திரங்கள் இக்காலத்துச் சித்திரக் காட்சி சாலைகளின் தலைவர்களால் தீட்டப்பட்டனவல்லவே ! அந்த அற்புதமான சிற்பங்களையும், ஓவியங்களையும் படைத்த கலைஞர்கள், தங்கள் பெருமையையும், தங்கள் பெயரையும் கூட, பிற்காலச் சந்ததியார் அறியும்படி எழுதிவைத்து விட்டுப் போக நினைக்கவில்லை. தவிர,அவர்கள், கலை இன்பத்துக்காக கலையா? அல்லது வாழ்க்கைக்காக கலையா? என்று வாதம் செய்து கொண்டிருக்க வில்லை. அவர்களுக்கு வாழ்க்கையே மிகச் சிறந்த கலையாக இருந்தது."

வழி வழியாக வந்து கொண்டிருக்கும் இந்தியாவின் நாகரிகம், பழுதுறுமல் பாது காத்து வரப்பட வேண்டுமானுல், கிராம வளத்தைப் பெருகச் செய்ய வேண்டும். ஒவ்வொரு கிராமமும் அதனதன் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவேண்டும். இதற்கான அதிகாரங்கள் அதற்கு இருக்க வேண்டும். இவையே காந்தியடிகள் கொண்ட கருத்துக்கள். இவற்றைக் கிராம ராஜ்யம் என்ற ஒரு சொற்றெடரில் அடக்கி வைத்துக் கூறினர். அதாவது, ஒவ்வொரு கிராமமும், அதனதன் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்ற அளவுக்கு, ஒவ்வொரு ராஜ்யமாக ஒரு ராஜ்யத்துக்குரிய அதிகாரங்களைப் பெற்றிருக்க வேண்டும் என்பதே அவர் கொண்ட நோக்கம். ஆனுல், இந்தக் கிராம ராஜ்யம் இந்திய தேசிய ஐக்கியத்திற்கு முரண்பட்டதாகவோ, மாகாண அரசாங்கமோ, மத்திய அரசாங்கமோ, பொது ஜன நன்மையைக் கருதிச் செலுத்தும் அதிகாரங்களுக்கு விரோதமாகவோ இயங்கக்கூடாதென்பதையும் அவர் சொல்ல மறந்து விட வில்லை.

சொன்னபடி வாழ்ந்து காட்டிய மகான்

கிராம வாழ்க்கைக்குப் புனிதத்தன்மை கொடுத்துப் பேசிய காந்தியடிகள் தாமே கிராம வாழ்க்கையை மேற்கொள்ளத் தயங்கவில்லை. இதுதான் அவருடைய தனிச் சிறப்பு. அதாவது, அவர், தாம் சொன்னபடி செய்து காட்டுகிறவர் மட்டுமல்ல; தம்மால் செய்ய முடிந்ததையே சொல்கிறவர். தென்னுப்பிரிக்காவில் வசித்துக் கொண்டிருந்த காலத்திலேயே, நகரத்திற்குப் புறம்பான ஒரு சூழ் நிலையில், டால்ஸ்டாய் பண்ணை என்ற பெயரால் ஒரு ஆசிரமத்தை அமைத்துக் கொண்டு, அங்கு உணவுப் பரிசோதனை முதல் ஆன்ம பரிசோதனை வரை பலவித பரிசோதனைகளை நடத்தினர்.

இந்தியாவுக்கு வந்தபிறகு, அகமதாபாத்திற்கு அருகிலுள்ள கோச்ராப் என்ற கிராமத்தில் 1915- வருஷம் மே மாதம் பதினைந்தாம் தேதி ஒரு ஆசிரமம் தொடங்கினுர். இது சபர்மதி நதிக்கரையில் அமைக்கப்பட்டது. இதனுல் இதற்குச் சபர்மதி ஆசிரமம் என்ற பெயர் வழங்கலாயிற்று ; சத்தியாக்கிரக ஆசிரமம் என்றும் சொல்வதுண்டு. இங்கு, காந்தியடிகள், ஒரு கிராமத்திற் குறியதான சூழ்நிலையை அமைத்துக் கொண்டு, எளிய வாழ்க்கைக்கும், உயர்ந்த நோக்கத்திற்கும் எடுத்துக் காட்டாக, வாழ்க்கையை நடத்தி வந்தார். இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்திற்குத்தலைமை தாங்கி அதை அவர் தீவிரமாக நடத்தத் தொடங்கியது இந்த ஆசிரம வாழ்க்கையின் போதுதான். 1930-ம் வருடம் நடைபெற்ற உப்பு சத்தியாக்கிரகத்தின் விளைவாக, சபர்மதி ஆசிரமத்தின் ஒளி மங்கி விட்டது.

பிறகு 1936-ம் வருடம் மார்ச்சு மாதம் காந்தியடிகள், வார்தாவுக்கு அருகிலுள்ள ஷேகான் என்ற ஒரு கிராமத்தில், தமது சகாக்களுடன் சென்று குடியேறினர். நாகரிகமே புகாத, போக்கு வரத்து வசதிகள் சிறிதும் இல்லாத இந்தக் கிராமத்தில், மக்கள் அறியாமையிலும், அசுத்தத்திலும் வாழ்ந்து வந்தார்கள். காந்தியடிகள் குடியேறிய பிறகு, இந்தக் கிராமம் புதிய ஒளி பெற்றது ; போக்குவரத்து வசதிகள் ஏற்பட்டன ; தபால், தந்தி நிலையங்களும் அமைந்தன. ஷேகான் என்ற பெயர், சேவாக் கிராமம் என்ற பெயராக மாறிற்று.

காந்தியடிகள் அமரத்துவம் எய்தும்வரை, இந்த சேவாக் கிராமம், உலகத்து நல்லோர் பலருடைய புனித யாத்திரை ஸ்தலமாக விளங்கி வந்தது.

"கடிதக் கருத்தரங்கு"

ஐயா,

நமது இந்தியத் துணைக்கண்டத்தில் மக்கள் தொகை பெருகிவருவது நாடறிந்த உண்மை. நாட்டு நலனில் அக்கறையுள்ளோர் யாரும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை எதிர்க்கமாட்டார்கள். சிகிச்சை செய்துகொண்டவர்களுக்குத்தான் அதன் நன்மை தெரியும். நான் ஒரு சர்க்கார் ஊழியன். எனக்கு மூன்று குழந்தைகள் இருக்கின்றன. மூன்றும் பெண்கள். என் குறைந்த சம்பளத்தில் மூன்று குழந்தைகளையும் சரியாகக் கவனிக்க முடியவில்லை. மற்ற வீட்டுப் பிள்ளைகளைப் பார்க்கும்போது என் பிள்ளைகள் நிலையை எண்ணி, நானும் என் மனைவியும் மனம் குமுறி அழுது இருக்கிறோம். எதிர்பாராமல் நாங்கள் குடும்பக் கட்டுப்பாடு விளக்கப் படங்களைப் பார்த்தோம். குழந்தைகளோடு ஒரு தாய் கண்ணீர்விடும் சோகக் காட்சியைக் கண்டு என் மனைவி கண்ணீரே விட்டுவிட்டாள். அதிலிருந்து என் மனைவிக்குக் கருத்தடை செய்துகொள்ள எண்ணம் ஏற்பட்டது. எனக்குத் தெரியாமல் ஆஸ்பத்திரிக்குச் சென்று கேட்டாளாம் என் மனைவி. டாக்டர், "நீ இரண்டு மாத கர்ப்பிணி; ஆகவே பிள்ளை பெறும்போது செய்கிறோம்" என்று சொன்னாராம். என் மனைவி இந்தச் செய்தியை எனக்குத் தெரிவித்ததும் நான் பயந்தேவிட்டேன். பலர் பலவாராகச் சொல்லக் கேட்டேன். அதனால் எனக்கும் பயமாகத்தான் இருந்தது. என்றாலும் நான் துணிந்து சென்னை ஸ்டேன்லி ஆஸ்பத்திரிக்குச் சென்று ஆப்பரேஷன் செய்துகொண்டேன். ஆஸ்பத்திரியில் அறுவை சிகிச்சை செய்துகொள்ள வருபவர்களைத் தரக் குறைவாக மதிக்காமல், அன்புடன் கவனித்தால், நடுத்தர வாழ்க்கையுள்ளார் பலர் அறுவை சிகிச்சை செய்துகொள்ளக் காத்திருக்கிறார்கள். நான் அறுவை சிகிச்சை செய்துகொண்ட பிறகு, பலர் பழைய பத்திரிகையைக் காட்டி "பார்த்தாயா, சிகிச்சை செய்த சிலர் ஆண்மை இழந்து இருக்கிறார்கள். சிலர் ஆண்குறியில் ரத்தம் சீழ் வந்து இறந்துவிட்டிருக்கிறார்கள், நீ இதை எல்லாம் தெரிந்தவனே அறுவை சிகிச்சை செய்து கொண்டாயே" என்று எசினார்கள். நான் தைரியத்தை இழக்காமல் இருந்ததால் இரண்டாம் நாளே வேலைக்குச் சென்றுவிட்டேன். பத்து நாளில் பூரண குணமடைந்தேன். அறுவை சிகிச்சை செய்துகொண்டவர்களைப் பொது மக்கள் கேவலமாகக் கருதுகிறார்கள். இதைப் பிரச்சாரத்தின் மூலம் மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். சிலர் அரசியல் காரணமாக அறுவை சிகிச்சையை எதிர்த்துப் பத்திரிகையில் இல்லாததும் பொல்லாததுமாக எழுதுகிறார்கள். நான் சிகிச்சை செய்துகொண்டு மூன்று மாதம் முடிந்துவிட்டது. ஆண்மைக் குறைவோ, உறுப்புகளில் எந்த விதமான தீங்கோ இல்லை என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஏற்கெனவே என் மனைவி கர்ப்பிணி. ஆணாகப்பிறந்தால் அதிர்ஷ்டம்; பெண் என்றால் ?... என்ன செய்யமுடியும். ஆகவே தான் "தமிழ் மக்களே, மூன்று குழந்தைகள் போதும். மூன்றுக்கு மேலிருந்தால் நம் வாழ்க்கையை வறுமையாக்கிவிடுகிறது. நீங்கள் தைரியமாக அறுவை சிகிச்சை செய்துகொள்ளலாம்" என்று கூறுகிறேன்.

தே. ஜெயராமன்,
பெரம்பூர், சென்னை.

ஐயா,

தமிழ்நாடு அரசாங்கம் வெளியிடும் "கிராம நலம்" பத்திரிகையைச் சென்ற இரண்டு ஆண்டுகளாகப் படித்து வருகிறோம். அதன் மூலம் சென்னை அரசாங்கத்தின் பல சாதனைகளைக் கண்டு உண்மையிலேயே பெரிதும் மகிழ்ச்சி அடைகிறோம். ஆசிரிய சமுதாயமே மகிழ்ச்சி அடைகிறது. அதை மக்களிடையேயும் எடுத்துக் கூறி வருகிறோம். மேலும் அதிகாரத்தைப் பரவலாக்கும் முறைக்காக, அரசாங்கம், மாவட்டக் கழகங்களுக்குப் பதிலாக பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்படுத்துவது குறித்தும், ஒரு பகுதிக்கான அதிகாரங்கள் முழுதும் அந்தப் பகுதிக்கே கொடுப்பதாலும், பகுதி சிறியதாக இருப்பதாலும், மக்கள் பிரதிநிதிகள் தங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை உடனடியாக நேரில் கண்டு தகுந்த உதவிகள் செய்ய முடியும். இது மிகுந்த பாராட்டுதலுக்குரியது. ஆனாலும், கல்வித் துறையைப் பொறுத்த மட்டில் இன்னும் சில சீர்திருத்தங்கள் செய்தால் கல்வித்துறை மிகவும் நல்ல முறையில் செயல்படும் என்று எண்ணுகிறேன். தற்பொழுது பஞ்சாயத்து யூனியனில் உள்ள அபிவிருத்தி அதிகாரிகள் எல்லாம் அந்தந்தத் துறை

யைச் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். உதாரணமாக, பஞ்சாயத்து அபிவிருத்தி அதிகாரி பஞ்சாயத்து ஆபீஸராக இருந்தவர். விவசாய அபிவிருத்தி அதிகாரி விவசாய டிமான்ஸ்ட்ரேட்டர். ஆனால் கல்வித்துறை அதிகாரி மட்டும், கல்வித்துறையில் அந்த துறையில் போதிய அனுபவமில்லாத, கிராம சேவக்குகளிலிருந்து பதவி உயர்வுபெற்று வந்தவர்களாக இருக்கிறார்கள். எனவே, பஞ்சாயத்து யூனியனின் கல்வி அதிகாரியாக அந்தந்த யூனியனில் உள்ள அதிகப்படியான அனுபவமிக்க (Senior most) ஆசிரியராக இருந்தால், அவர் பள்ளிகளின் அபிவிருத்தி குறித்துப் பல வேலைகளும் செய்ய முடியும்; ஆசிரியர்களுக்கும் ஒரு திருப்தி. தங்களுக்கும் பஞ்சாயத்து யூனியனில் வேலை செய்யும் பாக்கியம் கிட்டும் என்ற நம்பிக்கை ஏற்படும். மேலும், தற்பொழுது மாவட்டக் கழகங்களில் கூட அந்தந்தக் கழகத்தைச் சேர்ந்த அனுபவமிக்க (Senior most) ஆசிரியர்கள்தாம் அந்தந்த மாவட்டக் கழகங்களின் கல்வி அதிகாரிகளாக இருந்து வருகின்றனர். எனவே, தாங்கள் இது குறித்து யோசித்து அந்தந்த யூனியனைச் சேர்ந்த அனுபவமிக்க (Senior most) ஆசிரியர்களையே யூனியன் கல்வி அதிகாரிகளாக நியமித்தால், ஆசிரியர் சமூகத்துக்கும் நன்மை செய்தவர் ஆவீர்கள். அதற்கு எல்லா கிரேடு சர்வீஸ்களையும் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த முறையைப் பயன்படுத்தினால், யூனியனின் கல்வித் துறையும் ஒழுங்காகச் செயல்படும் என எண்ணுகிறோம்.

மேலும், கிராம சேவக்குகள் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளைப் பார்வையிட வேண்டும் என்று உள்ளது. இது ஆசிரியர்களுக்குப் பெரிதும் அவமதிப்பாக இருக்கிறது. கல்வித் துறையில் அநுபவமில்லதவர்கள், போதிய செகண்டரி கிரேடு ஆசிரியர்களைவிட அநுபவத்தில் குறைந்தவர்கள், செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் வேலை செய்யும் பள்ளிகளைப் பார்வையிடுவது அவ்வளவு பொருத்தமாகத் தெரியவில்லை. எனவே, தாங்கள் இது குறித்தும் ஒரு முடிவுக்கு வந்தால், பஞ்சாயத்து யூனியனின் ஆட்சி சிறந்த முறையில் நடைபெறும் என்று எண்ணுகிறேன்.

ஓர் ஆசிரியர்.

ஹரி ஜனங்களுக்கு கல்விச் சலுகை

கிறிஸ்தவ மதத்துக்கு மாறியவர்கள் உள்பட எல்லா ஹரிஜன மாணவர்களுக்கும், செகண்டரி பள்ளிகளில் அளிக்கப்பட்டுள்ள முழு சம்பளச் சலுகையை மேலும் ஒரு ஆண்டுக்கு நீடித்து அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. கல்விச் சலுகைகள் வழங்குவதில் தற்போதைய அடிப்படையை மாற்றுவதென்ற பொதுப் பிரச்னையில் ஒரு முடிவு ஏற்படுவதற்கிடையில், தற்போதைக்கு மேலும் ஒரு ஆண்டுக்கு அதாவது 1961–62 க்கு இந்தச் சலுகை நீடிக்கப்பட்டுள்ளது.

பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு உபகாரச் சம்பளங்கள்

மனு செய்வதுபற்றி அறிவிப்பு

ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, அங்கஹீனர்கள் பள்ளி ஆகியவைகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் சேவையைச் சிறப்பிக்கும் வகையில், அவர்களுடைய குழந்தைகளில் திறமையானவர்களுக்கு உயர்தரக் கல்வி அளிப்பதற்கு உதவ இந்திய அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. இதன்படி, ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு உபகாரச் சம்பளங்கள் வழங்க, இந்திய அரசாங்கம் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வகை செய்துள்ளது. ஆண்டு தோறும், பள்ளிப் படிப்பு முடிவு பரீட்சையை அடிப்படையாகக்கொண்டு, உபகாரச் சம்பளங்கள் வழங்கப்படும்.

ஆரம்ப, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு உதவுவதற்கு என்று தமிழ் நாட்டுக்கு 47 உபகாரச் சம்பளங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. மூன்றும் திட்ட காலத்தில் ஒவ்வொரு வருஷத்திலும் 47 பேருக்கு உதவி அளிக்கப்படும். ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, அங்கஹீனர் பள்ளி ஆகியவைகளில் பணியாற்றும் ஆசிரியர்களுடைய குழந்தைகளில் முதல் வகுப்பில் தேறியவர் தவர்கள் (அல்லது மொத்தத்தில் குறைந்த பட்சம் 60 சத விகித மார்க் வாங்கியவர்கள்) இந்த உபகாரச் சம்பளம் பெற உரியவர்களாவர். 1961 மார்ச்சில் நடந்த மெட்ரிக் அல்லது எஸ் எஸ்.எல்.சி. அல்லது அதற்குச் சமதையான பரீட்சையில் இந்தத் தகுதியுடன் தேறியவர்கள் உபகாரச் சம்பளத்துக்கு மனுச் செய்யலாம். முந்தின ஆண்டு பள்ளிப் படிப்பு முடிவு பரீட்சைக்கு ஆஜரானவர்கள் இந்த உபகாரச் சம்பளம் பெற உரியவர்கள் அல்ல.

முற்றிலும் தகுதியை அடிப்படையாகக்கொண்டு, இந்திய அரசாங்கம் இந்த உபகாரச் சம்பளம் வழங்குகிறது. மனுச் செய்பவர்களின், ஒட்டு மொத்த மார்க்கைக் கொண்டு தகுதி நிர்ணயிக்கப்படும். 1961-62-ம் ஆண்டின் உபகாரச் சம்பளத்துக்காக மனுக்கள் கோரப்படுகின்றன. நிபந்தனை விதிகளையும், விண்ணப்ப பாரத்தையும், சென்னை கல்வித்துறை நெறியாளரிடமிருந்து பெறலாம். பூர்த்தி செய்யப்பட்ட மனு பாரங்கள், அந்தந்த மாணவர்கள் எழுதிய பரீட்சைகளின் முடிவு வெளியான 30 நாட்களுக்குள் சென்னை கல்வித் துறை நெறியாளர், சென்னை 6, என்ற முகவரியில் சேர வேண்டும்.

உத்தமமான வழி

" விஜயாலயன் "

காட்சி 1

சின்னாளப்பட்டி கிராமம்

முத்தய்யனும், மாணிக்கமும் வந்துகொண்டிருக்கிறார்கள்; எதிரில் வேலுச்சாமி வருகிறார் .

வேலுச் :—டேய் முத்தா! நம்பப் பையனைப் பார்த்தீங்களா யாராவது ?

முத்தய்யன் :—பையனையின்னு சொன்னா, எந்தப்பையனை? தங்களுக்கு 28 வயசிலிருந்து 5 வயசு வரை லும் ரகவாரியான பிள்ளைங்க இருக்காங்களே, ஆறு அடியிலிருந்து ஒண்ணரை அடி வரையிலே உயர வாரியான பிள்ளைங்க இருக்காங்களே; நான் யாருன்னு கண்டேன் ?

வேலுச்:—கேலிதானே வேணுங்கிறது, நம்ப மூத்தபையன் ரங்கசாமி, நாலஞ்சு நாளாக காணோம்.

முத்தய்யன் :—போச்சுடா! எவனாவது பிள்ளை பிடிக்கிறவன அமுத்திட்டுப் போயிட்டானா !

மாணிக்கம் :—வீட்டிலேயே நல்லா தேடிப் பாருங்க, அவன் பாட்டுக்கு பொம்மையா மாறிப் போயி மூலையிலே உட்கார்ந்திருக்கப் போறான்; யாரையும் நம்ப முடியறதில்லே இந்தக் காலத்தில் !

வேலுச் :—மாணிக்கம், ஒரு ஓட்டம் ஓடிப் போயி போலீஸ் ஸ்டேஷன்லே ஒரு ரிப்போர்ட் குடுத்திட்டு வாடாப்பா, நானு அவங்க மாமா ஊருக்குப் போயிட்டு வந்துடறேன்.

மாணிக்கம் :—ஒங்க மருமக இங்கேதானே இருக்கா...

வேலுச் :—ஆமா ?

மாணிக்கம் :—அப்ப அவன் என் மாமாவீட்டுக்குப் போகணும் ?

வேலுச் :—இல்லே ஒரு வேலை போயிருக்கலாமில்லே ?

மாணிக்கம் :—இருக்கலாம்-இருக்கலாம், என்ன யாரையும் நம்ப முடியறதில்லே! அது சரி ஒங்களுக்குள்ளே எதுனுச்சும் சண்டையா ?

வேலுச் :—என்னடா இப்படிக் கேக்கிறே, இது வரையிலே என் பேச்சுக்கு எதிர்ப் பேச்சு அவன் பேசி இருப்பானா ?

மாணிக்கம் :—பேசினதில்லே தான். ஆனா ஒங்க மருமகளுக்கும் அவனுக்கும் ஏதாவது சண்டை வந்திருந்தா ?

வேலுச் :—போடா போடா; என்னோட மருமகளா சண்டை பிடிக்கிறவ. அவ மஹா லக்ஷ்மியாச்சேடா !

மாணிக்கம் :—மஹாலக்ஷ்மிதான் சதா சர்வ காலமும் சரஸ்வதியோட சண்டை பிடிப்பாள்ன்னு புராணத்திலே படிச்சிருக்கேன்; அதொரு பக்கம் இருக்கட்டும்; இப்ப சில கேள்விகளை நான் பட்டு-பட்டுன்னு கேப்பேன், நீங்க அதுக்கு டக்கு டக்குன்னு பதில் சொல்லணும். முதலாவது ரங்கசாமிக்குக் கல்யாணம் ஆயி எத்தினி நாள் ஆச்சு !

வேலுச் :—எத்தினி நாளா ? இவனொருத்தன்! அஞ்சு வருஷமாச்சு.

மாணிக்கம் :—அடி சக்கே; எத்தினி கொழந்தை ?

வேலுச் :—நாலு குழந்தை, அஞ்சாவது குழந்தை பொறக்கப் போவுது, எட்டு மாசமா இருக்கா.

மாணிக்கம் :—நாலு குழந்தையும் ஆண் குழந்தையா.. இல்லே....

வேலுச் :—எல்லாம் பெண் குழந்தைகள், மூக்கும் முழியுமா லட்டு மாதிரி இருக்காங்க.

மாணிக்கம் :—சரி சரி, ஐயா யோவ்.. பேசாமெ காசிக்கு ஒரு ஆளு அனுப்புங்க, ரங்கசாமி அங்கேதான் சாமியாரா சுத்திக்கிட்டிருப்பான்.

வேலுச் :—சாமியாராவா ? டேய், உனக்கென்ன பைத்தியமா ?

மாணிக்கம்:—பைத்தியம் எனக்கில்லே, ஒங்க மகனுக்குப் பிடிச்சிருக்கும். அஞ்சு வருஷத்திலே நாலு குழந்தைகள், அதுவும் எல்லாம் பெண் குழந்தைகள். அப்பாடியப்பா !

வேலுச்.—போடா போடா கையாலாகாத பயலே! (வேலுச்சாமி போய் விடுகிறார்.)

முத்தய்யன் :—என் மாணிக்கம்—ரங்கசாமி எங்கே போயிருப்பான் ?

மாணிக்.—அவன் எங்கேயாச்சம் ஓடியிருப்பாம்ப்பா; இருபத்தி எட்டு வயசிலியே நாலு குழந்தையைப் பெத்து, அஞ்சாவது குழந்தைக்கு அஸ்திவாரம்போட்டுட்டானே. இவன் ஆயுள் காலம் பூராவும்இருந்தா எத்தினி குழந்தையைப் பெத்துவிடப் போறானோ! சரி சரி நான் ஒரு ஓட்டம் ஓடி, போலீசுலே ரிப்போர்ட் குடுத்திட்டு வந்துடறேன்! (மாணிக்கம் போதல்)

திரை

காட்சி 2

காவல் நிலையம்

மாணிக்கம் வருகிறன்—வெளியில் ஒரு காவலர் நின்று கொண்டிருக்கிறர்.

மாணிக்கம் :—இன்ஸ்பெக்டர் ஐயா இருக்காருங்களா ?

காவலர் :—இல்லே.

மாணிக்கம் :—எட்டு ஐயா ?

காவலர் :—இல்லே.

மாணிக்கம் :—எல்லாம் வீட்டுக்குப் போயிட்டாங்களா ?

காவலர் :—இல்லே ?

மாணிக்கம் :—பின்னே ?

காவலர் :—இன்னும் வீட்டிலேயிருந்தே வல்லே !

மாணிக்கம் :—இன்னுமா வீட்டிலிருந்து வல்லே ! என் ?

காவலர் :—லீவு.

மாணிக்கம் :—ஹோ இதை முந்தியே சொல்லப்படாது ?

காவலர் :—நீ இதை முந்தியே கேக்கப்படாது ? சட்டம் படிச்சி ஹை கோர்ட் ஜட்ஜ் மாதிரியில்லேப்பா கேள்வி கேட்கிறே ? நாடு கெட்டுப்போச்சி, இங்கிலீஷ்காரன் காலத்திலே எங்க முன்னுடி நீ எல்லாம் நிக்க முடியுமா ?

மாணிக்கம் :—எங்க முன்னுடி இங்கிலீஷ்காரனே நிக்க முடியலீங்களே !

காவலர் :—சரி சரி, நீ வந்த விஷயம் என்ன ?

மாணிக்கம் :—ஒரு ஆளு காணுமல் போயிட்டாரு, அது சம்பந்தமா பிராது குடுக்கலாம்னு வந்தேன் ?

காவலர்.—யாரு மேலே பிராது குடுக்கப்போறே ?

மாணிக்கம் :—யாருமேலயா ?

காவலர் :—ஆமா, யாரு மேலே ?

மாணிக்கம் :—அடடே ! நான் யாரு மேலேயும் பிராது குடுக்கப்போறதில்லீங்க ! ஒங்ககிட்டே சொல்லி கண்டு பிடிச்சுக் குடுங்கன்னு சொல்ல வந்தேன் !

காவலர் :—கிழிஞ்சது போ; சரி, காணுமப் போனவருக்கு என்ன வயசு ?

மாணிக்கம் :—இருபத்தி எட்டு வயசு. பேப்பர்லே குறிச்சிக் கிடறீங்களா ? சொல்றேன்.

காவலர் :—சும்மா சொல்லு, எல்லாத்தையும் மனசிலியே குறிச்சிக்கிறேன் !

மாணிக்கம் :—மறந்துடுவீங்களேன்னு பாத்தேன் !

காவலர் :—மறதியா ? நமக்கேது மறதி ! ஆமா, வயசு என்ன சொன்னே !

மாணிக்கம் :—இருபத்தி எட்டுன்னு சொன்னேன், மறந்துட்டீங்களா ?

காவலர் :—இல்லே, இல்லே, நீ சரியாத்தான் விஷயங்களைச் சொல்றியான்னு பரிசீலனை பண்ணிப்பாத்தேன், மேலே சொல்லு, அவன் பேரென்ன ?

மாணிக்கம் :—ரங்கசாமி !

காவலர் :—உயரம் ? எடை ? நிறம் ?

மாணிக்கம் :—உயரம் ஒங்க உயரம் இருப்பான்; எடையில் ஒங்க எடை இருப்பான்; நிறமும் ஒங்க நிறம் இருக்கும்.

காவலர் :—சரித்தான், கடைசியிலே நீங்கதான்னு சொல்வே போலேயிருக்கு; மேலே சொல்லு, எண்ணக்கி இருந்து காணோம்.

மாணிக்கம் :—போன நாலு நாளாயிருந்து காணுமுங்க.

காவலர் :—நீ அவனுக்கு என்ன வேணும் !

மாணிக்கம் :—அவனோட சினேகிதனுங்க நானு; கொஞ்ச நாளாவே அவன் மனசு சரியில்லாமெ இருந்தது ! கலகலன்னு சிரிச்சு பேசுவான், ஆனு பேசாமெ இருந்தான்; எனக்கு அப்பவே காரணம் கேட்கலாமான்னு தோணிச்சு, ஆனு போகப் போக சரியாப் போயிடுன்னு நெனச்சி பேசாமெ இருந்துட்டேன்: ஒரே ஒரு காரணம் என் மனசிலே படுதுங்க.

காவலர் :—என்ன காரணம் ?

மாணிக்கம் :—இப்பவே அவனுக்கு நாலு பெண் குழந்தைங்க இருக்கு !

காவலர் :—என்னது நாலா ? சரித்தான்....நமக்கு அண்ணனு இருப்பாரு போலேயிருக்கு....!

மாணிக் :—நமக்கு எத்தனே குழந்தைங்க !

காவலர் :—மூணு பொண்ணு—மூணு ஆணு !

மாணிக் :—அப்ப நான் வரேங்க !

காவலர் :—என்னய்யா கிளம்பிட்டே !

மாணிக் :—இப்பவே உங்களுக்கு ஏகப்பட்ட சிரமமா இருக்கும்... இதிலே நான் வேறே புதுசா சிரமம் கொடுக்கணுமா ?

காவலர் :—அது சரி... இந்த மாதிரி எல்லாரும் பச்சாதாபப்பட்டா நமக்கு சிரமமே இருக்காதுய்யா.. சரி . . . சரி . . . போ . . . ரிக்கார்ட்டுலே குறிச்சுக்கிறேன் . . . !

மாணிக்கம் :—அந்தச் சிரமம் கூடவேணுங்க . . . நான் வரேங்க . . . (போதல்)

[திரை.]

காட்சி 3

வேலுச்சாமி வீடு.

(வேலுச்சாமி அவர் மனைவி மாரியாத்தாள் திண்ணையில் உட்கார்ந்திருத்தல், மாணிக்கம் வருதல்).

வேலுச்சாமி :—என்ன மாணிக்கம் போலீஸ் ஸ்டேஷன் போய்வந்தியா ?

மாணிக்கம் :—போய் சொல்லிட்டு நேரா இங்கேதான் வர்றேன் . . .

வேலுச்சாமி :—போலீஸிலே என்ன சொன்னுங்க . . .

மாணிக்கம் :—என்ன சொல்வாங்க ? எல்லாம் தேடிப் பாக்குறேமுன்னு சொன்னுங்க . . . ஆமா பணம்கிணம் எதுனச்சும் ரங்கசாமி எடுத்துக்கிட்டுப் போயிருக்கானு ?

மாரியாத்தாள் :—இல்லேப்பா . . . அதான் எனக்குக் கவலேயா இருக்கு . . . போனவன் அம்பது, நூறுன்னு எடுத்துட்டுப் போகப்படாது ? போட்டிருந்த சட்டை-வேட்டியோட போயிருப்பான் போலே இருக்கு!

மாணிக்கம் :—செல்லம்மா இருக்கா ?

மாரியாத்தாள் :—உள்ளே தூங்குது.

மாணிக்கம் :—அதுகிட்டே கேட்டா எதுனச்சும் தெரியுமே ?

வேலுச்சாமி :—எல்லாம் கேட்டுப்பாத்தாச்சி . . சும்மா பே-பேன்னு முழிக்குது . . . !

மாணிக்கம் :—நாலு நாளா காணுேமுன்னு ஆச்சரியமாத் தான் இருக்கு . . !

வேலுச்சாமி :—அதிர்ச்சியா இருக்கப்பா . . . நாடு இருக்கிற இருப்பிலே யாரையும் நம்ப முடியறதில்லே . . . குடும்பம் குடும்பமா குத்திக்கொலே செய்றதாக பேப்பரிலே வர்ரதைப் பாத்தா பகீர்-பகிரங்குது . . . !

மாரியாத்தாள் :—இந்தமாதிரியெல்லாம் தத்துப்பித்துன்னு பேசாமெ சும்மா இருக்கமாட்டிங்க . . !

மாணிக்கம் :—ஐயா . . நான் எதுக்கும் பக்கத்திலே திண்டுக்கல் டவுன் வரைக்கும் போய் பாத்துட்டு வர்றேன்.

மாரியாத்தாள் :—செய் சாமி...... எப்படியாவது அவனே வீடுகொண்டு வந்து சேத்துடு . . . .ஒனக்கு கோடி புண்ணியம் . . .

[மாணிக்கம் போன சிறிது நேரத்தில்—ரங்கசாமி வீடு வந்து சேருகிறன். அவன் வரும்போது வேலுச்சாமியும் மாரியாத்தாளும் வீட்டில் இல்லே. தன் மனைவி செல்லம்மாளிடம் பேசிக்கொண்டிருக்கிறன்.]

ரங்கசாமி.—அப்பா—ஆத்தாச்சி எங்கே போயிருக்காங்க.?

செல்லம்மாள்.—கோயிலுக்குப் போயிருக்காங்க பூசாரியைக்கேட்டுட்டு வரலாமுன்னு . . . பால் போட்டுப் பாத்தா தெரியுமாமுல்லே . . . .

ரங்கசாமி :—தெரியட்டும் . . . தெரியட்டும் . . . என்னே எதுனச்சும் கேட்டாங்களா ?

செல்லம்மாள்—கேட்டாங்க . . . நான் ஒரேயடியாத் தெரியாதுன்னு சொல்லிவிட்டேன் . . . ? ஆனுலும் நீங்க ரொம்ப மோசமுங்க . . . அத்தை இந்த நாலு நாளா பச்சைத் தண்ணி கூட வாயிலே ஊத்தல்லே . . . . ராத்திரியிலே தூங்கவா விடுது . . . . உங்க பேரைச் சொல்லி பெனுத்திக்கிட்டு . . . . . அப்ப்பா எனக்கே சங்கடமாப் போச்சி . . . . ஆமா . . . மாமா வந்து கேட்டா என்ன சொல்ல போறீங்க !

ரங்கசாமி:—பொய் சொல்லிப் பாக்குறேன் . . . முடியாட்டி உண்மையைச் சொல்லிடறேன். . . அப்பறம் வேறே என்ன பண்றது ?

செல்லம்மாள் :—இதோ வர்ற சத்தம் கேக்குது . . .

[வேலுச்சாமியும் மாரியாத்தாளும் ரங்கசாமியைக் கண்டு திகைத்துவிடுகின்றனர்......அப்படியே அவனேக் கட்டி அணேத்துக்கொள்கிருர்கள்]

வேலுச்சாமி :—டேய் ரங்கு . . . என்னடா இந்தமாதிரி பண்ணிட்டே . . . எங்கேடா போயிருந்தே . . எங்க உசிரு எங்ககிட்டே இல்லே . . .

ரங்கசாமி :—நான் எங்கேப்பா போய்டப்போறேன் . . . சும்மா டவுன் வரைக்கும் போயிருந்தேன் . . .

வேலுச்சாமி :—என்ன விஷயமாப் போயிருந்தே . . . எங்க கிட்டே சொல்லிட்டுப் போகக்கூடாதா ?

ரங்கசாமி :—எல்லாம் பெறகு சொல்றேம்பா . . . அம்மா . . . எனக்கும் அப்பாவுக்கும் சோறு போடு . . .

திரை

காட்சி 4

வேலுச்சாமி விடு.

முன்புறம்; நிலாக்காலம்; மகனும் தந்தையும் கட்டிலில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிருர்கள்.

ரங்கசாமி :—எம்ப்பா . . . செங்கல்வராயன் எங்கேயோ சாமியாரா ஓடிப்போயிட்டதாகச் சொன்னுங்களே. . . . உண்மையாப்பா அது?

வேலுச்சாமி :—அப்படித்தான் சொல்லிக்கிறுங்க . . . ஆனு சரியான விவரம் தெரியல்லே . . . என்னுடை அபிப்பிராயம், இருக்கும்னு தான் தோணுது!

ரங்கசாமி :—என் அப்படிச் சொல்றீங்க !

வேலுச்சாமி :—மூத்த பொண்ணுக்கு சீக்கிரத்திலே கல்யாணம் பண்ணி வெச்சிடணம்ன்னு பகீரதப் பிரயத்தினம் பண்ணினுன் . . . முடியல்லே . . . அதோட குடும்பத் தொந்தரவு . . . எழெட்டு பிள்ளேக் குட்டிகள் . . . . சமாளிக்க முடியாமெ சாமியாராப் போனுலும் போயிருப்பான் !

ரங்கசாமி :—அப்பா ! இந்த மாதிரி ஒரு குடும்பத்தையே நடுத்தெருவிலே விட்டுவிட்டு ஓடறது பெரிய பாபமில்லேயா ?

வேலுச்சாமி :—சந்தேகமில்லாமே ! எனக்கு ஆரம்பத்திலேயிருந்தே தெரியும். தைரியம் இல்லாத பய . அதுக்கு அவன் ஒண்ணு பண்ணியிருக்கலாம் . . குழந்தைகளை அதிகமா பெறும இருந்திருக்கலாம் !

ரங்கசாமி :—என்னப்பா இப்படிச் சொல்றீங்க . . .?

வேலுச்சாமி :—ஆமா . . அதிலே என்ன தப்பு . பிள்ளைகளை பெத்தா அதுகளை நல்லா வளக்கணும் . . . . அப்படிக் கில்லாமே அதுகளை கால் வயிறு அரைவயரு போட்டு சாகடிக்கிறது பாவமில்லேயா ?

ரங்கசாமி:—அந்த மாதிரி நீங்க சொல்றதுன்னு குழந்தைகள் இல்லாமே இருந்தா ரொம்ப சௌகரியமா இருக்குமே . . .!

வேலுச்சாமி :—சேச்சே ! குழந்தை இல்லாத குடும்பம் ஒரு குடும்பமா ? இந்த வாழ்க்கை எதுக்காக ? கோடி கோடியாப்பணம் இருந்தாலும் இல்லாட்டியும் குழந்தைகள் இருக்கணும் ரங்கு . . .

ரங்கசாமி :—ஆனு அளவா இருக்கணுங்கிரிங்க . . .!

வேலுச்சாமி :—ஆமா

ரங்கசாமி :—அதெப்படி முடியும் ?

வேலுச்சாமி :—ஏன் முடியாது ? மனசு திடமா இருந்தா எதைத்தான் சாதிக்க முடியாது ! இப்ப உன்னே ஒரு கேள்வி கேக்கிறேன் . . . மனசைத் திறந்து சொல்லணும் . . .! ஒனக்கு அஞ்சாவது குழந்தை பிறந்ததுக்கப்புறம் இனிமே குழந்தையே வேணும்ன்னு நீ திடமா இருக்க முடியுமா ?

ரங்கசாமி :—அதெப்படி நான் சொல்ல முடியும் . . .!

வேலுச்சாமி :—முடியாதுல்லே . . . ஆனு நான் இருக்குறேன் . . . அதெப்படி . . .?

ரங்கசாமி :—அது அவங்க அவங்க மனசைப் பொறுத்தது.

வேலுச்சாமி :—ரொம்பசரி . . . அதாவது மன உறுதி உள்ளவங்க இருக்கலாம் .இல்லாதவங்க . . .!

ரங்கசாமி :—இல்லாதவங்க செங்கல்வராயன் மாதிரி கஷ்டப்படவேண்டியதுதான் . . .!

வேலுச்சாமி :—அதுவும் வேண்டியதில்லேங்கிறேன் . .

ரங்கசாமி :—நீங்க என்ன சொல்றீங்க . . .!

வேலுச்சாமி :—மனசு உறுதியா இல்லாதவங்க குழந்தைகள் பிறக்காம இருக்குறதுக்கு ஒரு வழியைக் கண்டு பிடிச்சிக்கணும் . . .

ரங்கசாமி :—அப்படின்னு . . . கர்ப்பத்தை கலேச் சுடணம்னு சொல்றீங்களா ?

வேலுச்சாமி:—ஐய்யய்யோ அதையெல்லாம் நினைக்கக்கூடப் படாது . . . . பாவங்களிலேயே பெரிய பாவம் அதுதான் . . . ரொம்ப ஆபத்தானதும் கூட . . . சாமிநாதனைத் தெரியுமில்லே . . . அவன் இப்படித் தான் தன் சம்சாரத்தோட கர்ப்பத்தைக்கலேக்க வழிபண்ணினுன் . . நான் தலேபாட அடிச்சிக்கிட்டேன் . . .கேட்டானு பாவி . . . . மீறி ஏதேதோ பண்ணி அவளேயும் கொண்ணு—அந்த விஷயம் ஊரிலே பரவி இப்ப ஊரெல்லாம் காரித் துப்புறுங்க . . . .!

ரங்கசாமி.—அப்ப வேறே என்னுப்பா பண்றது ?

வேலுச்சாமி.—குழந்தையே உற்பத்தியாகாதபடி பாத்துக்கணும் . . .!

ரங்கசாமி.—என்னப்பா இது . . .? நம்ப மதம் ஆசாரம் இதுக்கு இடங்குடுக்குமா ? கடவுளுக்கு விரோதமாச்சே . . .!

வேலுச்சாமி.—கடவுளுக்கு எப்படி விரோதமாகும் . . பிள்ளைகளைப் பெத்துட்டு அதுகளைக் காப்பாத்தாமே தெருவிலே அலேயவிடுவதுதான் பாவமே தவிர; பிள்ளைகளைப் பெறும இருக்குறது எப்படி பாவமாகும் கடவுளோட ஆசை என்ன—ஜனங்கள் ஒருத்தருக்கு ஒருத்தர் சந்தோஷமா—நிம்மதியா இருக்கணும்ங்கிறது தானே . . .!

ரங்கசாமி.—ஆனு அதுக்கு என்னப்பா வழி இருக்கு . .

வேலுச்சாமி.—ஏதேதோ அரசாங்கத்தலே பண்ருங்களாமே, ஆபரேஷன் . . . அது இதுன்னு . . பேசாமெ அதை செஞ்சிக்கிட வேண்டியதுதான் . .

ரங்கசாமி.—என்னது ஆபரேஷனு . . .?

வேலுச்சாமி.—ஆமா ஏன் பயப்படறே . . . .! இளவட்டா இருக்கே . . . எனக்குத் தெரியறது கூட உனக்குத் தெரியல்லியே . . . ரொம்ப ரொம்ப சுலபமான ஆபரேஷனும் . . . கொஞ்சம் கூட கஷ்டமே இல்லியாம் . . . ஆண்கள் எப்ப வேணு முன்னுலும் பண்ணிக்கிடலாமாம் . . . ஆனு பெண்களுக்கு பிரசவமான கொஞ்ச நாளிலே பண்ணிுத்தான் சுலபமா இருக்குமாம் . . .

ஆபரேஷன் பண்ணிக்கிடறவங்களுக்குப் போகவர செலவோட கையிலே முப்பது ரூபா பணம் வேறே அரசாங்கத்திலேயிருந்து தர்ருங்களாம் . . . . இதெல்லாம் ஒனக்குத் தெரியாதா ?

ரங்கசாமி.—தெரியும்பா . . . .?

இதனலே என்ன பிரயோஜனம்ன்னு பேசாமெ இருந்துட்டேன் . . .

வேலுச்சாமி.—என்னது ? என்ன பிரயோஜனம்ன்னு இருந்துட்டியா ? நல்லாச் சொன்னே போ . . . அவனவன் ஏழெட்டுக் குழந்தைகளைப் பெற்றுக்கிட்டு வாய்க்கும்-வயித்துக்குமில்லாமே கஷ்டப்படுகிறுன். . இதனலே என்ன பிரயோஜனம்ன்னு கேக்கிறே . . . !

(20-ம் பக்கம் பார்க்க)

கேள்வியும் பதிலும்

கேள்வி : பஞ்சாயத்து யூனியன் தலைவரின் பதவிக்காலம் எத்தனை ஆண்டுகள் என்று வரையறுக்கப்பட்டுள்ளது? [திரு. எம். ஆர். கோவேந்தன், தலைவர், வீரியங் கோட்டை பஞ்சாயத்து, தஞ்சாவூர் மாவட்டம்.]

பதில் : 1958ம் வருடத்திய தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம், 19-வது பிரிவின்படி, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் மன்ற உறுப்பினர்களின் பதவிக்கால அளவு, சட்டப்படி இடமளிக்கப்பட்டாலொழிய, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் மன்றத்தைப் பொறுத்தும்–மேற்பார்வையாளர் அறிக்கை வெளியிடும் தேதியிலிருந்து, ஐந்து ஆண்டுகள் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் தலைவர், உறுப்பினர்களுக்குள்ளே தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தப் பஞ்சாயத்து யூனியன் மன்ற உறுப்பினராகத் தொடர்ந்து எவ்வளவு காலம் இருக்கிறரோ அவ்வளவு காலம் தலைமைப் பதவியில் இருப்பார்.

புதியதாக அமைக்கப்பட்ட பஞ்சாயத்து யூனியன் மன்றங்களைப் பொறுத்த வரையில், மன்ற உறுப்பினர்கள், தலைவர் ஆகியோருடைய பதவிக்கால அளவு, அரசாங்கம் அல்லது அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரியின், இது குறித்த அறிக்கையில் வரையறுத்துக் கூறப்படும். [1960ம் வருடத்திய பஞ்சாயத்து யூனியன் மன்றச் சட்டம் (முதல் அமைப்புச் சட்டத்திற்குச் சிறப்பு விதி விலக்குகள்) 2 (1) (பி) பிரிவைப் பார்க்க.]

மேற்குறித்த சட்டப்பிரிவின் கீழ், மன்ற உறுப்பினர்களின் பதவிக் கால அளவு, பல பஞ்சாயத்து உறுப்பினர்களின் பதவிக்கால அளவு முடியும் தருவாயில், 1963-ம் வருடத்தில் வரையறுக்கப்படும். அவ்வாறு 1958-ம் வருடத்திய சட்டம் 2 (1) (பி) பிரிவின் கீழ், பதவிக்கால அளவு வரையறுக்கப்படும் வரையில், புதியதாக அமைக்கப்பட்ட பஞ்சாயத்து யூனியன் மன்றத்தலைவர் தொடர்ந்து பதவியில் இருப்பார்.

கேள்வி 2 : "கிராம நலம்" மே இதழில், சிறந்த கட்டுரைகளுக்கான பரிசுத் திட்டத்தைக் கண்ணுற்றேன். பஞ்சாயத்துத் தலைவர்கள், உறுப்பினர்கள், பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர்கள் உறுப்பினர்கள், மட்டும் போட்டியில் கலந்து கொள்ளலாம் என்று குறிப்பிட்டுள்ளது. வட்டார வளர்ச்சித் திட்டங்கள், பஞ்சாயத்து வளர்ச்சித் திட்டங்கள் பற்றியெல்லாம் ஓரளவுக்கு அறிந்துள்ள எம் போன்ற பொதுமக்களும் இக் கட்டுரைப் போட்டியில் கலந்துகொள்ள வாய்ப்பு உண்டா?

[கு. மலர்விழி, தருமபுரம், சேலம் மாவட்டம்]

பதில் : "கிராம நல"த்தின் சிறந்த கட்டுரைகளுக்கான பரிசுத் திட்டத்தில் பொதுமக்கள் கலந்துகொள்ள யாதொரு தடையும் கிடையாது. பொது மக்களிடமிருந்து வரும் கட்டுரைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, சிறந்த கட்டுரைகள் என்று தேர்ந்தெடுத்து வெளியிடப்படுபவை இந்தப் பரிசுகளைப் பெறும். பொது மக்களிடமிருந்து, சிறந்த கட்டுரைகளைக் "கிராம நலம்" மனமுவந்து வரவேற்கின்றது.

மேற்கு வங்க ஆய்வுக் குழுவினர் சென்னை விஜயம்

மேற்கு வங்கத்திலிருந்து, ஆய்வுக் குழு ஒன்று சமீபத்தில் தமிழ் நாட்டிற்கு விஜயம் செய்தது. இந்தக் குழுவினர், நமது மாநிலத்தில் புதிய பஞ்சாயத்து ஆட்சி எப்படி நடைபெறுகிறது, பஞ்சாயத்து ஸ்தாபனங்கள், நிர்வாக அதிகாரிகளிடையே நிலவும் ஒற்றுமையான சூழ் நிலை, அந்த ஸ்தாபனங்களின் நிதி நிலையும் நிதி ஆதாரங்களும், வளர்ச்சியும், கடமைகளும் என்ன, என்பது பற்றியெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டி, தமிழ் நாட்டிற்கு விஜயம் செய்தனர்.

இக்குழுவினருக்கு தலைவராக, மேற்கு வங்காள சமுதாய அபிவிருத்தித் துறை, துணை அமைச்சர் ஸ்ரீ சமர்ஜித் பானர்ஜி இருந்தார். அவருடன் மற்றும் இரு மேற்கு வங்காள சட்டசபை உறுப்பினர்களும், அரசாங்க அதிகாரிகளும் வந்திருந்தனர். அவர்கள் ஜூன் 28-ம் தேதி யன்று தமிழ் நாடு அரசாங்கத் தலைமை அலுவலகத்தில் அரசாங்கப் பிரதமச் செயலாளர் ஸ்ரீ ஆர். ஏ. கோபால சாமி, ஐ.சி.எஸ்., கிராம அபிவிருத்திக் கமிஷனர் ஸ்ரீ கோ. வேங்கடாசலபதி, மற்றும் கிராம அபிவிருத்தி சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகள், ஆகியோருடன் கலந்து பேசினர்கள். நமது மாநிலத்தில் நடைபெறும் புதிய பஞ்சாயத்து ஆட்சி பற்றிய விளக்கங்கள் இக் குழுவினருக்குத் தரப்பட்டன.

மேலும், இக்குழுவினர், கடம்பத்தூர், திருக்கழுக்குன்றம், ஸ்ரீபெரும்புதூர் ஆகிய வளர்ச்சி வட்டாரங்களையும் நேரில் பார்வையிட்டு மகிழ்ந்தனர்.

(18-ம் பக்க தொடர்சி)

ரங்கசாமி.—அப்படின்னு வாழ்க்கை வசதி உள்ளவங்க நெறைய பிள்ளே பெத்துக்கலாமா ?

வேலுச்சாமி.—அதுவும் கூடாது தான் . . . ஒடம்பு என்ன மிஷினு . . . ? பிரசவகாலங்கிறது என்ன சாமான்யமா ?. . . பிரசவத்துக்குப் பிரசவம் உடம்பு கெட்டுக் குட்டிச்சுவராயிடாதா ? பணக்காரங் களா இருந்தா என்ன—ஏழையா இருந்தா என்ன ? உடம்பு ஒண்ணுதான்—பிரசவமும் ஒண்ணுதான் .

ரங்கசாமி.—அப்பிடின்னு குழந்தைகள் வேண்டாங்கிறீங்க . . . !

க்வலுச்சாமி.—வேண்டாம்ன்னு சொல்லல்லே . . . . அதிகமா வேண்டாம்ன்னு சொல்றேன் . . . . !

ரங்கசாமி.—அதுக்கு ஒரே வழி ஆபரேஷன் தான் . . . இல்லியா ?

வேலுச்சாமி.—ஒரே வழி இல்லே . . . உத்தமமான வழி . . . !

ரங்கசாமி.—இதைப்பற்றி வேறே என்னென்னப்பா தெரிந் சிக்கிட்டீங்க . . . .

வேலுச்சாமி.—வேறே என்ன ? ஆபரேஷன் பண்ணிக்கிற ஆம்பிளேங்க அவங்க அவங்க சம்சாரங்கிட்டேயிருந்து இனிமேலே எங்களுக்குக் கொழந்தை வேண்டாம் ன்னு ஒரு லெட்டர் வாங்கிக் குடுக்கணுமாம் . . .! அப்புறம் ஆபரேஷன் பண்ணிட்டு ஒரு ரெண்டு மாதத் துக்கு அந்தஎண்ணமே இருக்கப்படாதாம் . . . இப்படி நெறையா இருக்கு . . . என் . . நீ எதுஞ்சும் பண்ணிக்கிடப் போறியா ?

(ரங்கசாமி வேலுச்சாமியின் கால்களைப் பிடித்து)

ரங்கசாமி.—அப்பா என்னே மன்னிச்சிடுங்க அப்பா . . நான் அந்த ஆபரேஷன் பண்ணிக்கிட்டேன் . . . !

வேலுச்சாமி.—(திகைத்து) என்னது ? ஆபரேஷன் பண ணிக்கிட்டியா ?

ரங்கசாமி.—ஆம் அப்பா . . . அதுக்காகத்தான் டவு னுக்குப் போயிருந்தேன். அரசாங்க ஆஸ்பத்திரியி யிலே . . . .

வேலுச்சாமி.—அதெப்படி பண்ணினுங்க . . . . . செல்லம்மா கையெழுத்துப் போட்டுக்கொடுத்ததா ?

ரங்கசாமி.—ஆம் அப்பா . . . !

வேலுச்சாமி.—திருட்டுப் பொண்ணு . . . மூச்சு விட மாட்டேன்னுடிச்சே . . . . !

ரங்கசாமி.—சொன்னு நீங்க கோபிச்சுக்குவீங்க—சம்மதிக்க மாட்டீங்கன்னுதாம்ப்பா இந்த மாதிரி பண்ணி ஞேம் . . ,

வேலுச்சாமி.—என்னடா நீ . . . . இந்த மாதிரிப் பண்ணிட்டே . . . இந்த மாதிரி செய்வேன்னு நான் எதிர்பார்க்கவே இல்லே . . . என்னே ஏமாத்திட்டே . . .

ரங்கசாமி.—என்னப்பா சொல்றீங்க . . . இவ்வளவு நோம் இதை நீங்க ஆதரிச்சுப் பேசினீங்களே அப்பா . . . . !

வேலுச்சாமி.—ஆதரிச்சுப் பேசினது உண்மைதான் . . இப்பவும் அதை ஆதரிக்கிறேன் . . . இல்லேன்னு சொல்லல்லே . . . ஆனு அதுக்காக இந்தமாதிரி திருட்டுத்தனமா ஒன்னேயார் நடந்துக்கச் சொன்னது . . . . ?

ரங்கசாமி.—உங்ககிட்டே சொல்லி சமாதானம் பண்ணிக் கிடலாம்ன்னு நெனேச்சுதான் . . . . !

வேலுச்சாமி.—ஐயா நீ நெனச்சது சரி . . . உண்மை யிலே இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் எனக்குப் பிடிச்சிருந்ததினுலே நீ சொன்னதைக் கேட்டு நான் சமாளிச்சிக்கிட்டேன் . . . ஆனு எனக்கு இந்தத் திட்டம் பிடிக்காமெ இருந்து நீ இந்தமாதிரி பண்ணி யிருந்தா என்ன ஆகியிருக்கும் . . . . ?

ரங்கசாமி.—தப்புதாம்ப்பா . . . . ?

வேலுச்சாமி.—அதுமட்டுமில்லே . . ஒன்னேப்பார்த்துப் பத்து பேரு இதே மாதிரி திருட்டுத்தனமான வழி யிலே இறங்கிட்டா அப்பறம் இந்தத் திட்டத்துக்கே யில்லேகெட்ட பேரு வந்துடும் . . .

ரங்கசாமி.—வாஸ்தவம்தான் . . . . !

வேலுச்சாமி.—இப்பவே இந்தத் திட்டத்தைப்பற்றி ஜனங் கள் பயப்பட்டுக்கிட்டு இருக்காங்க . . . இதிலே இந்தமாதிரியும் ஒரு கெட்ட பேரு அதுக்குக் கிடைக்க ணுமா ?

ரங்கசாமி.—தப்புதாம்ப்பா . . . . இனிமேலே இந்த மாதிரி செய்யமாட்டேம்ப்பா . . . . !

வேலுச்சாமி.—இனிமேலே செய்யறதுக்கு என்ன இருக்கு?

(இருவரும் சிரிக்கிருர்கள்.)

வேலுச்சாமி.—சரி, சரி நாளேக்குக்காலங்காத்தாலே மாணிக் கம்கிட்டே இந்த ஆபரேஷனேப்பற்றிச் சொல்லி வையி . . . . அவனுக்கும் நாலேஞ்சு குழந் தைகள் பொறந்துடுச்சி . . . . !

ரங்கசாமி.—ஆகட்டும்ப்பா . . . . ! அம்மா . . . . அம்மாக்கிட்டே இதைப்பற்றி நீங்கதான் சொல்லி சமாதானம் பண்ணணும் . . . . !

வேலுச்சாமி.—உன் பொஞ்சாதியை நீ சமாதானம் பண் ணிட்டியில்லே . . . . !

ரங்கசாமி.—ஓ . . . இல்லாட்டி அவ கையெழுத்து போட்டுக்கொடுப்பாளா ?

வேலுச்சாமி.—பெறகென்ன ? மற்றதை நான் பாத்துக் குறேன் . . . ! எவ்வளவு நல்ல காரியம் . . . . :! இதுலே யாருக்குப் பயப்பட வேண்டியி ருக்கு . . . !

திரை

"சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துக்கள்":

பொலிவு மிகு பொத்தனூர்

திரு. மி. செல்வராஜ், கிராம சேவக், கபிலர்மலை.

"வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி" எனக் கவிஞர்களால் புகழ்ந்துரைக்கப்படும் கவின் மிகு காவிரி அன்னை, தன் நேசக் கரங்களை நீட்டி அணைப்பது போல, "பொத்தனூர்" என்ற பொலிவு மிகு ஊரின் மருங்கே பாய்வதால், இப்பகுதி வளம் கொழிக்கும் பகுதியாகத் திகழ்கிறது. "பொத்தனூர்" என்றவுடன் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த "போத்தனூரை" ஈண்டு குறிப்பிடுகின்றேன் என்று கொள்ளற்க. கோலமிகு சேலம் மாவட்டத்திலே, தனி சிறந்த நாமக்கல் கோட்டத்திலே, கவின் மிகு கபிலர் மலை வட்டத்திலே இருக்கின்ற பாண்டமங்கலம் என்ற ஊரிலிருந்து இரண்டு கல் தொலைவில் அமைந்திருக்கிறது இந்த பொத்தனூர் என்ற எழில் மிகு ஊர்.

பொத்தனூர் ஒரு நகரப் பஞ்சாயத்தாகத் திகழ்கிறது. இதர கிராமங்களைப்போல் அல்லாமல், ஒரு தனிப்பட்ட கீர்த்தியும், பீடும், பெருமையும், சீரும் சிறப்பும் பெற்று பொலிவுடன் திகழ்கிறது. 1950-ம் ஆண்டிலேயே, அதுவும் பிர்க்கா அபிவிருத்தித் திட்டம் தமிழகத்தில் துவங்கப்பட்ட பொழுதே, "பொத்தனூர்" ஒரு மாதிரிக் கிராமமாக எடுத்துக் கொள்ளப்பட்டது. இத்தனை ஆண்டு காலமாகப் "பொத்தனூரை" பொலிவு மிக்கதோர் மாதிரிக் கிராமமாக மாற்றி அமைக்க வேண்டுமென்று மக்கள் எடுத்துக் கொண்ட தீவிரமான முயற்சிகள் யாவும் வீண் போகவில்லை என்று அட்டியின்றி கூறலாம். உழைக்கும் திறன் கொண்ட உழைப்பாளிகளைப் படைத்த இவ்வூர் மக்கள், தங்களது ஊரை உயர்த்த வேண்டும், உன்னத நிலைக்குக் கொண்டு வர வேண்டும் என்று உயரிய கருத்துக்களை உள்ளத்திலே கொண்டு, எடுத்துக் கொண்ட ஒவ்வொரு முயற்சியும் வீண் போகவில்லை.

கபிலர் மலையிலே வட்டார வளர்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, அது பரிபூர்ண நிலையைப் பெறுவதற்கு முன்னரே— அது பூர்வாங்க விஸ்தரிப்பு வட்டாரமாக (Pre Extension Block) இருக்கும் போதே— வட்டார வளர்ச்சித் திட்டத்தின் உதவி எதுவும் இல்லாமல் பொத்தனூரை ஒரு இலட்சியக் கிராமமாக மாற்றிவிட்ட மாண்பு உண்மையிலேயே பொத்தனூர் பொது மக்களைச் சார்ந்ததாகும்.

ஊரமைப்பும் உன்னத பணியும்

தேவராய சமுத்திரம், புதுப்பாளையம் என்ற இரண்டு ஊர்களைக் கொண்ட பொத்தனூர், சிறியதோர் நகரப் பஞ்சாயத்து எனினும், ஊரமைப்பில் அது 1636·87 எக்கர் நிலப்பரப்பைக் கொண்டது. மக்கள் தொகை 10,000. இங்கே வதியும் குடும்பங்களின் எண்ணிக்கை 1634. சிறந்த பணிகளைச் சீரிய முறையிலே செய்வதிலே இந்த நகரப் பஞ்சாயத்து ஒப்பில்லாத, உன்னத நிலையில் நிற்கின்றது. எத்தனையோ, பயன் தரும் சிறந்த, தேவையான, அதி முக்கியமான நல்ல காரியங்களை, ஆக்க வேலைகளை அரசாங்க உதவி கொண்டும், அரசாங்க உதவி இல்லாமலும், இந்த ஊர் செய்து முடித்திருக்கின்றது.

இவ்வூர் மக்கள் அகத்திலே ஆர்வமும், முகத்திலே வீரக் களையும், செயலிலே துடிதுடிப்பும் கொண்டு, ஆக்க வேலைகளிலே ஈடுபட்டு பல பயனுள்ள சீர்திருத்த வேலைகளைச் செய்கிறார்கள் என்றால், அதன் முழுப் பெருமையும், புகழும் பொத்தனூர் ஊராண்மைக் கழகத் தலைவர் திரு. பி. வி. குப்பியாண்டிப் பிள்ளை அவர்களுக்கே சாரும் என்பதில் மிகை யொன்றுமில்லை. "மக்களின் மனதில் மங்காததோர் நல்லிடம் பெற்று, நீங்காததோர் பாசத்திற்குத் தன்னை ஆளாக்கிப் பொது சேவையில் ஈடுபட்டு கடந்த 25 வருடகாலமாக மக்களின் தலைவராக இருக்கும் இப்பெரியாரின் பெருந்தன்மையினால் தான் நாங்கள் வளமுடன் வாழ முடிகிறது" என்று மக்கள்— இப்பகுதியில் வாழ்வோர்—அவரைப் புகழ்ந்துரைப்பதை செவி இனிக்கக் கேட்டு பல முறை நான் இரும்பூதெய்தியிருக்கிறேன்.

வறுமை ஒழிய......

"நாட்டின் முது கெலும்புகளாகத் திகழும் விவசாயப் பெருங்குடி மக்கள் இல்லை என்றால் ஒரு நாட்டிற்கு, ஏன் உலகத்தின் ஜீவாதாரமே பாதிக்கப்படும்.; பொருளாதாரத்திற்கே பங்கம் ஏற்படும்". பிரதமர் நேரு அவர்கள் கூற்று இது. இதனை நன்குணர்ந்த பொத்தனூர் விவசாயிகள் கிராமப் பொருளாதார வளத்தைப் பெருக்க வேண்டுமென்ற நல் எண்ணத்தோடு கழனிகளிலே, தோட்டங்களிலே அல்லும் பகலும் அனவிரதமும் நெற்றி வேர்வை சிந்த உழைக்கின்றார்கள். "உணவை உற்பத்தி செய்ய வேண்டும், இல்லாமைப் பேயை இல்லையென்று ஓட்ட வேண்டும். வறுமை நோயைப் போக்க வேண்டும்" என்ற உயரிய எண்ணத்தை, அவாவை உள்ளத்திலே கொண்டு, கிராமப் பொருளாதாரத்திற்கு அடிப்படையான "உணவு உற்பத்தியைப் பெருக்குதல்" என்ற முறையில் பஞ்சாயத்து ஸ்தாபனம் வலியுறுத்தி வரும், பொறுக்கு விதைகளை உபயோகித்தல், பசுந்தழை உரங்களை உபயோகித்தல், சப்பானிய முறை சாகுபடி திட்டத்தைப் பின் பற்றுதல், பயிர்களுக்கு நோய், பூச்சி முதலியவை கண்டால் மருந்து தெளித்தல், இன்னும், பல நவீன விவசாய முறைகளைப் பின் பற்றுதல் ஆகிய நல்வழிகளைக் கடைப்பிடித்து, நல்ல முறையில் விவசாயம் செய்து சிறந்த மகசூல்களைப் பெற்று நல் வாழ்வு வாழ்கின்றார்கள்.

காவிரியாறும்—ராஜா வாய்க்காலும்

காவிரியாறும், அதிலிருந்து பிரிக்கப்பட்டிருக்கும் ராஜா வாய்க்காலும் இங்கே இருப்பதால் இங்கேநீர்வளத்திற்கு குறையேயில்லை.வளமான இப்பகுதியில் செழுமைநிறைந்த பூமியில் நெல், கரும்பு, வாழை, கோரை, வெற்றிலை முதலான பயிர்கள் பயிராகின்றன. இவைகளிலிருந்து கிடைக்கும் பலன் தேவைக்கும் மேல், எதிர்ப்பார்ப்பதற்கு மேல் கிடைப்பதால் விவசாயிகள் தங்கள் தேவைக்குப் போக எஞ்சியிருப்பதை செல்வமாக மாற்றி களஞ்சியங்களிலே சேர்த்துக் களிப்புடன் வாழ்கிறார்கள். உணவு உற்பத்தியைப் பெருக்க, பொத்தனூர் பஞ்சாயத்து, விவ

சாயிகளுக்குக் கூறி வரும் அறவுரைகளை விவசாயிகள் மனதில் கொண்டு நடப்பதால் இவ்வூரின் பொருளாதாரம் பெருகியே வருகின்றது.

ஆராய்ச்சிப் பண்ணைகள்

அரசினரால் நடத்தப்பட்டு வரும் ஒரு "வெற்றிலை ஆராய்ச்சிப் பண்ணை பொத்தனூரில் செயல்பட்டு வருகின்றது. இவ்வாராய்ச்சிப் பண்ணை,வெற்றிலைப் பயிரைப் பற்றி நன்கு ஆராயும் பொருட்டும், அப்பயிருக்கு வரும் பூச்சிகள் நோய்கள் முதலியவைகளை ஒழிக்கும் முறைகளைத் தெரிந்து கொள்ளும் பொருட்டும் பல ஆராய்ச்சிகளை செய்து வருகின்றது. இத்திட்டம் விவசாயிகளுக்கு, குறிப்பாக வெற்றிலைக் கொடிக் கால்களில் வேலை செய்பவர்களுக்குப் பெரிதும் உதவி வருகிறது. மக்களும் இத்திட்டத்திற்கு நல் ஆதரவு கொடுத்து வருகிறார்கள். இது போல இன்னும் அரிய பல ஆராய்ச்சிப் பண்ணைகளை அமைத்துப் பொருளாதாரத் துறையை மேம்படச் செய்யலாமா என்று பொத்தனூர் பொது மக்கள் ஆய்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த முயற்சி உறுதியாகப் பயன் அளிக்கும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கிறது.

சுகாதார வாழ்வே சுவையான வாழ்வு

சுகாதாரத் துறையிலே, கிராமத் துப்புரவு வேலைகளிலே இவ்வூர் முன்னணியில் நிற்கின்றது. பஞ்சாயத்தின் உதவி கொண்டும், தனிப்பட்ட நபர்களின் பொருளுதவி கொண்டும் கிராமத்தைச் சுற்றி சிமிட்டியால், சாக்கடைத் தண்ணீர் தெருவில் ஓடி அசுத்தம் விளைவிக்காமலிருக்க வேண்டிய தேவையான வசதிகளைச் செய்திருக்கிறார்கள். தவிரவும், பெண்களுக்குத் தனியான கக்கூஸ், சிறு நீர் கழிவு வசதிகள் ஆகியவைகளும் செய்து கொடுத்திருக்கிறார்கள். அசுத்தப் பொருட்களை—கழிவுப் பொருட்களைக் கம்போஸ்ட் எருவாக மாற்றுவதற்கு ஊரின் ஒரு பகுதியைக் "கம்போஸ்ட் சைட்" டாக ஒதுக்கியிருக்கிறார்கள். காவிரியாற்றிலிருந்து குழாய்கள் மூலம் தண்ணீர் கொண்டு வந்து ஊருக்குக் கேந்திரமான இடத்தில் குழாய்கள் மூலம் தண்ணீர் கிடைக்க வசதி செய்யும் முயற்சியில் தற்போது ஈடுபட்டுள்ளார்கள். இவ்வளவு பெருமைக்குரிய பொத்தனூரில் ஒரு மருத்துவ மனை கூட இல்லாத குறை உண்மையிலேயே பெருங்குறை தான்! இங்குள்ள மக்கள் அருகில் $1\frac{1}{2}$ மைல் தொலைவில் உள்ள வேலூருக்குச் சென்று வைத்திய வசதி பெற வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஆனால், மக்கள் இதில் அவ்வளவு அக்கறையோ, கவனமோ செலுத்துவதாக, அல்லது அதைக் கஷ்டமாகப் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. பொத்தனூரில் ஒரு தாய் சேய் நல விடுதியும் இருக்கின்றது.

கல்வி வசதி

பொத்தனூரில் நாட்டாண்மைக் கழக உயர்நிலைப்பள்ளி ஒன்றும், ஆரம்பப் பள்ளி ஒன்றும் உள்ளது. இரு பள்ளிகளிலும் ஆண், பெண், ஹரிஜன மாணவர்களும் சேர்ந்து கல்வி பயின்று வருகிறார்கள். ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு இலவசமாக அளிக்கப்படுகிறது.

மதி படைத்தோரும் நிதி கொடுத்தோரும்

ஒரு நாடு பிற நாடுகளை விடச் சிறந்தது என்று மக்களால் பாராட்டப்பட வேண்டிய நிலைக்கு, அந்த நாட்டின் இயற்கை வளத்தை விட மக்களின் மனவளம் தான் முக்கிய காரணமாக இருக்க வேண்டும். அதைத் தெரிந்திருக்கின்ற காரணத்தால் தான் என்னவோ, இங்குள்ள மக்கள் மனவளத்தில் நனி சிறந்து விளங்குகிறார்கள். மனவளம் மிக்கோரும், நல்ல மதி படைத்தோரும், ஆக்க வேலைகளில் ஈடுபட்டுப் பெரும் பணியாற்ற நிதி கொடுத்த நேர்மையாளர்களும் சீர்திருத்தச் செம்மல்களும்—செயற்கரிய செய்த பெரியார்களும் இங்கே ஏராளமாக இருக்கிறார்கள். அன்ன சத்திரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் கட்டுதல் இவைகளை விட ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவிப்பதே சிறந்த பணி என்று அமர கவி பாரதியார் கல்வியைப் பெருமைப் படுத்தி,வலியுறுத்திக் கூறியதை ஒப்புக் கொண்டு, கல்விக்காக எங்கள் உழைப்பையும், ஊக்கத்தையும் மட்டுமல்ல, கைப் பொருள் அனைத்தையுமே தர சித்தமாக இருக்கிறோம் என்று முக மலர்ச்சியுடன் பொத்தனூரில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்கு, ஒரு ஆய்வுக் கூடம்—விஞ்ஞானக் கூடம் (Science Block) தேவை என்றறிந்து, 20 ஆயிரம் ரூபாய் பொருட் செலவில் இங்குள்ள பெரு நிலக் கிழார், திரு. எ. நடராஜப் பிள்ளை அவர்கள் ஒரு கட்டிடத்தைக் கட்டிக் கொடுத்துள்ளார்கள். தவிரவும், இவ்வூரில் உள்ள வெற்றிலை வியாபாரிகள் பலர் சேர்ந்து இவ்வூர் உயர்நிலைப் பள்ளிக்குத் "தச்சுக் கூடம்" (Carpentry shed) ஒன்றை, சுமார் 4 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டித் தந்துள்ளார்கள். இன்னும் பள்ளிக் கூடத்திற்கு பம்புசெட்டு ஒன்றை 3 ஆயிரம் ரூபாய் செலவில் திரு. கே. நல்லேந்திரம் பிள்ளை அவர்களும், உயர் நிலைப் பள்ளி மாணவர், பள்ளிச் செய்திகளையும், மற்றும் பயன் தரும் பல விஷயங்களையும் தெரிந்து கொள்ள வானொலிப் பெட்டி ஒன்றையும் திரு. டி. எ. ராஜு செட்டியார் அவர்களும் வழங்கியுள்ளார்கள். இத்தகைய பெரும் குணம் படைத்த கொடை வள்ளல்கள் இருக்கும் வரை பொத்தனூர் பொலிவுற்றுத் திகழும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

சமூகக் கல்வி—குடும்பக்கட்டுப்பாடு

பள்ளி செல்லும் வயதுடைய சிறுவர்கள் பள்ளிக்கு ஒழுங்காகச் சென்று வருவதையும், அத்துடன் குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தப்பட்ட வேலைகளையும் சரிவர கவனிக்க 20 பேர் கொண்ட சமூகக் கல்விக் கமிட்டி ஒன்றை அமைத்துள்ளார்கள். இக்குழுவின் தலைவராக இவ்வூர் பஞ்சாயத்துத் தலைவரும், மற்றும் ஹரிஜன நபர், ஒரு பெண் உறுப்பினர், ஆசிரியர்கள், கிராமத் தலைவர் ஒருவர் ஆகியவர்கள் இந்த சமூகக் கல்விக் குழுவின் உறுப்பினர்களாவர்கள்.

காந்திஜி பூங்கா

அண்ணல் காந்திஜி அவர்களின் உருவச் சிலையை அமைத்து, அதை மக்கள் கூடும் தெரு மருங்கே வைத்து, "காந்திஜி பூங்கா" என்ற சோலையையும் நிறுவி அதைச் சுற்றி மதிலும் எழுப்பி, மக்கள் வந்து மனம் மகிழ்ந்து செல்லும் வகையில் வானொலிப் பெட்டியையும் அங்கே பொருத்தி, அன்றாடச் செய்திகளையும், நாட்டின் நிலவரங்களையும் அறிந்துகொள்ளும் விதத்தில் தினசரிப் பத்திரிகைகளையும் அங்கே போட்டு வைத்து, மக்களுக்கு நல்லதோர் தொண்டினைச் செய்யும் இவ்வூர் பஞ்சாயத்து உண்மையிலேயே "சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துக்கள்" என்ற வரிசையில் ஒன்றாக இடம் பெறும் என்பதில் மிகையில்லை.

பொதுவாக "பொத்தனூர்" இவ்வளவு பொலிவுடனும் —புகழுடனும், ஏற்றத்தோடும்— எழிலோடும், ஆற்றலோடும்— அழகோடும், சீரோடும்— சிறப்போடும் விளங்குகிறது என்றால் இங்குள்ள மக்களின் மனவளம், இங்குள்ள இயற்கை வளத்தைவிட சிறந்திருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

அதிர்ஷ்டம் அழைக்கிறது....

1. 1961 ஜூன் மாதம், சென்னையில் 4-வது பரிசுப் பத்திரக் குலுக்கலை, அமைச்சர் ஸ்ரீ. வெங்கட்ராமன் துவக்கிவைத்தார்.







2. கோயமுத்தூரில், முதற் பரிசுபெற்ற ஸ்ரீ. பெரியசாமி....7. அமைச்சர் ஸ்ரீ. வெங்கட்ராமன் முதற்பரிசைத் திரு பெரியசாமியிடம் அளிக்கிறார்....3. முதலமைச்சர் ஸ்ரீ காமராஜ், சேலத்தில் முதற்பரிசு பெற்ற ஸ்ரீ. சுப்பிரமணியன் அவர்களிடம் பரிசுத்தொகையை அளிக்கிறார்....10. முதற்பரிசு பெற்ற ஸ்ரீ. சுப்பிரமணியன்.... 4, 5. பரிசு பெற்றவர்கள், பரிசை முதல் அமைச்சரிடம் பெறுகிறார்கள்....6. பரிசு பெற்றவர்களுடன் முதலமைச்சர்.

8,9. கோயமுத்தூரில் பரிசு பெற்றவர்கள் அமைச்சர் ஸ்ரீ. வெங்கட்ராமன் அவர்களிடம் பரிசைப் பெறுகிறார்கள்.





1, 2 : மத்திய உள்துறை அமைச்சர் ஸ்ரீ லால் பகதூர் சாஸ்திரி, 10-6-61 அன்று, மேட்டூர் அணையில் தமிழ்நாடு அலுமினியம் கம்பெனிக்கு அடிக்கல் நாட்டினர். விழாவிற்குத் தமிழ் நாட்டு முதலமைச்சர் ஸ்ரீ காமர்ாஜ் தலைமை வகித்தார். அமைச்சர்கள் ஸ்ரீ வெங்கட்ராமன், ஸ்ரீ பக்தவத்சலம் ஆகியோரும், மத்திய ரெயில்வேத் துணை அமைச்சர் ஸ்ரீ எஸ். வி. ராமசாமி அவர்களும் விழாவில் பங்கு கொண்டனர்.

3, 4 : சென்னை மத்திய சிறையில், 6-6-'61 அன்று, அமைச்சர் ஸ்ரீ எம். பக்தவத்சலம், சிறைக் கைதிகளுக்குப் படக் காட்சியைத் தொடங்கி வைத்தார்.

5 : 10-6-'61 அன்று, மத்திய அமைச்சர் ஸ்ரீ லால்பகதூர் சாஸ்திரி, சேலத்தில் மகளிர் பள்ளியைப் பார்வையிட்டார்.

6 : போலீஸ் டெபுடி கமிஷனர் ஸ்ரீ கிருஷ்ண ராஜ், 22-2-'61 அன்று சென்னையில் கைவண்டி இழுக்கும் தொழிலாளர்களுக்குக் காலணிகளை வழங்கினர்.

1. தஞ்சை மாவட்டம் கோட்டூர் வட்டாரப் "பஞ்சாயத்து யூனியன் அலுவலகப் பெயர்ப் பலகை"யை மல்லவராய நல்லூர் பஞ்சாயத் துத் தலைவர், பக்கிரி.தொண்டமான் என்ற பெரியார் திறந்து வைத்தார்.

2. தென்னார்க்காடு மாவட்டம், பறங்கிப் பேட்டை வட்டாரத்தைச் சேர்ந்த வயலாமூர் கிராம மக்களின் பண்டரி பஜனை.





3. தஞ்சை மாவட்டம், அம்மாப்பேட்டை வட்டாரம், சிறந்த பணியாற்றியதற்கான உலாக் கேடயத்தைப் (Rolling Shield) பெற்றது. கேடயத்தை மாவட்டக்கலெக்டர் ஸ்ரீ. சந்திரசேகரன், ஐ.ஏ.எஸ். வட்டார வளர்ச்சி அதிகாரியிடம் அளிக்கிறார்.

4, 5. சீர்காழி பஞ்சாயத்து யூனியன் நடத்திய குடியரசு தின விழா (26—1—61) ஊர்வலக் காட்சிகள்.



செங்கற்பட்டு மாவட்டத்தில் முதலமைச்சரின் சுற்றுப்பயணம்..

1. மாதவரம் பால் பண்ணையில், பால்காரர் மத்தியில் முதலமைச்சர் ஸ்ரீ. காமராஜ்.

2. செங்குன்றம் (Red-Hills) உயர்நிலைப் பள்ளிக்கு நிலதானமளித்த ஸ்ரீ. கோவிந்த ராஜுலு நாயுடு எம்.பி., அதற்கான தஸ்தாவேஜுகளை முதலமைச்சரிடம் அளிக்கிறார்.

3. முதலமைச்சர், ஆவடியில் தொடங்கி வைத்த அரிஜன் காலனியில் அரிஜனங்களுக்குத் துணிகளும் நிலப்பட்டாக்களும் வழங்கினார்.

4. முதலமைச்சர் ஸ்ரீ. காமராஜ், மணலியில் ஒரு தாய்-சேய் நல நிலையத்தை திறந்து வைத்தார்.

5. செங்குன்றத்தில் (Red-Hills) பள்ளிக் குழந்தைகள் மத்தியில் முதலமைச்சர் ஸ்ரீ. காமராஜ்.

6. செங்குன்றத்தில், ஒரு பள்ளிக்கூடத்தில் குழந்தைகளுக்கு மதிய உணவு அளிக்கப்படுவதை, முதலமைச்சர் கண்டு மகிழ்ந்தார்.

R.P.

கிராம நலம்- பகுதி-2. பஞ்சாயத்து-அரசினர் இதழ்

GRAMA NALAM PART II PANCHAYAT GAZETTE

கிராமப் புறங்களில் ஆசிரியைகளுக்கு வீடுகள் கட்டுதல்பற்றிய ஆணையின் சுருக்கம்:

(Construction of quarters for Women Teachers in Rural Areas.)

கிராமப் புறங்களில் ஆசிரியைகளுக்கு வீடுகள் கட்டுவதற்கென்று, மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் "கல்வி"ப் பிரிவின் கீழ் சென்னை மாநிலத்திற்கு ரூபாய் 25. லட்சம் செலவிட வகை செய்யப்பட்டுள்ளது. மூன்றுவது திட்டக்காலத்தில், ஒரு விடுதி ரூபாய் 3,300 செலவில் சுமார் 750 விடுதிகள் கட்ட முடியும் என்று எதிர்பார்க்லாம். ஐந்தாண்டுக் காலத்தில், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் பகுதிக்கும் இரண்டு விடுதிகள் வீதம் கட்டப்படும்.

இந்தவசதியை முழு அளவுக்கு காலா காலத்தில், சிக்கன முறையில் அடையும் வகையில், கீழ்க்கண்டவாறு, ஐந்தாண்டுகளுக்கான செயல் முறை வகுத்துக் கொள்ளப்படலாம் என்று அரசாங்கம் கருதுகிறது.

1961–62—முதல் தொகுதி, இரண்டாவது தொகுதியைச் சேர்ந்த ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஒவ்வொரு விடுதி வீதம் கட்டுதல்.

1962–63—மூன்றுவது தொகுதியைச் சேர்ந்த ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஒவ்வொரு விடுதி வீதம் கட்டுதல்.

1963–64—முதல் தொகுதி, இரண்டாவது தொகுதியைச் சேர்ந்த ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் இரண்டாவது விடுதியைக் கட்டுதல்.

1964–65—மூன்றுவது தொகுதியைச் சேர்ந்த ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் இரண்டாவது விடுதியைக் கட்டுதல்.

1965–66—எல்லாச் சில்லரை வேலைகளையும் முடித்தல்.

1961–62-ஐப் பொறுத்த மட்டில், முதற்தொகுதியைச் சேர்ந்த ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும், ஒவ்வொரு விடுதியைக் கட்டவும், இரண்டாவது தொகுதியைச் சேர்ந்த பதினைந்து பஞ்சாயத்து யூனியன்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விடுதியைக் கட்டவும்' கல்வித்துறையின் 25-ம் தேதி ஏப்ரல் மாதம் 1961-ம் ஆண்டு தேதியிட்ட அரசாங்க ஆணை (எண் 920)யில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த உத்தரவைத் திருத்துகின்ற முறையில்' 1961–62-ல் இரண்டாவது தொகுதியைச் சேர்ந்த ஏனைய 114 பஞ்சாயத்து யூனியன்களிலும் ஒரு யூனியனுக்கு ஒரு விடுதி வீதம் கட்ட, இதன் மூலம் அரசாங்கம் அனுமதியளித்து உத்தரவிடுகிறது.

ஒவ்வொரு விடுதிக்கும், பொதுவாக, ரூபாய் 3,300-க்கு மேல் செலவாகக் கூடாது. பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் கமிஷனர்கள், அந்தப் பகுதிப் பொது மக்களின் முழு ஒத்துழைப்பைப் பெற்று, ஒழுங்காகவும், விரைவாகவும், சிக்கனமாகவும் வேலையை முடிக்க முயல வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப் படுகின்றனர். இந்தக் கட்ட வேலை சம்பந்தமான செலவுகள், முதலில் பஞ்சாயத்து யூனியன் கல்வி நிதியிலிருந்து ஈடு செய்யப்படும். பின்னர், 1961–62 -ம் ஆண்டுக்கான, ஆன செலவுகளுக்கென்று அளிக்கப்படும் மானியத் தொகையில் சேர்த்துக் கொள்ளப்படும். பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு, இக்கட்ட வேலைகளுக்கென்று தனியாக மானியங்கள் அளிக்கப்படமாட்டா.

பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளிகள் இருக்கும், தொலைவான கிராமப் புறப்பகுதிகளில், வீட்டு வசதியில்லாமையால் ஆசிரியைகள் வேலையைஏற்றுக் கொள்ளக் கஷ்டமாக இருக்கும். அந்த இடங்களில் இத்தகைய குடி இருப்புக்கள் கட்டப்படும். கட்டப்பட்ட பின், இவை பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் சொத்தாக இருக்கும். ஆசிரியைகளிடம் இதற்காக வாடகை வசூலிக்கப்பட மாட்டாது.

இந்த விடுதிகளைக் கட்ட, கீழ்க்கண்ட முறையில் இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும் :—

(i) பஞ்சாயத்து யூனியன் நிலம் இருந்தால், அதைப் பயன் படுத்திக்கொள்ள வேண்டும்.

(ii) அவ்வாறு இல்லை என்றால், அரசாங்க நிலமிருந்தால், அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்

(iii) மேற்குறித்த இரண்டு வகை நிலமும் இல்லை என்றால், கிராமத்தாரை, தேவையான நிலம் விடும் படித்தூண்ட வேண்டும்.

(iv) மேற்குறித்த நான்கு வகையிலும் இடம் கிடைக்கவில்லை என்றால்—இதற்கென்று நிலம் வாங்க லாம்.

பஞ்சாயத்து யூனியன் மன்றக் கமிஷனர்கள், இடம் வாங்க வேண்டிய தேவையில்லாத ஊர்களையே இந்த விடுதிகள் கட்டத் தேர்ந்தெடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கமிஷனர்கள் மூன்று மாத வேலைக்கான நடைமுறை அறிக்கை தயாரித்து, கல்வித்துறை இயக்குநருக்கு (Director of Public Instruction) அனுப்ப வேண்டும். அவர், ஒரு தொகுப்பறிக்கையை அரசாங்கத் துக்கு அனுப்பிவைப்பார். இத்திட்டத்திற்கான இந்திய அரசாங்கத்தின் உதவி, இதே ஆண்டில் பயன் படுத்தப்பட வேண்டியிருப்பதால், நடைமுறை ஆண்டிலேயே இத் திட்ட வேலையை முடிக்க எல்லாவகையான நடவடிக்கை யும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

[கல்வித் துறையின் 8—6—61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1385 ன் சுருக்கம்.]

1961-62ம் ஆண்டிலிருந்து, உயர்தர ஆரம்பப் பள்ளிகளில், தனியாக தமிழ்ப் பண்டிதர்களை நியமித்தல்
(*Appointment of separate Tamil Pandits in Higher Elementary Schools from* 1961–62.)

இப்பொழுது நடைமுறையில் உள்ள உத்தரவுகளின்படி' உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் தமிழ்ப் பண்டிதர்கள், செகண்டரி கிரேட் ஆசிரியர்களின் இடத்துக்கு மட்டுமே வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். ஆறுவது முதல் எட் டாவது வகுப்புக்களில், நான்கும் நான்குக்கு மேலும் பிரிவுகள் உள்ள உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் செகண் டரி கிரேட் ஆசிரியர்களின் எண்ணிக்கையுடன், தமிழ்நாடு கல்வி விதிகளின் 13-வது விதியில் கூறப்பட்டுள்ள தகுதி களைப் பெற்றுள்ள தனி—தமிழ்ப் பண்டிதர்களை வேலைக்கு வைத்துக் கொள்ளலாம் என்று, திருத்தப்பட்ட பாடத்தில் தமிழ்ப் படிப்பின் இன்றியமையாமை பெருகியுள்ளதை மனத்தில் கொண்டு கல்வித்துறை இயக்குநர் (Director of Public Instruction) சிபாரிசு செய்துள்ளார்.

அரசாங்கம், கல்வித்துறை இயக்குநரின் இந்தச் சிபாரிசுகளை ஒப்புக்கொண்டு, ஸ்தலஸ்தாபனங்களின்கீழ் உள்ள உயர்தர ஆரம்பப் பள்ளிகளிலும், சீனியர் ஆதாரப் பள்ளிகளிலும் தமிழ்ப் பண்டிதர்களை வேலைக்கு வைத்துக் கொள்ள அனுமதி அளித்தும், தனியார் நிர்வாகத்தில் உள்ள உயர்தர ஆரம்பப் பள்ளிகள், சீனியர் ஆதாரப் பள்ளிகளில் வேலை செய்யும் தமிழ்ப் பண்டிதர்களின் சார்பில், 1961–62 கல்வி ஆண்டிலிருந்து மானியங்களை மதிப்பிட்டுப் பெற அனுமதி அளித்தும் உத்தரவிடு கிறது. இவ்வாறு வேலைக்கு வைத்துக் கொள்ளப்படும் தமிழ்ப் பண்டிதர்கள், உயர்நிலைப் பள்ளியில் வேலை செய்யும் இரண்டாவது கிரேடு தமிழ்ப் பண்டிதர்களின் சம்பள வீதத்தில் சம்பளம் வழங்கப்படவும், மானியங் களைப் பெறவும் அனுமதிக்கப்படுகின்றனர்.

தமிழ்ப் பண்டிதர்களை வேலைக்கு வைத்துக்கொள்வ தனாலாகும் செலவுகள் (தஞ்சாவூரைத் தவிர) ஏனைய மாவட்டக் கழகங்களாலும், பஞ்சாயத்து யூனியன் மன்றங் களாலும் 1961–62-ம் ஆண்டுக்கு அளிக்கப்படும் ரொக்க மானியத்தைக்கொண்டு ஈடு செய்யப்படும். தஞ்சாவூர் மாவட்டக் கழகமும், முனிசிபல் மன்றங்களும், தம் 'ஆரம்பக் கல்வி நிதிக்கணக்கி' லிருந்து இந்தச் செலவை ஈடுகட்ட வேண்டும்.

(கல்வித்துறையின் 14-2-61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 334)

உயர்தர ஆரமபப் பள்ளிகளிலும், சீனியர் ஆதாரப் பள்ளிகளிலும் உடற்பயிற்சி ஆசிரியரை வேலைக்கு வைத்தல் பற்றிய உத்தரவு

தனியார் நிர்வாகத்தில் உள்ள சீனியர் ஆதாரப் பள்ளி களிலும், உயர்தர ஆரம்பப் பள்ளிகளிலும் உடற்பயிற்சி ஆசிரியர்களை வேலைக்கு அமர்த்தவும், அவர்களுடைய சம்பளம், படிச் செலவுகளை மாநில நிதிகளிலிருந்து அளிக்கப்படும் மானியத்தில் சேர்த்துக்கொள்ளவும் கல்வித்துறை இயக்குநர் கூறிய யோசனைகளை அரசாங்கம் அங்கீகரிக்கிறது. 1961–62-ம் ஆண்டில், இத்திட்டத்தை அமுல் நடத்துவதற்கென்று, 80 உதவிபெறும் உயர்தர ஆரம்பப் பள்ளிகளையும், சீனியர் ஆதாரப் பள்ளிகளையும் தேர்ந்தெடுக்க உத்தரவிடுகிறது.

கீழ்க்கண்ட விதிகளுக்குட்பட்டு, இப்பள்ளிகள் தேர்ந் தெடுக்கப்படவேண்டும் :—

(i) 400 அல்லது அதற்கு மேற்பட்ட பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கூடங்களாகவும், $1\frac{1}{2}$ ஏகர் பரப்புக்குக் குறையாத பரப்புள்ள விளையாட்டு வெளி உள்ள பள்ளிகளாகவும் இருப்பவைகளைத் தேர்ந்தெடுக்க வேண் டும். இத்தகைய பள்ளிகளின் எண்ணிக்கை மிகுதியாக இருந்தால்—

(அ) 400 பிள்ளைகளுக்கு மேல் படிக்கும், 2 ஏகருக்கு மேல் பரப்புள்ள விளையாட்டு வெளி உள்ள

தும், தகுதியுள்ள உடற்பயிற்சி ஆசிரியரின் தேவை யுள்ளதுமான பள்ளிகளும் ;

(ஆ) 400 அல்லது அதற்கு மேற்பட்டபிள்ளை கள் படிக்கும், $1\frac{1}{2}$ ஏகருக்கு மேல் பரப்புள்ள விளையாட்டு வெளி உள்ளதுமான பள்ளிகளும் முறையே முதலிடம் அளிக்கப்பட வேண்டும்.

மேற் குறிப்பிட்ட முறைப்படி, சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அதிகாரிகள் (District Educational Officers) உடற்பயிற்சி ஆசிரியர்களை அமர்த்த வேண்டிய பள்ளி களைத் தேர்ந்தெடுக்கவும், ஒவ்வொரு கல்வி மாவட்டம் சம்பந்தப்பட்ட வரையிலும் உடற்பயிற்சி ஆசிரியர்களின் நியமன எண்ணிக்கை பற்றிய, கல்வித்துறை இயக்குநரின் 19-4-61 கடிதத்துடன் அனுப்பப்பட்ட பட்டிய லின்படி ஆசிரியர்களை வேலைக்கு வைக்கவும், கல்வித்துறை இயக்குநர் கூறியுள்ள யோசனையை அரசாங்கம் அங்கீகரிக்கிறது. கல்வித் துறை இயக்குநர் மாவட்டங் களுக்கு ஒதுக்கியுள்ள உடற்பயிற்சி ஆசிரியரை வேலைக்கு வைக்க வேண்டிய பள்ளிகளின் எண்ணிக்கையிலும், பள்ளிகளைத் தேர்ந்தெடுக்கும் விதி முறைகளிலும் மாற்றம் செய்ய விரும்பினால் அரசாங்கத்தின் முன் அனுதிபெறவேண்டும்.

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட, உயர்தர ஆரம்பப் பள்ளிகள்—சீனியர் ஆதாரப் பள்ளிகளின் நிர்வாகத் தினர் அனுமதிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிகை யுடன், முழுதும் தகுதியுடைய உடற்பயிற்சி ஆசிரியர்களை வேலைக்கு அமர்த்துவதுடன், அவர்களுக்கு ரூபாய் 90—4—110—3—140 என்ற விகிதத்தில் சம்பள மும், வழக்கமான பஞ்சப்படியும் கொடுக்க வேண்டும்.

அரசாங்க உதவி பெறும் உயர்தர ஆரம்பப் பள்ளிகள் —சீனியர் ஆதாரப்பள்ளிகள், இது விஷயத்தில் செய்யும் செலவு, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்பக் கல்வி வளர்ச்சிப் பிரிவில், இதற்கென வகுக்கப்பட்ட கணக்குப் பிரிவில் பற்று வைக்கப்படவேண்டும்.

400-ம் அதற்கு மேலும் பிள்ளைகள் படிக்கும், $1\frac{1}{2}$ ஏகருக்குக் குறையாத பரப்புள்ள விளையாட்டு வெளி உள்ள பள்ளிகளில், முழுத் தகுதியுடைய உடற்பயிற்சி ஆசிரியர்களை வைக்க ஸ்தல ஸ்தாபன நிர்வாக அதிகாரிகளுக்கு அரசாங்கம் அனுமதி அளிக்கிறது.

ஸ்தல ஸ்தாபனங்கள், இத்தகைய உடற்பயிற்சியாசிரி யர்களை வேலைக்கு வைப்பதனால் ஏற்படும் செலவை (தஞ்சாவூர் தவிர ஏனைய) மாவட்டக் கழகங்களும், பஞ்சா யத்து யூனியன் மன்றங்களும், அவற்றுக்கு அளிக்கப்படும் வட்டார மானியங்களிலிருந்து ஈடு செய்யும். தஞ்சா வூர் மாவட்டக் கழகமும், முனிசிபல் மன்றங்களும் இச் செலவை அவற்றின் ஆரம்பக்கல்வி நிதிக் கணக்கிலிருந்து ஈடு செய்யும்.

(கல்வித்துறையின் 11-5-61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 1057)

உயர்தர ஆரம்பப் பள்ளிகளுக்கு, பட்டமும், பயிற்சியும் பெற்ற ஆசிரியர்களைத் தலைமையாசிரியர் களாக வேலைக்கு வைத்தல்: அவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான விதி முறைகள் :

(Appointment of Graduate Trained Teachers as Headmasters of complete Higher Elementary Schools.)

முழுஉயர்தர ஆரம்பப் பள்ளிகளின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன், அப்பள்ளிகளுக்கு, பட்டமும், பயிற்சியும் பெற்ற ஆசிரியர்களைத் தலைமையாசிரியர்களாக அமர்த் தவும், அவர்களுடைய மானியத் தொகை மதிப்பீடு எல்.டி. சம்பள விகிதத்தில் அமையவும் கல்வித் துறை இயக்குனர் (Director of Public Instruction) செய்துள்ள சிபாரிசுகளை அரசாங்கம் ஒப்புக்கொண்டு 1961-62–ம் ஆண்டில் இத் திட்டத்தைச் செயல் படுத்தத் தனியார் நிர்வாகத்திலுள்ள 100 பள்ளிகளைத் தேர்ந்தெடுக்க உத்தரவிடுகிறது.

மானியம் பெறும் உயர்தர ஆரம்பப் பள்ளிகள் (Aided Higher Elementary Schools) கீழ்க்கண்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் :

(1) பட்டமும் பயிற்சியும் பெற்ற ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாய்ப் பணி புரியும் உயர்தர ஆரம்பப் பள்ளிகள் (அவை 400க்குக் குறைந்த பிள்ளைகளைக் கொண்டதாக இருந்தாலும்) முதலில் தேர்ந்தெடுக்கப் பட வேண்டும்.

(ii) 400-ம் அதற்கு மேற்பட்டும் பிள்ளைகளைக் கொண்டு, நன்கு நிர்வகித்து வரப்படுகின்ற. பயிற்சி பெற்ற பட்டதாரிகளின் சேவை தேவைப்படும் பள்ளிகள்.

கல்வித்துறை இயக்குநர் தம் 19–4–61 தேதிய கடிதத்துடன் அனுப்பியுள்ள பட்டியலில் குறிப் பிட்டுள்ள, மாவட்ட வாரியாக ஒதுக்கியுள்ள தேர்ந் தெடுக்கப்பட வேண்டிய பள்ளிகளின் எண்ணிக்கையை அரசாங்கம் ஒப்புக்கொள்கிறது. பல்வேறு மாவட்டங் களுக்கு ஒதுக்கியுள்ள பள்ளிகளின் எண்ணிக்கையிலும், அவை தேர்ந்தெடுக்கப்பட வகுக்கப்பட்டுள்ள விதி முறை களிலும் மாற்றம் செய்யப்பட வேண்டியது தேவை யென்று கல்வித்துறை இயக்குநர் கருதினால், அதற்கு அவர் அரசாங்கத்தின் முன் அனுமதிபெற வேண்டும்.

மானியம் பெறும் உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் தலைமை யாசிரியராக அமர்த்தப்படும் பட்டமும் பயிற்சியும் பெற்ற ஆசிரியர்கள் பி. டி. ஆசிரியர்களின் சம்பள விகிதத்தைப் பெறவும், அதே விகிதத்தில் மானியத் தொகையைக் கேட்டுப் பெறவும் அனுமதிக்கப் படுகிறார்கள்.

ஸ்தல ஸ்தாபனங்களின் நிர்வாகத்தில் இருக்கும், 400ம் அதற்கு மேற்பட்டும் பிள்ளைகள் படிக்கும் முழு உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் பட்டமும் பயிற்சியும் பெற்ற ஆசிரியர்களைத் தலைமையாசிரியர்களாக அமர்த்தவும், உயர் நிலைப் பள்ளியில் வேலை செய்யும் பி. டி, ஆசிரியர்களின் சம்பள வீதத்தில் இவர்களுக்கும் சம்பளம் அளிக்கவும் அரசாங்கம் ஸ்தல ஸ்தாபன நிர்வாக அதிகாரி களுக்கு அனுமதிஅளிக்கிறது.

மானியம் பெறும் உயர்தர ஆரம்பப் பள்ளிகளைப் பொறுத்தமட்டில் இத் தலைமை ஆசிரியர் வேலை சம்பந்தமாக ஆகும் செலவுகள், அதற்கென அமைந்த ஆரம்பக் கல்விக் கணக்குப் பிரிவில் பற்று வைக்கப் பட வேண்டும். ஸ்தல ஸ்தாபனங்கள் வேலைக்கு அமர்த்தும் தலைமையாசிரியர்களைப் பொறுத்த செலவுகள் (தஞ்சாவூர் தவிர, ஏனைய) மாவட்டக் கழகங்களும், பஞ்சாயத்து யூனியன் மன்றங்களும் அவற்றுக் களிக்கப்படும் வட்டார மானியங்களைக் கொண்டு ஈடு செய்யப்படும். தஞ்சாவூர் மாவட்டக்கழகமும், முனிசிபல் மன்றங்களும் அவற்றின் ஆரம்பக் கல்வி நிதிக் கணக்கிலிருந்து இச் செலவை ஈடு செய்யும்.

(கல்வித்துறையின் 11-5-61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 1063)

60 வயதை அடையாத, ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு மறுபடியும் வேலை கொடுத்தல்:

(Re-employment of superannuated Secondary Grade Teachers who have not attained the age of 60.)

ஏற்கெனவே ஓய்வு பெற்று, ஆனால் 60 வயதை அடையாத செகண்டரி கிரேட் ஆசிரியர்களை, 1961–62 ஆண்டில், ஆரம்பப் பள்ளிகளில் வேலைக்கு வைத்துக் கொள்வது சம்பந்தமான கல்வித்துறை இயக்குநரின் சிபாரிசை அரசாங்கம் ஒப்புக் கொள்கிறது. அதன் படி, கீழ்க்கண்ட விதிகளுக்குட்பட்டு, அவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவார்கள் :

(i) உடல்நலத் தகுதியுடைய ஆசிரியர்கள்.

(ii) ஒழுக்கமும், ஒழுங்கும் திருப்திகரமாக அமைந்த ஆசிரியர்கள்.

(iii) 55 வயதுக்கு மேற்படாத செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் வேலைக்குக் கிடைக்கப் பெறுமல் இருந்தால்..

கல்வித்துறையின் 9–2–1959 தேதியிட்ட அரசாங்க ஆணை 249-ன்படியும், 16–3–1961 தேதியிட்ட அரசாங்க ஆணை 552-ன்படியும் மறுபடியும் வேலையில் நியமனம் செயயப்பட்டவர்களை இந்த உத்தரவுகள் பாதிக்கா.

(கல்வித் துறையின் 2-6-61தேதியிட்ட அரசாங்க ஆணை. எண் 1329)

பள்ளிக் கூடங்கள், மருந்தகங்கள் ஆகியவற்றின் பெயர்ப் பலகை மாற்றம் :

ஆரம்பப் பள்ளிகள், மருந்தகங்கள் முதலான அமைப்புக்கள், இதுவரை, நிர்வகித்து வந்த ஸ்தல ஸ்தாபனங்களின் பெயரால் இருப்பதை மாற்றவும், தென்னார்க்காடு மாவட்டத்தில், ஏழு பஞ்சாயத்து யூனியன்களின் எல்லைகளிலுமுள்ள பள்ளிகள், மருந்தகங்கள் ஆகியவற்றின் பெயர்களை (மாவட்டக்கழகப்பள்ளி, லோகல்பண்டு மருந்தகம் என்றுஇருப்பவற்றை) பஞ்சாயத்து யூனியன் பள்ளி, பஞ்சாயத்து யூனியன் மருந்தகம் என்று முறையே மாற்றி அமைக்கவும் ஆணைபிறப்பிக்கலாம் என்று தென்னார்க்காடு மாவட்டக் கலெக்டர் கேட்டுக் கொண்டுள்ளார். அவருடைய ஆலோசனையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, இதுவரை ஸ்தல ஸ்தாபனங்களினால் நிர்வகிக்கப்பட்டு, இப்பொழுது பஞ்சாயத்து யூனியன்களிடம் நிர்வாக மாற்றம் செய்யப் பட்டுள்ள மாநிலத்திலுள்ள எல்லா அமைப்புக்களின் பெயர்ப் பலகைகளையும், பஞ்சாயத்து யூனியன் பள்ளி, பஞ்சாயத்து யூனியன் மருந்தகம் முதலான, பொருத்தமன பெயர்களாக மாற்ற ஆணை பிறப்பிக்கிறது.

மேற்கண்ட ஆணையைச் செயல்படுத்த ஏற்படும் செலவுகள், பஞ்சாயத்து யூனியன் நிதிகளிலிருந்து ஈடு செய்யப் படவேண்டும்.

(கிராம அபிவிருத்தி—தல நிர்வாகத்துறையின் 1961-ம் வருடம் ஜூன் மாதம் 22-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1739)

பவானிசாகர் நல்லுறவு ஆய்வு நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ள வட்டாரங்கள்

தேர்ந்தெடுக்கப்பட்ட சில விஷயங்களைக் குறித்து முறையான, ஆழ்ந்த, ஆராய்ச்சிகளை நடத்துவதற்கென்று மூன்று அல்லது நான்கு வட்டாரங்களை பவானிசாகரில் உள்ள " நல்லுறவு-ஆய்வு நிலைய "த்துடன் இணைக்க இந்திய அரசாங்கம் யோசனை கூறியுள்ளது. பவானிசாகர், " நல்லுறவு-ஆய்வு நிலைய "த் தலைவர், கீழ்க்கண்ட நான்கு வட்டாரங்களையும் மேற்படி நிலையத்துடன் " ஆராய்ச்சி வட்டாரங்கள் " என்ற முறையில் இணைக்கலாம் என்று யோசனை கூறியுள்ளார்.

(i) பெரியநாயக்கன்பாளையம்.

(ii) சத்தியமங்கலம்.

(iii) தாளவாடி.

(iv) கோபிசெட்டிபாளையம்.

இந்திய அரசாங்கம், பவானிசாகர் " நல்லுறவு-ஆய்வு நிலைய "த் தலைவர் ஆகியோருடைய யோசனைகளை அரசாங்கம், ஏற்றுக்கொண்டு மேற்குறிப்பிட்ட நான்கு வட்டாரங்களையும் " ஆராய்ச்சி வட்டாரங்கள் " என்ற முறையில் இந்த " நல்லுறவு ஆய்வு நிலைய"த்துடன் இணைத்து உத்தரவிடுகிறது.

மேலும், கீழ்க்கண்ட நடைமுறை விதிகளையும் பிறப்பிக்கிறது :—

(i) தாளவாடி வட்டார வளர்ச்சி அதிகாரியும், பெரியநாயக்கன்பாளையம், சத்தியமங்கலம், கோபி செட்டிபாளையம் ஆகிய பஞ்சாயத்து யூனியன்களின் கமிஷனர்களும் முறையே வட்டார வளர்ச்சிக்குழுக்கள், பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் கூட்டத் தேதியை " நல்லுறவு ஆய்வு நிலைய"த் தலைவருக்கு முன்னதாக அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அக் கூட்டங்களில் அவர் பார்வையாளராகக் கலந்து கொள்வார். அவர் அக்கூட்ட விவாதங்களிலும், ஓட்டெடுப்பிலும் கலந்துகொள்ள மாட்டார்.

(ii) இவ் வட்டாரங்களின் பணியாளர்கள், அவர்களுடைய வழக்கமான கடமைகளுடன் " நல்லுறவு-ஆய்வு நிலைய "க் கல்வி ஆராய்ச்சிப் பணியாளர்களுடன், அவர்களுடைய சில முக்கிய விஷயங்களைப் பற்றிய ஆராய்ச்சியிலும், மக்கள் நிறுவனங்களாகிய பஞ்சாயத்துக்கள், கூட்டுறவுச் சங்கங்கள் முதலானவை பற்றிய ஆராய்ச்சியிலும் ஒத்துழைக்க வேண்டும்.

(iii) இந்த ஆய்வு நிலையத்துடன் இணைக்கப்பட்ட வட்டாரங்களின் நிர்வாகப் பொறுப்பு தொடர்ந்து வட்டார வளர்ச்சி அதிகாரி, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் ஆகியோரிடையேயே இருந்து வரும்.

(iii) சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அதிகாரியும் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களும் வட்டாரப்பணியாளர்கள், " நல்லுறவு ஆய்வு நிலைய " ஆராய்ச்சிப் பணியாளர்கள் ஆகியோரின் கூட்டு ஆராய்ச்சிக் கூட்ட அமைப்புக்கு வேண்டிய எல்லா வசதிகளையும், ஒத்துழைப்பையும் " நல்லுறவு-ஆய்வு நிலைய"த் தலைவருக்கு அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இந்த வட்டாரங்களின் வட்டார வளர்ச்சி அதிகாரி, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் ஆகியோரும் பவானிசாகர் " நல்லுறவு-ஆய்வு நிலைய"த்தில் நடத்தப்படும் விவாத அரங்குகளில், அந்த நிலையத் தலைவரின் சிறப்பு அழைப்பின் பேரில் சென்று, விவாதங்களில் கலந்து கொண்டு, உரையாற்ற அனுமதிக்கப் படுகின்றனர். அத்தகைய, அவர்களின் விஜயங்கள், வட்டாரங்களில் அவர்களுடைய வழக்கமான கடமைகளுக்கு இடையூறாக இருத்தல் கூடாது. அவர்கள், " நல்லுறவு-ஆய்வு நிலைய"த்தில் இருந்து தம் பணிக்கென்று ஏதாவது ஊதியத்தைப் பெறுவதாயிருந்தால், அதற்கு, அரசாங்கத்தின் முன் அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

(கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத் துறையின் 1-6-61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 1563)

1962-1963-ம் ஆண்டின் முதல் நிலை வட்டாரங்களில், மாதிரி வளர்ச்சிப் பணி தொடங்க வட்டாரங்களைத் தேர்ந்தெடுத்தல் :

(*Pre-extension work in Stage I Blocks of 1962–63 (April Series.) Selection of Blocks.*)

இந்த உத்தரவில் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு 1-ல் கூறப்பட்டிருக்கும் 32 வட்டாரங்களிலும், விவசாயத்தில், மாதிரி வளர்ச்சிப் பணியைத் தொடங்க அரசாங்கம் உத்தரவிடுகிறது. இணைப்பு 1-ன் 4-வது பத்தியில் வட்டாரங்களில் அடங்கிய பகுதிகளாகக் குறிக்கப்பட்டிருப்பவை, 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 7 (3)-வது பிரிவின் கீழ், ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் கூறப்பட்டபடி உள்ளனவா, அல்லது அறிக்கைகள் வெளியிடப்படாதவைகள் சம்பந்தமாக, பிறப்பிக்கப்பட்ட எல்லைகள் நிர்ணயிப்பு உத்தரவுகளில் கூறப்பட்டபடி உள்ளனவா என்று பரிசோதித்துப் பார்க்கும்படி கலெக்டர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அரசாங்கம் கீழ்க்காணும் தொடர்ந்த உத்தரவுகளைப் பிறப்பிக்கிறது.

(i) வட்டத்தின் பொறுப்பேற்றுள்ள விவசாயத்துறை துணை இயக்குநர் (Deputy Director of Agriculture) மாதிரி வளர்ச்சிப்பணி வட்டாரத்திற்கென வேலை முறையைத் தயாரித்து, அதை, வட்டாரத்துக்கென அங்கீகரிக்கப்பட்டுள்ள பணியாளர்களின் உதவியைக் கொண்டு செயல்படுத்த வேண்டும்.

(ii) மாதிரி வளர்ச்சிப் பணியின் விவசாயப் பகுதிக்கு ஒரு குறைந்த அளவு வேலை முறையை, இந்த உத்தரவின் இணைப்பு (2)-ல் வரையறுக்கப்பட்டுள்ள முறையைப் பின்பற்றித் தயாரிக்க வேண்டும்.

(iii) சம்பந்தப்பட்ட இலாகாவின் துணையுடன், வட்டாரத்தில் தோற்றுவிக்கத்தக்க நீர்ப்பாசனவசதிகளின் கணக்கெடுப்பையும், மதிப்பீட்டையும், எடுத்து, வட்டாரம் முதல் நிலையை அடையும்பொழுது செயல்படுத்தத்தக்க முறையில் தயாராக வைத்திருக்க வேண்டும்.

கிராம அபிவிருத்தித் திட்ட துறையின் 1958 டிசம்பர் 3-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 3296-ல் வரையறுக்கப்பட்டு, ஒப்படைக்கப்பட்ட வட்டாரங்களின் கணக்கெடுப்பு அறிக்கையின் (Block survey report) அடிப்படையில் புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களின் எல்லாக் கிராமங்களிலும் ஒரு பரமலான கணகெடுப்பு நடத்தவேண்டும். சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட, வட்டாரக் கணக்கெடுப்பு அறிக்கையின் திருத்தப்பட்ட ஒப்படைப்புப் பிரதிகள் இரண்டினை, வட்டாரங்கள் தொடங்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதத்துக்குள் தமிழ்நாடு அரசாங்கத்தின் கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறைக்கு சமர்ப்பிக்கவேண்டும்.

கீழ்க்கண்ட பணியாளர்களுக்கென்று 1962 பிப்ரவரி 28-ம் தேதி வரை ஒவ்வொரு மாதிரி வளர்ச்சிப் பணி வட்டாரத்துக்கும் செய்யப்படும் செலவுகள், மாதிரி வளர்ச்சிப் பணி வட்டாரங்களின் வரவுசெலவுத் திட்டத்திலிருந்து செலவு செய்யப்பட்டதாகக் கணக்கிடப்படும். ஒரு வட்டார வளர்ச்சி அதிகாரி, ஒரு விவசாய வளர்ச்சிப் பணி அதிகாரி, ஐந்து கிராம சேவகர், ஒரு தட்டெழுத்தாளர் (Typist) வழக்கமான சம்பளம்-படி விகிதத்தில் ஒரு ஏவலாளர் (Peon) முதலியோர் அந்தப் பணியாளர்களாவார்கள். அவர்களுடைய பதவிக்காலம் 1962 பிப்ரவரி 28-ம் தேதி வரையில் இந்த உத்தரவின் மூலம் அனுமதிக்கப்படுகின்றது. இந்த அனுமதி, மேஜை, நாற்காலி வகைகளை அளித்தல், அமைத்தல், இப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வட்டார அலுவலகத்துக்கும் ஒவ்வொரு தட்டெழுத்துப்பொறி (Typewriter) வீதம் அளித்தல் முதலானவைகளுக்காக ஆகும் செலவுகளுக்கும் சேர்த்தே அளிக்கப்படுகிறது. மேஜை-நாற்காலிகள், இதர அலுவலகத்துணைப் பொருள்கள் பொதுத் துறையின் 1961 செப்தெம்பர் 30-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2647-ல் கூறப்பட்டுள்ள விகிதத்தின் படியும், விதிகளின் படியுமே வழங்கப்படும்.

வளர்ச்சிப் பணி வேலை முறையை நிறைவேற்றவும் அதற்கான பொருளாதார வழிவகைகளுக்கும், கிராம அபிவிருத்தி—தல நிர்வாகத் துறையின் 1960 ஆகஸ்டு 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை (664) யும், 1961 ஜனவரி 25-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை (211)-யும் மேற்கொள்ளப்படும். அதாவது, பஞ்சாயத்து வளர்ச்சி திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் அடிப்படையில் அந்த வேலைமுறை செயல்படுத்தப்பட வேண்டும்.

இந்த வட்டாரங்களில், மாதிரி வளர்ச்சிப் பணிக்காலத்தில், இந்திய அரசாங்க மானியங்களை எதிர்ப்பார்த்து செய்யப்படும் செலவுகளின் உச்ச அளவுத் தொகை ரூ 18,800 (ரூபாய் பதினெட்டாயிரத்தி யெட்டுநூறு மட்டும்) என்று வரையறை செய்யப்பட்டுள்ளது.

இந்த உத்தரவின் இணைப்பு—3-ல் கூறப்பட்டுள்ளபடி, வரையறுக்கப்பட்ட ஒப்படைப்பின்கீழ் புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வட்டாரங்களைப் பற்றிய விவரங்களை, இரண்டு பிரதிகள் தயாரித்து, தமிழ்நாடு அரசாங்கம் கிராம அபிவிருத்தி, தலநிர்வாகத் துறை (P5)-க்கு அனுப்பிவைக்கும்படி கலெக்டர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இந்த வட்டாரங்களின் பணியாளர்களுடைய உபயோகத்துக்கென்று, சமுதாய வளர்ச்சி-கூட்டுறவு அமைச்சகம் (Ministry of Community Development and Co-operation) வெளியிட்டுள்ள புத்தகங்களின் தொகுதிகள் முழுதும் தனியாக தருவித்து வழங்கப்படும்.

அலுவலகம்—பணியாளர்களுக்கு என்று ஆகும் சில்லரைச்செலவுகள், “47-A சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், தேசிய வளர்ச்சிப் பணிகள், ஸ்தல வளர்ச்சி வேலைகள் (1) சமுதாய வளர்ச்சி வேலை முறை” என்ற பொருத்தமான விளக்கமானத் துணைத் தலைப்பின்கீழ் பற்றுவைக்கப்பட வேண்டும்.

இணைப்பு 1

தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளின் விவரம் :

வடார்க்காடு மாவட்டம்.

1	வந்தவாசி	வந்தவாசி ; சாலவேடு பிர்க்காக்கள்.
2	அனக்காவூர்	அனக்காவூர், தேத்துறை பிர்க்க
3	கஸ்தாம்பாடி	கஸ்தாம்பாடி, கண்ணமங்கலம், விண்ணமங்கலம் பிர்க்காக்கள்
4	திமிரி	மிரி, கலவை பிர்க்காக்கள்.

தென்னார்க்காடு மாவட்டம்.

5 T. வல்லம் .. , .. T. வல்லம், மேல் ஒலக்கூர் பிர்க்காக்கள்.

6 விக்கிரவாண்டி .. .. விக்கிரவாண்டி. கஞ்சனூர் (ஒருபகுதி) பிர்க்காக்கள்.

7 கண்டமங்கலம் .. கண்டமங்கலம், வளவனூர் (ஒரு பகுதி) பிர்க்காக்கள்.

8 திருக்கோயிலூர் .. திருக்கோயிலூர் ஒரு பகுதி), மணலூர்ப் பேட்டை (ஒருபகுதி) பிர்க்காக்கள்.

செங்கற்பட்டு மாவட்டம்.

9 சோழவரம் .. .. சோழவரம, ஆரணி பிர்க்காக்கள்.

10 திருவாலங்காடு .. பூனிமாங்காடு, கனகம்மசத்திரம், மணவூர் பிர்க்காக்கள்.

கோயமுத்தூர் மாவட்டம்.

11 குடிமங்கலம் .. .. குடிமங்கலம் பிர்க்கா.

12 காரமடை (மேட்டுப்பாளையம்.) மேட்டுப்பாளையம் பிர்க்கா முழுதும்; சிறுமுகை பிர்க்காவின் ஒருபகுதி.

13 சர்க்கார் சாமக்குளம் .. சர்க்கார் சாமக்குளம் பிர்க்கா.

மதுரை மாவட்டம்.

14 தேனி .. .. .. தேனி பிர்க்காவின் ஒருபகுதி.

15 சின்னமனூர் .. .. உத்தம பாளையம், கம்பம் பிர்க்காக்களின் பகுதிகள்.

இராமநாதபுரம் மாவட்டம்.

16 திருப்புவனம் .. .. சிவகங்கை பிர்க்கா (ஒரு பகுதி).

சேலம் மாவட்டம்.

17 பாலக்கோடு .. .. பாலக்கோடு பிர்க்கா, கரியமங்கலம் பிர்க்காவின் ஒரு பகுதி.

18 ஓமலூர் .. .. ஓமலூர் பிர்க்கா.

19 தாரமங்கலம் .. தாரமங்கலம் பிர்க்காவின் ஒரு பகுதி.

20 நாமக்கல் .. .. நாமக்கல் மேற்கு எஸ்டேட் பிர்க்கா, நாமக்கல் வடக்கு எஸ்டேட் பிர்க்கா, மோகனூர் எஸ்டேட் பிர்க்காவின் பகுதி.

21 மல்ல சமுத்திரம் .. மல்ல சமுத்திரம் பிர்க்கா.

22 சேலம் .. .. முனிசிபல் பகுதி நீங்கலாக சேலம் பிர்க்காவின் பகுதி.

தஞ்சாவூர் மாவட்டம்.

23 பேராவூரணி .. .. பேராவூரணி, திருச்சிற்றம்பலம் பிர்க்காக்கள்.

24 திருவோணம் .. செல்லாத்தூர், காவாலிப்பட்டி, கந்தர்வக்கோட்டை, கள்ளக்கொல்லை.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

25 அன்னவாசல் .. .. குடுமியாமலை, இலுப்பூர், நார்த்தமலை (ஒரு பகுதி) பிர்க்காக்கள்.

26 மருங்கபுரி .. .. மருங்கபுரி, வளநாடு, துவரங்குறிச்சி பிர்க்காக்கள்.

27 பொன்னமராவதி .. பொன்னமராவதி, கரையூர் பிர்க்காக்கள்.

28 புல்லம்பாடி .. .. புல்லம்பாடி, பெருவளப்பூர் பிர்க்காக்கள்.

29 ஜெயங்கொண்டான் .. ஜெயங்கொண்டான் பிர்க்கா.

திருநெல்வேலி மாவட்டம்

30 விளாத்திக்குளம் .. விளாத்திக்குளம் பிர்க்கா முழுதும்.

31 திருச்செந்தூர் .. திருச்செந்தூர் பிர்க்கா.

32 நாங்குனேரி .. .. மூலக்காரப்பட்டி, விஜயநாராயணம், நாங்குனேரி பிர்க்காவில் 10 கிராமங்கள், சிங்கிக்குளம் பிர்க்காவில் 2 கிராமங்கள்.

இணைப்பு II

மாதிரி வளர்ச்சிப் பணியில், விவசாயத் துறையில் கைக்கொள்ள வேண்டிய குறைந்த பட்ச வேலைமுறை :

(i) தொடக்கத்திலிருந்து ஆறு மாதங்களில், வட்டாரத்தில் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் நிலவி வரும் விவசாய சம்பந்தமான நிலைகளின் முழுக் கணக்கெடுப்பு.

(ii) ஒவ்வொரு கிராமத்திலும் முன்னேற்றமடைந்துள்ள இரண்டு விவசாயிகளையாவது குறிப்பிட்டு, இடமளித்து, பயிற்சியளித்து, பண்ணைத் தலைவர்களாக (Farm leaders) இருக்கச்செய்தல்.

(iii) கிராம நிலையிலுள்ள ஊழியரின்கீழ், சம்பந்தப் பட்ட விவசாயிகளைக் கலந்தாலோசித்து, முன்னேற்ற மடைந்துள்ள விவசாயிகளின் துணையுடன் கிராம விவசாயத்திட்டம் தயாரித்தல்.

(iv) கிடைக்கக் கூடிய பொறுக்கு விதை வகைகளைப் பரப்புதல்.

(v) கிடைக்கக்கூடிய கால் நடைகளின் சாணம், மனித, கால்நடைகளின் சிறுநீர், காய்கறிக் கழிவுகள் முதலான வீணாகும் பொருள்களை கம்போஸ்ட் எருத் தயாரிப்புக்குப் பயன்படுத்த—செய்து காட்டுதல்.

(vi) தழையுரம், செயற்கையுரம் ஆகியவைகளைப் பரப்புதல்.

(vii) ஒரு கிராம நிலையிலுள்ள ஊழியர், ஒரு முக்கியமான (Kharif and Rabi seasons) பட்டத்துக்கு, குறைந்த பட்சம் மூன்று கண்காட்சிகளையேனும், கார் அல்லது ராபி பட்டக் காலத்தில் ஏற்பாடு செய்தல். அதே போன்று, ஒரு ஊழியர் ஒரு முக்கியமான கார் (Kharif season) பட்டத்துக்கு அல்லது ராபி (Rabi season) பட்டத்துக்கு—மூன்று எருக் காட்சிகளையேனும் ஏற்படுத்துதல். தழையுறத்தைப் பரப்புவதுடன், தழையுர விதைகளை, பயிருடனும், உழவுடனும், தழை உரப்பயிருடன் உற்பத்தி செய்ய—செய்து காட்டுதல். இதற்கு மேலும்—பொறுக்கு விதைகள், செயற்கை உரம், திருத்திய உழவுபற்றிய, எல்லாம் அடங்கிய ஒரு கண்காட்சியை ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்பாடு செய்தல்.

(viii) வட்டாரத்தில் விதைப்பெருக்குப் பண்ணை ஏற்படுத்தல், மரம் நடுதல்—தோட்டம் வைத்தல் ஆகிய வற்றுக்குத் தகுந்த நிலத்தைத் தேர்ந்தெடுத்தல்; அவற்றை அமைக்க விவசாயத் துறைக்குத் துணை செய்தல்.

(ix) காய்கறிகள், பழங்கள், மலர்கள் பயிரிடவும்,—கோழி, ஆடுகளை வளர்க்கவும்—வாலிபர் மன்றங்களைத் தூண்டுதல்.

(x) கால்வாய் வெட்டுதல், மரம் நடுதல், மண் அரிப்பைத் தடுத்தல், செடிகளைப் பாதுகாத்தல் முதலான விவசாயத் திட்டங்களில்—மக்கள் பங்கெடுத்துக் கொள்கின்ற சூழ்நிலையை உருவாக்குதல்.

இணைப்பு III

வட்டாரங்களைப் பற்றிய விவரங்கள்

1. மாநிலம் :
2. மாவட்டம் :
3. வட்டாரத்தின் பெயர் :
4. பரப்பளவு (சதுர மைல்களில்) :
5. கிராமங்களின் எண்ணிக்கை :
6. தோராயமான ஜனத்தொகை :
7. வட்டாரத் தலைமை நிலையம் :
8. தபால் நிலையம் :
9. தந்தி நிலையம் :
10. வட்டாரத் தலைமை நிலையத்துக்கு அருகில் உள்ள ரெயில் நிலையத்தின் பெயர் :
11. வட்டாரத் தலைமை நிலையத்துக்கும் ரெயில் நிலையத்துக்கும் உள்ள தொலைவு :
12. வட்டாரம் தொடங்கப்பட்ட தேதி :

(கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறையின் 7—6—61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1616.)

பஞ்சாயத்து வளர்ச்சிப் பணியாளர் கூட்ட விதிமுறைகளும், ரெவினியு டிவிஷனல் அதிகாரியின் பஞ்சாயத்து சம்பந்தமான அலுவல்களும் :

(Office of the Revenue Divisional Officer—Panchayat Development Staff Meetings.)

1958ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தை அமுல் நடத்துகின்ற முறையில், பிறப்பிக்கப் பட்டுள்ள பல்வேறு விதிமுறைகளில், பஞ்சாயத்து வளர்ச்சித் திட்டங்களின் திறமையான நிர்வாகத்துக்கு, வட்ட (Divisional) நிலையில், ரெவினியு டிவிஷனல் அதிகாரி முழுப் பொருப்பாளராக ஆக்கப்பட்டிருக்

கிறார். ரெவினியு டிவிஷனல் அதிகாரி இந்தத் துறையில், நல்ல முறையில் பணியாற்றத் துணைபுரியும் வகையில், மேலும் சில விதிமுறைகளைப் பிறப்பிக்க வேண்டியதன் அவசியத்தை அரசாங்கம் ஆலோசித்துள்ளது. அதன்படி, கீழ்க்கண்ட விதிகள் பிறப்பிக்கப் படுகின்றன :

ரெவினியு டிவிஷனல் அதிகாரியின் அலுவலகத்திலேயே, டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரிக்கு, மேலும் இட வசதி செய்து கொள்ள ஆகும் கட்டடசெலவுக்கு அங்கீகாரம் அளித்து, ஏற்கனவே உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்த இணைப்பு அலுவலகம், பஞ்சாயத்து வளர்ச்சிப்பிரிவு, பொதுப்பிரிவு என்று இரு பிரிவுகளாகத் திருத்தி அமைக்கப்படும். டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரி, அவருக்கென இருக்கும் சட்டபூர்வமான கணக்குத் தணிக்கை வேலைகளுடன், பஞ்சாயத்து வளர்ச்சியின் மொத்த நிர்வாகத்தைக் கவனிக்க ரெவினியூ டிவிஷனல் அதிகாரிக்குத் துணைவராகவும் (Pe sonal Assistant) பணியாற்றுவார். பஞ்சாயத்து வளர்ச்சிப் பிரிவின் தலைமைக் குமஸ்தா, டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரியின் நேரடி நிர்வாகத்தின்கீழ் பணியாற்றுவார்.

கலெக்டருடன் பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்கள் தொடர்பு கொள்ளும் எல்லா அதிகாரபூர்வமான தொடர்புகளும், ரெவினியூ டிவிஷனல் அதிகாரியின் அலுவலகத்தின் மூலமாகவே அனுப்பப்படும். இந்த முறையில் அனுப்பத் தேவையற்றது என்று கலெக்டரின் உத்தரவால் குறிக்கப்படும் தனி வகையான விஷயங்களைத் தவிர ஏனைய கடிதப் போக்குவரத்துக்கள் எல்லாம் ரெவினியூ டிவிஷனல் அதிகாரியின் அலுவலகத்தின் மூலமாகவே அனுப்பப்பெறும்.

அவருடைய டிவிஷனில் உள்ள ஒவ்வொரு வட்டாரத்தின், பஞ்சாயத்து வளர்ச்சி நிர்வாக சம்பந்தமான சிறப்பான எல்லா பிரச்சினைகளைப்பற்றியும் ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி, நேரடியாகச் சேகரித்து, அறிந்து வைத்திருக்கவேண்டியது மிகவும் அவசியமானதாகும். இந்த வகையில், வட்டாரப் பணியாளர்களும், தாலூகா ரெவின்யூ பணியாளர்களும் இணைந்து, பஞ்சாயத்து வளர்ச்சிப் பணியின் முன்னேற்றத்துக்கு ஒத்துழைப்புடன் பாடுபடுமாறு அவர் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்த இரு முக்கிய, ஒன்றுடன் ஒன்று தொடர்புகொண்ட செயல்களை நிறைவேற்றும் நோக்கத்துடன் "பஞ்சாயத்து வளர்ச்சிப் பணியாளர்களின் கூட்டங்கள்" மாதம் ஒரு முறை கூட்டப்படும் அமைப்பு முறையைக் கைக்கொள்ள வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடுகிறது.

பஞ்சாயத்து வளர்ச்சிப் பணியாளர்களின் கூட்டம் தாலூகா தலை நகரில், மாதம்ஒரு முறை, குறிப்பிடப்படும் வசதியான நாட்களில் கூட்டப்படவேண்டும். இக்கூட்டங்களுக்கு, ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி தலைமை வகித்து நடத்துவதுடன் டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரி, ரிவின்யூ டிவிஷனல் அதிகாரியின் அலுவலகத்தில் உள்ள பஞ்சாயத்து வளர்ச்சிப் பிரிவுத்தலைமைக்குமஸ்தா, தாசில்தார், கீழ-கஜானா அதிகாரி, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரி, தாலூகாவிலுள்ள எல்லா வட்டாரங்களில் இருந்தும் பஞ்சாயத்து யூனியன் அலுவலக நிர்வாகிகள் ஆகியோரும் கூட்டத்தில் கலந்து கொள்ளவேண்டும்.

மாதாந்தரக் கூட்டங்களின் நடைமுறை கீழ்கண்டவாறு ஒழுங்காக நடைபெறவேண்டும் :

(1) பாஸ் புத்தகமும் மாதாந்தரப் புள்ளி விவர அறிக்கையும்.—ஒவ்வொரு வட்டாரத்துக்கும் பாஸ் புத்தகம் ஒவ்வொரு மாத முடிவு வரை எழுதி முடிக்கப்பட்டிருக்க வேண்டும். மாதாந்தர வரவு செலவுகளைக் காட்டுகின்ற அறிக்கை, குறிப்பிடப்பட்ட முறையில் தயாரிக்கப்பட்டு, கீழக் கஜானா, பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் இவற்றிடையே கணக்குப் பொருந்துமாறு, வரவுக்கும் செலவுக்கும் சரிகட்டி மாவட்டக் கலெக்டர் அலுவலகத்துக்கு அனுப்பப்பட ரெவின்யூ டிவிஷனல் அதிகாரியின் அனுமதியைப் பெறவேண்டும்.

(2) நிர்வாக நடைமுறை விவர அறிக்கைகள் :—சுற்றுப்பயண நாட்குறிப்பு விளக்கமும், பஞ்சாயத்து வளர்ச்சி நிர்வாக சம்பந்தமான, ஏனைய, வரையறுக்கப்பட்ட, அவ்வப்போதைய நடைமுறை விவரங்களையும் வட்டாரங்களில் தயாரித்து, "பஞ்சாயத்து வளர்ச்சிப் பணியாளர்" கூட்டத்துக்குக் கொண்டுவரவேண்டும்.

அந்த அறிக்கைகளைக் கூட்டத்தில் வைத்து ஆராய்ந்த பின்னர், கலெக்டர் அலுவலகத்துக்கு அனுப்புவதுபற்றிய முடிவு செய்யப்படவேண்டும்.

[குறிப்பு.—இந்த விதி முறைகள், நிர்வாக நடைமுறை விவரங்களுக்குக் கையாளப்படவேண்டியனவேயன்றி, மாவட்ட விவசாய அதிகாரி, டிவிஷனல் எஞ்சினியர், மாவட்டக் கல்வி அதிகாரி முதலான, தலைமை அதிகாரிகளின் மூலமாக, கலெக்டர் அலுவலகத்துக்கு அனுப்பப்படக்கூடிய தொழில் முறை விவர அறிக்கைகளுடன் தொடர்பு கொண்டவை அல்ல.]

(3) மேற்குறித்தவாறு, வழக்கமான வேலை முறைத் தொடர்புகளைக் கவனித்த பின்னர், மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்துக்குமுன் கூடும் கூட்டத்தில் எழும் பிரச்சினைகள் அல்லது அடுத்த மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்தில் கொண்டுவரக்கூடிய பிரச்னைகள், ஆகியவற்றைக் கவனிக்க வேண்டும். ஒவ்வொரு வட்டாரத்தின் நிலைமைகளையும் ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி நன்றாக அறிந்திருப்பதுடன், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தவையான விளக்கங்களையும் அளித்து வரவேண்டும்.

(iv) கிராம அதிகாரிகளால் செய்யப்பட வேண்டிய வசூல்கள் அல்லது பிற வேலைகளைப் பற்றி ஏதாவது சிறப்பான சிக்கல் எழுந்தாலும், அல்லது பஞ்சாயத்துக்களுக்கும் அவர்களுக்கும் இடையில் அத்தகைய சிக்கல் எழுந்தாலும் அச்சிக்கல்கள் இக்கூட்டங்களில் கொண்டுவரப்பட வேண்டும், அதே போன்று எந்தக் கிராமத்திலேனும்.. விளைச்சலுக்குப் பயன்படுத்தப்பட்டும் அல்லது எந்தப் பஞ்சாயத்தாலும் எடுத்துக்கொள்ளப் பட்டும் இருக்கின்ற பொது நிலையங்களின் நிர்வாக சம்பந்தமான (எடுத்துக்காட்டக, கைப்பற்றுதல், உரிமை செய்தல், உரிமை மாற்றுதல், அல்லது குத்தகைக்கு விடுதல், ஆக்கிரமிப்பு நீக்குதல் முதலானவை) பிரச்சினைகள் இக் கூட்டங்களில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். மேலும், ரெவினியு பணியாளர்களுடைய நிர்வாகப் பொறுப்பினுல் எழுகின்ற எந்தப் பிரச்சினையும் இக்கூட்டத்தில் எடுத்து விவாதிக்கப்படவேண்டும்.

[குறிப்பு.—இந்த வகை வேலை முறையின் முக்கியத் துவம், சிறப்பாக வலியுறுத்தப்படுகிறது. அன்றுடப் பிரச்சினைகள் ஒழுங்காகவும், கிராம மக்களுக்குத் திருப்தி அளிக்கும் வகையிலும் தீர்க்கப்படுவதுடன் பஞ்சாயத்து வளர்ச்சிப் பணியின் முன்னேற்றத்துக்கு, தாலூக பணியாளர்களுக்கும், வட்டாரப் பணியாளர்களுக்கும் கிராமதிலுள்ள ரெவினியூ பணியாளர்களும் சுமுகமாக ஒத்துழைக்கும் வகையில் வெற்றிகரமாகத் தம் கடமைகளை நிறைவேற்றுவதைக் கொண்டே ரெவினியூ டிவிஷனல் அதிகாரியின் பணிகளின் தன்மை மதிக்கப்பட வேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது.]

(v) இந்தக் கூட்ட நடவடிக்கைகளின் விளக்கமான குறிப்பு எழுதப்பட்டு ரெவினியூ டிவிஷனல் அதிகாரியின் அலுவலகத்தில் வைக்கப்பட வேண்டும். இக்குறிப்புக் களின்படி தொடர்ந்து பணி புரிய வேண்டிய பொறுப்பு டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரியைச் சேர்ந்ததாகும்.

டிவிஷனிலுள்ள ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் அலுவலகமும், ஆண்டுக்கொரு முறை, ரெவினியூ டிவிஷனல் அதிகாரியால் ஒரு மொத்தத் தணிக்கை செய்யப்படவேண்டும்.

ரிவினியூ டிவிஷனல் அதிகாரி, தம்முடைய சுற்றுப் பிரயாணத்தின் போது, பஞ்சாயத்து யூனியன் அலுவலகங் களுக்கு விஜயம் செய்வதுடன், பஞ்சாயத்து யூனியன் தலைவர், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், வளர்ச்சிப் பணி அதிகாரிகள் ஆகியோருடன் நேரடியாகக் கலந்துரையாடவேண்டும். சாதாரணமாக, மூன்று மாதங்களுக்கும் மேலாக, ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி விஜயம் செய்யாத பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் இருக்கக்கூடாது.

[கிராம அபிவிருத்தி—தலநிர்வாகத்துறையின் 5—6—61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1538.]

கிராமப் பஞ்சாயத்துக்களின் 'வாகன வரி' விதிப்பு—வசூல்களுக்கான நமூனுக்களை (Forms) நியமித்தல் :

(*Assessment and Collection of Vehicle-Tax—Forms Prescribed.*)

கிராமஅபிவிருத்தி—தல நிர்வாகத் துறையின் 12-9-60-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 756-ல், கிராமப் பஞ்யத்சாதுக்கள், அவைகளுக்கு விடப்பட்டுள்ள வேலைகளைச் செய்யப் பயன்படும் நமூனுக்களை நியமித்து ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

மேற்குறித்த ஆணையின் நமூனுப் பட்டியலில், கிராமப் பஞ்சாயத்துக்களின் வாகன வரி விதிப்பு, வசூல் பற்றிய நமூனுக்கள் (FORMS) சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்று கோயமுத்தூர் மாவட்டக் கலெக்டர் எடுத்துக் காட்டியுள்ளார். கிராமப் பஞ்சாயத்துக்களின் வாகன வரி விதிப்புக்கென்று எந்த ஒரு நமூனுவையும் இதுவரை அரசாங்கம் நிர்ணயிக்கவில்லை. ஆனுல் நடைமுறையில் கிராமப் பஞ்சாயத்துக்கள் "பல்வகை மதிப்பீட்டுப் பதிவேட்டை (Miscellaneous Demand Register), வாகன வரி மதிப்பீட்டு, பதிவேடாகவும் பல்வகைப் பொது வசூலுக்கான ரசீதுகளை, வாகன வரி ரசீதுகளாகவும் பயன்படுத்தி வருகின்றன. நகரப் பஞ்சாயத்துக்கள் மொத்தம் பதினேரு வகை நமூனுக்களை வாகன வரி விதிப்புக்கும், வசூலுக்கும், பயன்படுத்தி வருகின்றன. கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு அந்தப் பதினேரு வகை நமூனுக்களும் தேவைப்படா என்றும், அவற்றின் வாகன வரி விதிப்பு, வசூல் வேலை முறையை எளிதாக்க அந்த நமூனுக்களின் எண்ணிக்கை குறைக்கப்படலாம் என்றும் அரசாங்கம் கருதுகின்றது.

ஆகவே அது விஷயமாக அரசாங்கம், கீழ்க்கண்ட ஆணைகளைப் பிறப்பிக்கிறது :—

(i) இந்த ஆணையின் இணைப்பில் கூறப்பட்டுள்ள நமூனு எண். 101 (வாகன வரிக்கு உட்பட்ட வாகனங்களின் பட்டியல்), நமூனு எண். 102 (வாகனங்களின் அட்டவணை), நமூனு எண் 103 (வாகனங்களின் லைசென்சு), ஆகிய மூன்று நமூனுக்களும் கிராமப் பஞ்சாயத்துக்கள் விதிக்க கூடிய வாகன வரி விதிப்புக்கும், வசூலுக்கும், பயன்படுத் தப்படவேண்டும்.

(ii) கிராமப் பஞ்சாயத்தின், நிர்வாக அதிகாரி, நமூனு எண். 101-ல் ஒவ்வொரு அரையாண்டுக்குமான ஒரு மதிப்பீட்டுப் பதிவேட்டைத் (Demand Register) தயாரிக்க வேண்டும்.

(iii) நிர்வாக அதிகாரி, வாகன வரி விதிக்கப்படும் ஒவ்வொருவருக்கும், நமூனு எண் 102-ல் அச்சடித்த அட்டவணை ஒன்றை அனுப்பி வைக்க வேண்டும். அந்த

அட்டவணை, நிர்வாக அதிகாரி என்ற முறையில், அவர் வரி விதிப்புக்குத் தேவையென்று கருதும், வைத்திருக்கும் அல்லது பயன்படுத்தி வரும், வாகனங்களைப் பற்றிய விவரங்களைப் பூர்த்தி செய்து அனுப்புவதற்கென்று அனுப்பப்படுவதாகும்.

(iv) அவ்வாறு அனுப்பப்பட்ட அட்டவணையில், தேவைப்படும் விவரங்களை எழுதி, தேதியும் கையெழுத்தும் இட்டு, அது கிடைத்த ஒரு வார காலத்துக்குள், சம்பந்தப்பட்டவர் பஞ்சாயத்து அலுவலகத்துக்குத் திருப்பி அனுப்ப வேண்டும்.

(v) மதிப்பீட்டு அறிக்கை, ரசீது, லைசென்சு ஆகியவை (இணைப்பில் கூறப்பட்டுள்ள) நமூனு (எண். 103) வுடன் சேர்த்து வழங்கப்படும்.

(vi) (vii)-பாராவில் கூறப்பட்ட ஒரு வார காலம் கடந்துவிடும் பட்சத்தில் நிர்வாக அதிகாரி, (நமூனு எண் 103-ல்) சம்பந்தப்பட்ட நபருக்கு வாகன வரிக் கணக்கில் செலுத்த வேண்டிய தொகைக்கு, வழங்கப்பட்ட 15 நாட்களுக்குள் செலுத்துமாறு, மதிப்பீட்டு அறிக்கையை வழங்கவேண்டும்.

(vii) எந்த வாகனத்திற்கேனும், சம்பந்தப்பட்ட எந்த நபரும், வரித் தொகையைச் செலுத்துவாரேயானால் நிர்வாக அதிகாரி அத்தொகையைப் பெற்றுக் கொண்டதற்கான ரசீதும், எந்தக் கால அளவுக்கு வரி செலுத்தப்பட்டதோ அந்தக் கால அளவு வரை அவ்வாகனத்தை வைத்திருக்க (அ) பயன்படுத்த, லைசென்சும் வழங்க வேண்டும்.

இணைப்பு

நமூனு எண் : 101.

19...... $\frac{\text{30 செப்டம்பர்}}{\text{31 மார்ச்}}$ வரை முடிகின்ற அரையாண்டுக்கு லைசென்சு, வரிவிதிப்புக்கு உட்பட்ட வாகனங்களின் பட்டியல்.

				மதிப்பீடு.				அறிக்கை வழங்கிய.			வசூல்.		குறைத்தல்—தள்ளுபடி செய்தல்.			
வரிசை எண்.	முன் அரையாண்டில் எடுக்கப்பட்ட லைசென்சுகளின் எண்ணிக்கை.	நபரின் பெயர்.	முகவரி.	வாகனத்தைப் பற்றிய விவரம்.	எண்ணிக்கை.	தொகை.	அச்சடித்த அட்டவணை வழங்கப்பட்ட தேதி.	தேதி.	எண்.	வாரண்டின் எண்.	லைசென்ஸ் எண்.	தொகை.	வரித்தொகை.	பஞ்சாயத்து தீர்மான எண்ணும் தேதியும்.	நிலுவை.	அடுத்த அரையாண்டின் லைசென்சுகளின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)	(15)	(16)	(17)
						ரூ. ந.பை.						ரூ. ந.பை.			ரூ. ந.பை.	

நமூனு. எண். 102.　　　　　　　　　　　　　　　　　　　　　　　　தொடரிலக்கம்..........

வண்டிகளைப் பற்றிய அட்டவணை

(கிராமப் பஞ்சாயத்துக்களைக் குறித்த 1950-ம் வருடத்திய தமிழ்நாடு சட்டத்தின் 66-வது பிரிவும், 112(2) (xv), (xvii)-வது பிரிவின்படிப் பிறப்பிக்கப்பட்ட விதிகளைச் சேர்ந்த 13-வது விதியும்.)

பெறுபவர் ;

பஞ்சாயத்து நிர்வாக அதிகாரி அவர்களுக்கு

இதனடியில் கண்டிருக்கிற ஜாபிதாவில் குறித்த வண்டிகள் என்னுடைய சுவாதீனத்தில் இருக்கின்றனவென்றும், 19....-ம் வருடம் செப்டம்பர் 30-ம் தேதியோடு/மார்ச் 31-ம் தேதியோடு முடிவாகிற அரை வருடத்திற்கு கிராமப் பஞ்சாயத்துக்களைக் குறித்த 1950-ம் வருடத்திய தமிழ்நாடு சட்டத்தின் 66-வது பிரிவின்படி, வரிக்குள்ளானவை வேறெவையும் என் சுவாதீனத்தில் இல்லையென்றும் இதனால் உறுதிமொழி கூறுகிறேன்.

அதன்பொருட்டு ரூபாய் (　　　　　　　　).. இத்துடன் அனுப்புகிறேன்.

வண்டிகளின் விவரம்.	எண்ணிக்கை	வீதம்	தொகை.
		ரூ. ந.பை.	ரூ. ந.பை.
ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிராணிகள் இழுக்கக்கூடியபடிச் செய்யப்பட்ட நாலுச்சக்கர வண்டி.			
ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிராணிகள் இழுக்கக்கூடியபடிச் செய்யப்பட்ட இரண்டு சக்கர வண்டி.			
பைசைகிள் அல்லது டிரைசைகிள் .. .. குழந்தையின் பெராம்புலேட்டர் (தள்ளுவண்டி) அல்லது நடைவண்டியல்லாத வேறே வண்டி.			
இலக்கம் போடுவதற்கான கட்டணம்			
மொத்தம் ..			

பஞ்சாயத்து ஆபீசுக்காக

ரூ...பெற்றுக் கொண்டு 19....-ம் வருடத்திய.......................... மாதத்திய....தேதி கணக்குகளில் வரவு வைக்கப்பட்டது.

....
கையெழுத்து.

விலாசம்...

....　　　　...................
குமாஸ்தா.　　　　நிர்வாக அதிகாரி.

தேதி : 19....-ம் வருடம்.....................
மாதம்.......-ம் தேதி.

பஞ்சாயத்து ஆபீஸ்,

தேதி : 19....-ம் வருடம்...........
மாதம்......-ம் தேதி.

பெறுபவர் :

.. ..

....

....

ஐயா,

பின்புறத்திலுள்ள நமூனுவில் நீங்கள் எழுத வேண்டியவைகளைத் தயவுசெய்து எழுதி, சேரவேண்டிய தொகையுடன்கூட அதை ஒரு வாரத்திற்குள்ளாக பஞ்சாயத்து ஆபீஸுக்குத் திருப்பி அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். கேட்கப்பட்ட லைசென்சுகள் பின்னர் கொடுக்கப்படும்.

தங்கள்பால் விசுவாசமுள்ள,
நிர்வாக அதிகாரி.

இடம்..............................

தேதி.......................196 .

அனுப்பின தேதி :

திருப்பி அனுப்பப்பட்ட தேதி :

லைசென்சு நம்பர் :

செக் மூலமாய்ப் பணம் செலுத்துகிறவர்கள், எழுதிக்கொடுக்கும் செக்கில் கண்ட தொகையுடன் கூட பாங்கி வீதங்களின்படி கமிஷனையும் சேர்க்கவேண்டும்.

நமூனு எண். 103.

வாகன லைஸென்சு.

பஞ்சாயத்து

தேதி 19 .

திரு

முகவரி.. அவர்களுக்கு

கீழ்க் குறிக்கப்பட்ட வாகனங்களுக்கு, 196 $\frac{\text{30 செப்டம்பர்}}{\text{31 மார்ச்}}$ முடிகின்ற அரையா ண்டுக்கான லைசென்சு வழங்கப்பட்டது.

*வாகனங்கள்.

196 $\frac{\text{30 செப்டம்பர்}}{\text{31 மார்ச்}}$ முடிகின்ற அரை யாண்டுக்கு மேற் குறிப்பிட்ட வாகனங்களுக்கு பெற்றுக் கொள்ளப்பட்ட வரி ரூ. ....

....

வரி வசூலிப்போர். நிர்வாக அதிகாரி.

குறிப்பு.—பணம் பெற்றுக் கொண்டதற்கு அடையாள மாக, பஞ்சாயத்து சம்பந்தப்பட்ட அதிகாரியின் கையெழுத்து இல்லை என்றால் இந்த ரசீது செல்லுபடியாகாது.

நமூனு எண். 103.

வாகன லைஸென்சு:

பஞ்சாயத்து

தேதி 19

திரு

முகவரி.. அவர்களுக்கு

கீழ்க் குறிக்கப்பட்ட வாகனங்களுக்கு 196 $\frac{\text{30 செப்டம்பர்}}{\text{31 மார்ச்}}$ முடிகின்ற அரையாண்டுக்கான லைசென்சு வழங்கப்பட்டது.

* வாகனங்கள்.

196 $\frac{\text{30 செப்டம்பர்}}{\text{31 மார்ச்}}$ முடிகின்ற அரையாண்டுக்கு மேற்குறிப்பிட்ட வாகனங்களுக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட வரி ரூ..........................

....

வரி வசூலிப்போர். நிர்வாக அதிகாரி.

குறிப்பு.—பணம் பெற்றுக்கொண்டதற்கு அடையாளமாக, பஞ்சாயத்து சம்பந்தப்பட்ட அதிகாரியின் கையெழுத்து இல்லை என்ருல் இந்த ரசிது செல்லுபடியாகாது.

நமூனு எண். 103.

வாகன வரி மதிப்பீட்டு அறிக்கை

(Demand Notice)

வரி விதிப்பு எண்..............................பஞ்சாயத்து....................................

திரு..

முகவரி..

*கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரப்படி உங்களிடம் இருப்பதாக நம்பப்படும் வாகனங்களுக்கான,

196 $\frac{\text{30 செப்டெம்பர்}}{\text{31 மார்ச்}}$ முடிகின்ற அரையாண்டுக்காக நீங்கள் செலுத்தவேண்டிய வரித் தொகை ரூபாய்.............

இந்த அறிக்கை வழங்கிய 15 நாட்களுக்குள் பஞ்சாயத்து அலுவலகத்தில் பணத்தைச் செலுத்தி விட வேண்டும். அந்தக் காலத்துக்குள் செலுத்தப்படவில்லை என்ருல், (அல்லது) செலுத்தப்படாததற்குத்தக்க காரணம் கூறப்படவில்லை என்ருல், உங்கள் சொத்துக்களை ஜப்தி செய்ய வாரண்டு பிறப்பிக்கப்படும். அத்தகைய ஒவ்வோரு வாரண்டுக்கும் பதிமூன்று நயா பைசா கட்டணம் விதிக்கப்படும். அதன் பின்னர் வரித்தொகையும், கட்டணமும் செலுத்தப்படவில்லை என்ருல் உங்கள் சொத்துக்கள் ஜப்தி செய்யப்படும். (1950 வருடத்திய கிராமப் பஞ்சாயத்துச் சட்டம் 112 (2), (xv) (xvii) பிரிவுகளின் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள 24 முதல் 28 வரையுள்ள விதிகளைக் காண்க.)

நீங்கள் மேற்படி வரி விதிப்பினுல் அதிருப்தி அடைந்திருக்கும் பட்சத்தில் 18 முதல் 22 வரையுள்ள விதிகளுக்குட்பட்டு, பஞ்சாயத்துக்கு 15 நாட்களுக்குள் அப்பீல் செய்துகொள்ளலாம்.

* வரியின் விவரம்.

அறிக்கை வழங்கிய தேதி......................

வழங்கிய விதம்....................

வரி வசூலிப்போர். நிர்வாக அதிகாரி

(கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறையின் 13—6—61 தேதியிட்ட அரசாங்க ஆணை : எண். 1639.)

பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், புதிய ஆரம்பப்பள்ளிகளைத் திறத்தல், இருக்கின்ற பள்ளிகளில் புதிய வகுப்புக்களைத் தொடங்குதல், பள்ளியின் இருப்பிடம்—ஆகிய செய்திகளைப்பற்றி கிராமப் பஞ்சாயத்துக்களிடம் கலந்தாலோசித்தல் பற்றிய விளக்கம் :

ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்குதல், பராமரித்தல், விரிவுபடுத்துதல், தரம் உயர்த்தல், தனியார் நிர்வாகத்தில் உள்ள ஆரம்பப் பள்ளிகளுக்கு மானியம் வழங்குதல் முதலான ஆரம்பக் கல்வி சம்பந்தமான பொறுப்பு, பஞ்சாயத்து யூனியன் மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சட்ட பூர்வமான பொறுப்புகளுள் ஒன்றாகும். கல்வித் துறையின் 11—4—61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 790, அரசாங்க உதவி பெறும் பள்ளிகளைத் திறப்பதற்கான ஒப்புதலையும், அத்தகைய பள்ளிகளுக்கு மானியங்கள் வழங்குவதற்கான ஒப்புதல்களையும், அளித்து, ஒரு தீர்மானத்தின்மூலம் அறிவிக்கின்ற அதிகாரத்தை பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு, அளிக்கிறது. இந்த முறை, அரசாங்க உதவி பெறும் பள்ளிகளில் அதிகமான வகுப்புகளைத் தொடங்குகின்ற விஷயத்திலும் பின்பற்றப்படும்.

இது சம்பந்தமாக, புதிய பள்ளிகளைத் திறத்தல், இருக்கின்ற பள்ளிகளில் புதிய வகுப்புகளைத் தொடங்குதல் பள்ளிக்கூட இருப்பிடத்தைக் குறித்தல் ஆகிய விஷயங்களில் பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் தங்களுடைய முடிவை, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களின் மேல் வலியுறுத்தாமல் அவைகளையும் கலந்தாலோசிக்க வேண்டுமென்று யோசனை கூறப்பட்டிருக்கின்றது.

அரசாங்கம் மேற்குறித்த யோசனையை ஏற்றுக்கொள்ளுகிறது. அதன்படி பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், புதிய பள்ளிகளைத் திறத்தல், இருக்கின்ற பள்ளிகளில் புதிய வகுப்புகளைத் தொடங்குதல், பள்ளிக்கூட இருப்பிடத்தை நிர்ணயித்தல் முதலிய விஷயங்களில் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களைக் கலந்தாலோசிக்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடுகிறது.

(கிராம அபிவிருத்தி—தல நிர்வாகத் துறையின் 19—6—1961 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1718.)

1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 66.வது பிரிவின்கீழ், சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் தேசிய வளர்ச்சிப்பணித் திட்டத்தை, இரண்டாவது தொகுதி பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைத்தல்.

(Entrustment of National Extension Service Scheme of Community Development to Second Batch of Panchayat Unions.)

கிராம அபிவிருத்தி—தல நிர்வாகத் துறையின் 2-3-1961 தேதியிட்ட அரசாங்க ஆணை 588-ல் வரையறுக்கப்பட்டுள்ள கால அட்டவணைப் படி, இரண்டாவது தொகுதி பஞ்சாயத்து யூனியன்களிடம் சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் தேசிய வளர்ச்சிப் பணித் திட்ட நிறைவேற்றத்தை 1–7–1961-ல் ஒப்படைக்கப்படும். அதே ஆணையின் மூன்றாவது பாராவில், கிராம அபிவிருத்தித் துறையின் 16–8–60 தேதிய அரசாங்க ஆணை 664-ல் கூறப்பட்டுள்ள பொருளாதார அமைப்புக்குட்பட்டு சேர்க்கப்படும் ஈட்டு மானிய நன் கொடைகள் வசூலித்தல் முதலான, தேவையான பொருள் வசதிகளைப் பெருக்கிக் கொள்ளும் பொறுப்புக்களை, பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், ஒரு தீர்மானத்தின் வாயிலாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் இந்தத் தீர்மான நிறைவேற்றத்தின்படி, இந்த ஆணையின் இணைப்பில் கூறப்பட்டுள்ள இரண்டாவது தொகுதி பஞ்சாயத்து யூனியன்களிடம், சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் தேசியவளர்ச்சிப் பணித் திட்டத்தைச் செயல் படுத்த, 1–7–1961 முதல் ஒப்படைக்க, அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. கிராம அபிவிருத்தி தல நிர்வாகத் துறையின் 21–3–1961 தேதியிட்ட அரசாங்க ஆணை 838-ல் கூறப்பட்டுள்ள விதி முறைகள் இரண்டாவது தொகுதி பஞ்சாயத்து யூனியன்களுக்கும் பொருந்த வேண்டுமென்றும் அரசாங்கம் ஆணையிடுகிறது.

இணைப்பு.

வடார்க்காடு மாவட்டம்

1 கணியம்பாடி.
2. காவேரிப்பாக்கம்
3 நெமிலி
4 சோளிங்கபுரம்

5 திருப்பத்தூர்
6. வாலாஜா.
7 சேத்துப்பட்டு
8. செய்யாறு.
9. பெரணமல்லூர்.

தென்னார்க்காடு மாவட்டம்

10. காணை
11. கோலியனூர்
12. மரக்காணம்
13. உளுந்தூர்ப்பேட்டை
14. குறிஞ்சிப்பாடி
15. மங்களூர்
16. மேல் மோனகிரி
17 நல்லூர்
18 பறங்கிப்பேட்டை
19. தியாகதுர்க்கம்

செங்கற்பட்டு மாவட்டம்

20 கும்முடிபூண்டி
21 காஞ்சீபுரம்
22 கட்டங்கொளத்தூர்.
23 குன்றத்தூர்.
24 மதுராந்தகம்.
25 மீஞ்சூர்.
26 பூண்டி
27 செயின்ட் தாமஸ் மவுண்டு
28 ஊத்துக்கோட்டை
29 வில்லிவாக்கம்.

கோயமுத்தூர் மாவட்டம்

30 அம்மாப்பேட்டை
31 பவானி
32. பவானி சாகர்
33 தாராபுரம்
34 காங்கேயம்
35 கொடுமுடி
36 குண்டாடம்
37 மொடக்குறிச்சி
38 மூலனூர்
39 தக்காநாயக்கன்பாளையம்
40 வெள்ளக்கோயில்
41 கிணத்துக்கடவு
42 லட்சுமிநாயக்கன்பாளையம்
43 பொங்கலூர்
44 சூலூர்
45 தொண்டாமுத்தூர்
46. உடுமலைப்பேட்டை.

மதுரை மாவட்டம்

47 ஆத்தூர்-I (செம்பட்டி)
48 ஆத்தூர்-II (ரெட்டியார் சத்திரம்)
49 வத்தலகுண்டு
50 திண்டுக்கல்
51 கொடைக்கானல்
52 நிலக்கோட்டை
53 பழனி
54 வேடசந்தூர்
55 ஆண்டிப்பட்டி
56 போடிநாயக்கனூர்
57 செல்லம்பட்டி
58 கள்ளிக்குடி
59 சேடப்பட்டி
60 திருப்பரங்குன்றம்

நீலகிரி மாவட்டம்

61 குன்னூர்
62 கூடலூர்
63 கோத்தகிரி

இராமநாதபுரம் மாவட்டம்

64. பொகளூர்.
65 தேவகோட்டை
66 கடலாடி
67 காளையார்கோயில்
68 கல்லல்
69. கண்ணன்குடி
70 மானாமதுரை
71 மண்டபம்
72. முதுகுளத்தூர்
73. இராஜசிங்கமங்கலம்
74. இராமநாதபுரம்
75. இராஜபாளையம்
76 சாத்தூர்
77 வேம்பக்கோட்டை
78 விருதுநகர்
79. வத்தராயிருப்பு

சேலம் மாவட்டம்

80 பருகூர்
81 மேச்சேரி
82 மொரப்பூர்
83 பாப்பிரெட்டிபட்டி
84 பெண்ணாகரம்
85 வெப்பனபள்ளி
86. ஊத்தங்கரை

87 ஆத்தூர்
88 பரமத்தி.
89 சேந்தமங்கலம்
90 தலவாசல்
91 திருச்செங்கோடு.
92 வாலப்பாடி.

தஞ்சாவூர் மாவட்டம்

93 ஆனைக்காரன் சத்திரம்
94. கோட்டூர்
95 குற்றாலம்
96 முத்துப்பேட்டை
97. நாகப்பட்டினம்.
98. செம்பொனார்கோயில்.
99. ஆவுடையார்கோயில்.
100. அம்மாப்பேட்டை.
101. பூதலூர்.
102. ஒரத்தநாடு.
103. சேதுபாவா சத்திரம்.
104. திருப்பனந்தாள்.
105. திருவிடமருதூர்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

106. ஆண்டிமடம்.
107. அரியலூர்.
108. மணிகண்டம்.
109. பெரம்பலூர்.
110. தாதய்யங்கார்பேட்டை.
111. துறையூர்.
112. திருமானூர்.
113. உப்பிலியாபுரம்.
114. அரவக்குறிச்சி.
115. கரம்பக்குடி.
116. கிரனூர்.
117. தாந்தோணி.

திருநெல்வேலி மாவட்டம்

118. கருங்குளம்.
119. மேல நீலிடநல்லூர்.
120. புதூர்.
121. ஒட்டப்பிடாரம்.
122. சாத்தன்குளம்.
123. வாசுதேவநல்லூர்.
124. உடங்குடி.
125. ஆலங்குளம்.
126. இராதாபுரம்.
127. தென்காசி.
128. வள்ளியூர்.

தஞ்சாவூர் மாவட்டம்

129. கொடவாசல்.

(கிராம அபிவிருத்தி தல நிர்வாகத் துறையின் 23—6—61. தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 1752)

1-4-1961-லிருந்து முதல் நிலை வட்டாரங்களாகச் செயல்படும் 1961-62 (ஏப்ரல் வரிசை) மாதிரி வளர்ச்சி வட்டாரங்கள்:

கிராம அபிவிருத்தி தல நிர்வாகத் துறையின் 1960-ம் ஆண்டு மே மாதம் 18-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 406-ல், இந்த ஆணையின் இணைப்பில் கூறப்பட்டுள்ள 1961–62 (ஏப்ரல் வரிசை) ஐச்சேர்ந்த 16 வட்டாரங்கள் விவசாயத்தில் மாதிரி வளர்ச்சிப் பணியைத் தொடங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. 1-4-61-லிருந்து இந்த வட்டாரங்கள் முதல் நிலை வட்டாரங்களாக (Stage I Blocks) மாற்றி, அரசாங்கம், இப்பொழுது ஆணையிடுகிறது. இந்த வட்டாரங்கள் 1-4-61-லிருந்து ஐந்தாண்டுக் காலத்திற்கு முதல் நிலை வட்டாரங்களாகச் செயல்படும்.

இந்த வட்டாரப் பணியாளர்களின் உபயோகத்திற்காக, சமுதாய வளர்ச்சி—கூட்டுறவுத்துறை அமைச்சகம் (Ministry of Community Development and Co-operation) வெளியிட்டுள்ள விளக்க நூல்களின் முழுத்தொகுதியும் தனியாகத் தருவித்து வழங்கப்படும்.

இந்த 16 வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும், இந்த ஆணை இணைப்பு II-ல் விளக்கப்பட்டுள்ளபடி, பணியாளர்களை அமர்த்திக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த அனுமதியின் காலவரையறை, முதல் தவணையாக 28–2–1962 வரையில் வழங்கப்பட்டுள்ளது. சட்ட விதிகள் அனுமதிக்கின்ற வழக்கமான பஞ்சப்படி, வீட்டு வாடகைப்படி முதலானவற்றைப் பெறுவதற்கு இந்தப் பணியாளர்கள் தகுதியுடையவர்கள் ஆவார்கள். மாதிரி வளர்ச்சி வட்டாரங்களின் பணியாளர்களின் பதவிக்கால வரையறைக்கு வழங்கப்பட்ட அனுமதி இப்பொழுது வழங்கப்படும். இந்த அனுமதியுடன் ஒன்றுக்கப்படும்.

திட்டத்தின் நடைமுறை நிறைவேற்றத்திற்கும், பொருளாதார வழி வகைகளுக்கும் கிராம அபிவிருத்தித் துறையின் 16-8-60 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 664 டன் கிராம அபிவிருத்தி தல நிர்வாகத் துறையின் 25-1-61 தேதியிட்ட அரசாங்க ஆணை 211-ம் பொருந்தி

வருவனவாகும். அதாவது, பஞ்சாயத்து வளர்ச்சித் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இந்தத் திட்டங்கள் செயல்படும்.

பணியாளர்களின் செலவுகள் அலுவலகச் சில்லறைச் செலவுகள் ஆகியவை, "47-எ. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள்—தேசிய வளர்ச்சிப் பணியும், தல வளர்ச்சி வேலைகளும் (1) சமுதாய வளர்ச்சித் திட்டம்" என்ற தெளிவான, விளக்கமான, துணைத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

இணைப்பு I

மாவட்டம்	வட்டாரம்
வடார்க்காடு	1. கந்திலி. 2. மாதனூர்.
தென்னார்க்காடு	3. திருவெண்ணெய்நல்லூர். 4. ஒலக்கூர்.
செங்கற்பட்டு	5. அச்சரப்பாக்கம்.
கோயமுத்தூர்	6. அன்னூர். 7. பொள்ளாச்சி.
மதுரை	8. கம்பம்.
இராமநாதபுரம்	9. அருப்புக்கோட்டை.
சேலம்	10. வீரபாண்டி. 11. மோகனூர். 12. சங்கரி.
தஞ்சாவூர்	13. கொரடாச்சேரி.
திருச்சிராப்பள்ளி.	14. அரிமழம். 15. வையம்பட்டி.
திருநெல்வேலி	16. கீழப்பாவூர்.

இணைப்பு II

ஒவ்வொரு முதல் நிலை வட்டாரத்துக்கும் பணியாளர்கள் :

வரிசை எண்	பணியாளர்	எண்ணிக்கை
1	வட்டார வளர்ச்சி அதிகாரி ..	1
2	சமூகக் கல்வி அமைப்பாளர்கள்	2 (பெண் 1 ஆண் 1).
3	(அ) கிராம சேவகர்—	
	முதல் நிலை	3
	இரண்டாம் நிலை ..	7
	(ஆ) கிராம சேவிகைகள் ..	2
4	வளர்ச்சிப்பணி அதிகாரிகள்—	
	(அ) விவசாயம்	1
	(ஆ) கால்நடைப் பாதுகாப்பு	1
	(இ) கூட்டுறவு	1
	(ஈ) பஞ்சாயத்து	1
	(உ) புள்ளி விவரம் ..	1
5	ஜூனியர் என்சினீயர்/கண்காணிப்பாளர்.	1
6	கணக்கர்/பண்டகசாலைப் பணியாளர்.	1
7	மேல்நிலைக் குமஸ்தா ..	1
8	பொருளாளர் (கீழ்நிலை குமஸ்தாவின் சம்பள வீதத்தில்).	1
9	தட்டெழுத்தாளர்	1
10	ஏவலர்	1
11	கால்நடை—ஏவலர் ..	1
12	கால்நடை—செய்தி ஏந்து ஏவலர்.	1
13	வண்டியோட்டி (Jeep driver).	1

(கிராம அபிவிருத்தி தல நிர்வாகத் துறையின் 7—6—61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1615.)

*இணைப்பு

ஒவ்வொரு முதல் நிலை வட்டாரத்துக்கும் பணியாளர்கள்

1	வட்டார வளர்ச்சி அதிகாரி ..	1
2	சமூகக் கல்வி அமைப்பாளர்கள்.	2 (பெண் 1 ஆண் 1).
3	(அ) கிராம சேவகர்—	
	முதல் நிலை	3
	இரண்டாம் நிலை ..	7
	(ஆ) கிராம சேவிகைகள் ..	2
4	வளர்ச்சிப்பணி அதிகாரிகள்—	
	(அ) விவசாயம்	1
	(ஆ) கால்நடைப் பாதுகாப்பு	1
	(இ) கூட்டுறவு	1
	(ஈ) பஞ்சாயத்து	1
	(உ) புள்ளி விவரம் ..	1
	ஜூனியர் என்சினீயர்/கண்காணிப்பாளர்.	1
6	கணக்கர்—பண்டகசாலைப் பணியாளர்.	1
7	மேல்நிலைக் குமஸ்தா ..	1
8	பொருளாளர் (கீழ்நிலை குமஸ்தாவின் சம்பள வீதத்தில்).	1
9	தட்டெழுத்தாளர்	1
10	ஏவலர்	1
11	கால்நடை—ஏவலர் ..	4
12	கால்நடை—செய்தி ஏந்து ஏவலர்.	2
13	வண்டியோட்டி (Jeep Driver).	2

*(கிராம அபிவிருத்தி தல நிர்வாகத் துறையின் 16—6—61 தேதியிட்ட அறிக்கை எண் 112228. இந்த அறிக்கையின் இணைப்பு கிராம அபிவிருத்தி தல நிர்வாகத் துறையின் 7—6—61 தேதியிட்ட அரசாங்க ஆணை (1615) யின் இணைப்பு II க்குப் பதிலாகப் பிறப்பிக்கப்பட்டது')

பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள், மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் ஆகியவைகளின் கூட்டங்களைப் பற்றிய விளக்கம் :

(Meetings of Panchayats, Panchayat Unions and District Development Councils—Instructions issued.)

1958-ம் வருடத்திய தமிழ் நாடு மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் சட்டம், மாவட்ட நிலையில், வளர்ச்சிப் பணி குறித்து அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறத்தக்க ஒரு ஆலோசனை கூறும் அமைப்பினை எற்படுத்த வகை செய்கிறது. இப்பொழுது படிப்படியாக அமுலாக்கப்பட்டு வரும் 1958-ம் வருடத்திய தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் கீழ், கிராமநிலையிலும், வட்டார நிலையிலும் பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும், அவற்றுக்கென கென சட்டத்தின் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்ற அமைக்கப்படுகின்றன.

மேலும், ஒவ்வொரு வட்டாரத்தின் பஞ்சாயத்து யூனியனும் எல்லாப் பஞ்சாயத்துக்களும் கூட்டாக, வட்டார வளர்ச்சிக்கான ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தைத் தயாரித்துச் செயல் படுத்துவதன் மூலம் மாநிலத்தின் வளர்ச்சிக்கான மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தீவிர பங்கு கொள்ள வேண்டும். மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் செய்தி வழங்கு நிலையங்களைப் போன்றும் சம்பந்தப்பட்ட வளர்ச்சி மாவட்டங்களில் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட நிறைவேற்றத்தின் முன்னேற்றத்தை விளக்குகின்ற இணை அமைப்புக்களாகவும் பணியாற்ற வேண்டும்.

மாவட்ட, வட்டார, கிராம நிலைகளில், மாவட்ட வளர்ச்சி மன்றங்கள், பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துக்கள் ஆகியவை தம் பணியில் திறம்படச் செயல்பட, மாநில முழுதும் தேவையான அளவு ஒரே சீரான நிலைமையை ஏற்படுத்துவதற்குத் தெளிவான விதிகளை அமைக்கும் பிரச்சினையை அரசாங்கம் ஆலோசித்து வருகிறது. இதற்கான வழி வகைகளைக் கூறும் யோசனைகள், உதகமண்டலத்தில் 1961-ம் ஆ டு மே மாதம் நடந்த கலெக்டர்கள் மாநாட்டின் முன் வைக்கப்பட்டன. இந்த மாநாட்டு விவாதங்களின் அடிப்படையில் அரசாங்கம் கீழ்க்கண்ட விதிகளைப் பிறப்பிக்கிறது :

மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் சாதாரண, பொதுச்சபைக் கூட்டங்கள்

1958-ம் வருடத்திய மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் சட்டம், மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் தேவையான போது கூட்டப்பட வகை செய்கிறது. மன்றத்தின் இரண்டு கூட்டங்களுக்கிடையில் மூன்று மாத காலத்துக்கு மேல் இடைவெளி ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். மேற்படி மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் சட்டத்தின் கீழ் வளர்ச்சி மாவட்டங்களின் வளர்ச்சித் திட்டங்கள்பற்றிய செய்திகளில் அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறும் பொறுப்புக்கள் மாவட்ட வளர்ச்சி மன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஆகவே பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுதல். மேலும் பெருக்கு தல் பற்றிய விளக்கங்களையும், ஆலோசனைகளையும் அரசாங்கம் இவைகளிட்மிருந்து பெறவேண்டியது தேவையாகிறது. இந்தத் தேவையைஉத்தேசித்து, ஒவ்வொரு மாவட்டத்தின் மாவட்ட வள ர்ச்சி மன்றத்தின் சாதாரணப் பொதுச் சபைக் கூட்டங்கள் ஒரு மாதம் விட்டு ஒரு மாதம், அதாவது ஒவ்வொரு ஆண்டின், பிப்ரவரி, எப்ரல், ஜூன் , ஆகஸ்டு, அக்டோபர், டிசம்பர் மாதங்களில் கூட்டப்பட வேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. இரண்டு மாவட்ட வளர்ச்சி மன்ற கள் உள்ள ஒவ்வொரு ரெவினியூ மாவட்டத்திலும், அந்த இரண்டு மன்றங்களின் கூட்டங்களும் மேற்குறித்த அதே ஆறு மாதங்களில் கூட்டப்பட வேண்டும். கூட்டத் தேதி சாதாரணமாக மேற்குறித்த மாதங்களின் 21-ம் தேதிக்கும் மாதக் கடைசி தேதிக்கும் இடையில் அமையுமாறு கலெக்டரால் நிர்ணயிக்கப்படும்.

பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் சாதாரண, பொதுச்சபைக் கூட்டங்கள்

1958-ம் வருடத்திய தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம், பஞ்சாயத்து யூனியன் மன்றக் கூட்டங்கள், இரண்டு கூட்டங்களுகிடையில் அறுபது நாட்களுக்கு மேல் இடைவெளி ஏற்படா வண்ணம் கூட்டம் கூடும் நாட்களை வரையறுத்துக் கொள்ள வகை செய்கிறது. சிறப்பாக, 1958-ம் வருடத்திய தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 66-வது பிரிவின்கீழ் பஞ்சாயத்து யூனியன்களிடம் பெரும் பொறுப்புக்கள் ஒப்படைக்கப் பட்டுள்ள காரணத்தால், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் மன்றமும், மாதத்துக்கொரு முறை, முறையாகக். கூட்டம் நடத்தவேண்டும், என்று அரசாங்கம் கருதுகிறது. கூட்டத் தேதி மன்றத் தலைவரால் நிர்ணயிக்கப்படும். மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில், சம்பந்தப்பட்ட வட்டாரத்தில் திட்ட வேலைகள் அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பற்றியும், திட்டங்களை நிறைவேற்றும்போது ஏற்படக்கூடிய பிரச்சினைகளையும் தொல்லைகளைப் பற்றியும் எடுத்துக்கூற, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவரும் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் கலந்து கொள்வார். பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர், தம்முடைய இந்தக் கடமையைத் திறம்படவும், பயன்படும் வகையிலும் நிறைவேற்றுவதற்கு உதவியாக, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் சாதாரண, பொதுச் சபைக் கூட்டமும், ஒவ்வொரு மாதமும் 11-ம் தேதிக்கும் 20-ம் தேதிக்கும் இடைப்பட்ட நாட்களில் கூட்டுவது விரும்பத்தக்கது என்று அரசாங்கம் கருதுகிறது.

பஞ்சாயத்துக்களின் சாதாரண, பொதுச்சபைக் கூட்டங்கள்

1958-ம் வருடத்திய தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம், பஞ்சாயத்துக் கூட்டங்களின் இடைவெளிக் லகா அளவு எதையும் நிர்ணயிக்கவில்லை. இருந்த போதிலும், ஒவ்வொரு பஞ்சாயத்துக் கூட்டமும் மாதம் ருஒ முறை கூட்டப்பட வேண்டும் என்று விதிகள் வகை செய்கின்றன. இங்கேயும், பஞ்சாயத்து யூனியன் மன்றக் கூட்டத்திற்கு முன்னால் பஞ்சாயத்துக் கூட்டம் நடைபெற்று விடுவது, பஞ்சாயத்து யூனியன் மன்றம், பஞ்சாயத்தின் நோக்கங்களை அறிவதற்கு எதுவாக இருக்கும். இந்த வசதியைக் கருதி, பஞ்சாயத்துத் தலைவரால், பஞ்சாயத்துக் கூட்டத் தேதி சாதாரணமாக ஒவ்வொரு மாதமும் 1-ம் தேதிக்கும், 10-ம் தேதிக்கும் இடைப்பட்ட நாட்களில் அமையுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறது. சுற்றறிக்கை விடுதல், கூட்ட நடவடிக்கைகளுக்கு ஈடாகக் கருதப்பட மாட்டாது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் அரசாங்கம் வலியுறுத்த விழைகிறது. விதிகளுக்குக் கட்டுப்பட்டு பஞ்சாயத்துக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். கூட்டத் தேதியும், கூடும் இடமும் கிராம ஜனங்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும். பஞ்சாயத்துக் கூட்டங்களில், சாதாரணமாக, பொது ஜனங்கள் அனுமதிக்கப்பட வேண்டும். தங்களுடைய வேலை தான் பஞ்சாயத்தினால் கவனிக்கப் படுகிறது என்று உணர்கின்ற மனப்பான்மை, மக்களுக்கு ஏற்படுமாறும், அவர்கள் பஞ்சாயத்து வேலைகளில் தீவிர ஆர்வம் கொள்ளுமாறும் உற்சாகப் படுத்தப்படவேண்டும். கிராமங்களுக்குத் திட்டம் வகுத்து, அவற்றைச் செயல் படுத்தும் அதிகாரம் பெற்ற அமைப்பாக விளங்கும் பஞ்சாயத்துக்கள் நன்கு செழிக்க, முறையாகக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும்.

வேலைகளின் பாகுபாடு

மாவட்ட வளர்ச்சி மன்றங்கள், பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், பஞ்சாயத்துக்கள் ஆகியவைகளின் வேலைகளைப் பற்றிய விதிகளுக்குட்பட்டு, இந்த அமைப்புக்களின் வழக்கமான வேலைகள் இவையெனப் பாகுபாடு செய்து அரசாங்கம் உத்தரவிடுகிறது.

1. அரசாங்கம் வரையறுக்கும் வேலைகள்.
2. தல வேலைகள்.

அரசாங்கம் வரையறை செய்யும் வேலைகளைத் தவிர ஏனைய எல்லா வேலைகளும் தல வேலைகள் என்று கருதப்படும்.

கீழே குறிக்கப்பட்டுள்ள, அரையாண்டுக்கான விளக்க அறிக்கை பற்றியனவும், மன்றத்தின்முன் கொண்டு வரப்பட வேண்டியன என்று, அரசாங்கத்தால் சிறப்பாக வேண்டப்படும் பிற வேலைகளும் அரசாங்கம் வரையறை செய்யும் வேலைகள் ஆகும்.

மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் கூட்டங்களுக்கு அரசாங்கம் வரையறை செய்யும் வேலைகள்

இந்த மன்றங்களின் ஒவ்வொரு கூட்டத்திலும், அரசாங்கத்தின் எல்லா இலாக்காக்கள் சம்பந்தமான எல்லா விஷயங்களும் திருப்திகரமாக விவாதிக்கப் படுவதென்பது முடியாத செயலாகும். அதே நேரத்தில், மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் ஒரு குறிப்பிட்ட இலாகா சம்பந்தமான விஷயங்கள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் பொழுது இரண்டு கூட்டங்களின் இடைவேளை அதிகமில்லாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். இது சம்பந்தமாக, மாவட்ட வளர்ச்சி மன்றங்களில் கொண்டு வரப்பட வேண்டிய விஷயங்களைக் கீழ்க்கண்ட மூன்று தலைப்புக்களில் கூறலாம் :

(i) உற்பத்தித் திட்டங்கள் (விவசாயம், கால்நடைப் பாதுகாப்பு, தொழில்கள், இவற்றுடன் தொடர்பு கொண்ட நீர்ப்பாசனம், மின்சாரம், கடன்கள், கூட்டுறவு முதலியன).

(ii) நலப் பணித்திட்டங்கள் (சுகாதாரம், கல்வி, பாதைகள், தண்ணீர் வி்நியோகம் முதலிய) உற்பத்தியுடன் தொடர்பு கொள்ளாத பிற வேலைகள் எல்லாம்)

(iii) வளர்ச்சி நிர்வாகம்.—

(அ) அவையாவன, பஞ்சாயத்து நிர்வாகத்தின் மொத்த வேலையும்,

(ஆ) பஞ்சாயத்து வளர்ச்சித் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் நிர்வாக வேலையும்.

(இ) மாவட்டத்தில் ஐந்தாண்டுத் திட்ட நிறைவேற்ற சம்பந்தமான நிர்வாக, பொருளாதார வகை வேலைகள். ஆண்டின் ஆறு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களுக்கும், கீழ்க்கண்டவாறு வேலைகளை ஒதுக்கி வைத்துக் கொண்டு—அரசாங்கம் வரையறை செய்யும் வேலைகளை—மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் செயல் படுத்தும் :—

பிப்ரவரிக் கூட்டம் : உற்பத்தித்திட்டங்களைப் பற்றிய அரையாண்டுக்கான விளக்கம்.

ஏப்ரல் கூட்டம் : நலப் பணித்திட்டத்தைப் பற்றிய அரையாண்டுக்கான விளக்கம்.

ஜூன் கூட்டம் : வளர்ச்சிப் பணி நிர்வாகத்தைப் பற்றிய அரையாண்டுக்கான விளக்கம்.

ஆகஸ்ட்டுக் கூட்டம் : உற்பத்தித் திட்டங்களைப் பற்றிய, அரை ஆண்டுக்கான விளக்கம்.

அக்டோபர் கூட்டம் : நலப்பணித் திட்டத்தைப் பற்றிய அரையாண்டுக்கான விளக்கம்.

டிசம்பர் கூட்டம் : வளர்ச்சிப் பணி நிர்வாகத்தைப் பற்றிய, அரையாண்டுக்கான விளக்கம்,

ஒவ்வொரு கூட்டத்தின் நடைமுறை அறிக்கைப் பிரதி ஒன்றை, கலெக்டர், கூட்டம் முடிந்த உடனே, அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும். மாநிலத்தின் இவ்வாறு சேர்ந்த அறிக்கைகளின் தொகுப்பு சட்டமன்ற வளர்ச்சிப் பணிக் குழுவின் முன்னர் வைக்கப்படும்.

குறிப்பு.—இக்கூட்டங்களுக்கு, அரசாங்கத்தால் வரையறுக்கப்படும் வேலைகளின் விஷயங்களைக் கொண்டு அக்கூட்டங்களின் தல வேலைகளைக் கட்டுப்படுத்துவது அரசாங்கத்தின் நோக்கம் அன்று.

அவ்வப்போதைய விளக்க அறிக்கைகள், நடைமுறை அறிக்கைகள் ஆகியவற்றின் விளக்கமும் மாற்றமும்:

மாவட்ட வளர்ச்சிப் பணித் துறைகளின் பல்வேறு அதிகாரிகளால், மாநிலத் தலைமை அலுவலகத்திலுள்ள சம்பந்தப்பட்ட இலாகத் தலைவர்களுக்குச் சமர்ப்பிப்பதற்கென்றும், மாவட்ட வளர்ச்சி மன்றத்தின்முன் வைப்பதற்கென்றும், ஏராளமான விளக்க அறிக்கைகளும் (Reviews) நடைமுறை அறிக்கைகளும் (Returns), தயாரிக்கப்படுகின்றன. கிராம அபிவிருத்தித் துறையின் 1960-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1041-ல் சமுதாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ், மாவட்ட வட்டார நிலை அதிகாரிகளால் செய்யப்பட்ட ,வேலைகளைப் பற்றிய அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு அரசாங்கத்துக்கு அனுப்பப்படுவதற்கு முன்னர், மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் முடிவை அறிவிக்க, அவற்றின்முன் வைக்கப்பட வேண்டும் என்றுஅரசாங்கம் ஏற்கனவே ஆணைகள் பிறப்பித்திருக்கிறது. பல்வேறு நிலைகளில், இத்தகைய அறிக்கைகளின் பயன் குறையா வண்ணம் இவற்றில் எவற்றைத் திருத்தி அமைக்கலாம், எவற்றை இணைக்கலாம், எவற்றை நீக்கலாம் என்று ஆராயவேண்டியது இப்பொழுது தேவையாகிறது. இந்த விஷயத்தில் ஆராய்ந்து முடிவு காண, இவ்வறிக்கைகளைப்பற்றி விரிவாக ஆராய்ந்து எவற்றை நீக்கலாம் என்று, 1961-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ம் தேதிக்குள் யோசனை கூறும்படி அரசாங்கம் கலெக்டர்களுக்கு ஆணையிட்டுள்ளது. என்றாலும் மாவட்ட, வளர்ச்சி மன்றத்தின் திட்ட வளர்ச்சி அறிக்கை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை தயாரிக்கப்பட்டாலும் இலாகாத் தலைவர்கள் பல விஷயங்களில் அடிக்கடி விளக்க அறிக்கைகள் பெற வேண்டியது தேவையாகிறது. என்பது நினைவு படுத்தப்படுகிறது. இது விஷயத்தைக் குறித்த அறிக்கையை மாவட்டக் கலெக்டர்கள் 1961-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ம் தேதிக்குள் அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்கக்கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் நிலைக்குழுக்கள் :

(i) மாவட்ட வளர்ச்சி மன்றங்கள், அரசாங்கத்தின் தேவையை ஒட்டி—

(அ) உணவு-விவசாயம்
(ஆ) தொழில்-தொழிலாளர்
(இ) பொது வேலைகள்
(ஈ) கல்வி
(உ) மதுவிலக்கு உட்பட சுகாதாரம், ஷேம நலம்-ஆகிய

விஷயங்களுக்கு நிலைக் குழுக்களை அமைத்துக்கொள்ள 1958-ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் சட்டம் 8 (1)-வது பிரிவு வகை செய்கிறது.

ஒவ்வொரு மாவட்ட வளர்ச்சி மன்றமும் இந்த ஐந்து நிலைக் குழுக்களையும் அமைக்க வேண்டுமென்று அரசாங்கம் இப்பொழுது விரும்புகிறது.

(ii) இந்த ஐந்து குழுக்களும் முறையே கீழே கொடுக்கப்பட்டுள்ள விஷயங்களுடன் தொடர்பு கொண்டு பணியாற்ற வேண்டும் என்றும் அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது:—

(அ) உணவு விவசாயக் குழு : விவசாயம், உணவு உற்பத்தி, சிறிய நீர்ப்பாசனம், கடன்கள், கூட்டுறவு, கால்

நடைப் பாதுகாப்பு, மீனளம், காடுகள், விவசாயத்துடன் தொடர்பு கொண்ட பிற விஷயங்கள் ஆகியவை.

(ஆ) தொழில்-தொழிலாளர் குழு : கதர்-கிராமக்கைத்தொழில்கள், தொழில்கள், மின்சாரம், வேலை எற்பாடு, வீட்டு வசதி, இவற்றுடன் தொடர்பு கொண்ட பிற விஷயங்கள்—ஆகியவை.

(இ) பொதுவேலைக் குழு : பெரிய நீர்ப் பாசனம், கட்டட வேலைகள், கிராம வேலை, மானியங்கள், பாதைகள், தண்ணீர் விநியோகம், இவற்றுடன் தொடர்பு கொண்ட பிற விஷயங்கள் ஆகியவை.

(ஈ) கல்விக் குழு பல்கலைக்கழக் கல்வி நீங்கலாக—ஏனைய, கல்வி பற்றிய எல்லா விஷயங்களும்.

(உ) சுகாதாரம்—ஷே நலக்குழு : வைத்திய உதவி, பொது சுகாதாரம், குடும்பக்கட்டுப்பாடு, சமூக நலன், அரிஜன நலன், மதுவிலக்கு, இவற்றுடன் தொடர்பு கொண்ட பிறவேலைகள் ஆகியவை.

(iii) 1958-ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் சட்டம் 8-வது பிரிவு (3) பிரிவின் உட்பிரிவு ஆகியவற்றில், ஒரே ஆள் இந்தக் குழுகக்ளில், ஒன்றுக்கு மேற்ப்பட்ட குழுக்களில் உறுப்பினராக இருக்கக் கூடாது என்று கூறப்பட்டிருப்பது கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறது. இந்த விதிகளைக் கவனிக்கும்போது, மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் இந்த சட்டபூர்வமான நிலைக் குழுக்களில் ஏதாவதொன்றில், அதிகாரப்பற்றற்றவர் ஒவ்வொருவரும் பணி புரிய வாய்ப்பளிக்கப் படுகிறார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. ஆகையால், இக்குழுக்கள் ஒவ்வொன்றிலும் இருக்கத்தக்க அதிகாரப் பற்றற்றவர்களின் எண்ணிக்கை, மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் அதிகாரப் பற்றற்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில், ஏறத்தாழ ஐந்தில் ஒரு பகுதியினராக இருக்கலாம். இந்த அடிப்படையில் நிலைக்குழுக்களின் உறுப்பினர் தொகையை நிர்ணயிக்கும் அதிகாரம் கலெக்டர்களுக்கு வழங்கப்படுகிறது.

(iv) மாவட்ட வளர்ச்சி மன்ற நிலைக் குழுக்களுக்கு, எந்த முறையில், உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க மாவட்ட, மன்றங்கள் சட்டம் 8 (3)-வது பிரிவின்கீழ் சட்ட பூர்வமான விதிகள் வகுக்கப்படவேண்டுமா என்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது. இந்தப் பிரச்சினை உதகமண்டலத்தில் நடந்த கலெக்டர்கள் மாநாட்டிலும் விவாதிக்கப்பட்டது. பல்வேறு குழுக்களுக்கு உறுப்பினர்களைப் பாகுபாடு செய்து நியமிக்கும் விஷயத்தில், கலெக்டர், தலைவர் என்ற முறையில், தனிக்கூட்டங்களில் கலத்தாலோசித்து மன்ற உறுப்பினர்கள் எல்லோரும் ஒருமனதாக ஒப்புக் கொள்ளும் வகையில் கலெக்டர் முடிவு செய்கின்ற ஒரு பழக்கத்தை ஏற்படுத்த வழி இருக்கிறது. இத்தகைய ஏற்பாடு, ஏற்கனவே பல மாவட்டங்களில் அனுசரிக்கப்பட்டுவருகிறது என்பது குறிப்பிடத் தக்கது. ஆகவே, இப்போதைக்கு, எல்லோரும் ஒப்புக் கொள்ளும் அடிப்படையில், வழக்கமான தேர்தல் இல்லாமல், நிலைக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும், என்று அரசாங்கம் கருதுகிறது.

(v) நிலைக்குழுக்களின் உறுப்பினர்கள், நிலைக்குழுக் கூட்டங்களுக்காகத் தலைமை நிலையத்திற்கும், மன்றக் கூட்டத்திற்கும் ஒரு பயணமாகச் சென்றுவர வசதியாக இருக்கும். அதற்காக, நிலைக்குழுக்கூட்ட நாட்களை, பொதுாக் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திற்கு, அடுத்து முன்னதாகவரும்படிக் குறிக்க வேண்டும். இதை, நிலைக் குழுக்களின் சாதாரணக் கூட்டத்திற்குச் சாதாரண விதியாகக் கொள்ளலாம். ஆனால் மன்றக் கூட்டத்திற்குமுன் அமைந்த நாளைத் தவிர, தேவையானால் வேறு நாட்களில் நிலைக் குழுக் கூட்டம் கூடுவதை எந்த விதியும் கட்டுப்படுத்தாது.

மேற்குறித்த சட்டபூர்வமான நிலைக் குழுக்களை யார் கூட்டுவது என்கின்ற பிரச்சினையை அரசாங்கம் ஆலோசித்திருக்கிறது. இது சம்பந்தமாக,

(i) இப்பொழுது மாவட்ட வளர்ச்சி மன்றச் செயலாளராகப்பணியாற்றும் தனி உதவியாளர் (Personal Assistant) திட்டம் வளர்ச்சிப்பணி மன்றக் குழுக்களின் கூட்டங்களைக் கூட்டுவோராகவும் பணியாற்றலாம் என்றும்,

(ii) குறிப்பிட்ட நிலைக்குழுவின் மொத்த, அல்லது பெரும்பான்மை வேலைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட வளர்ச்சில் பணித்துறையின் பிரதம மாவட்ட அதிகாரியே நிலைக் குழுக் கூட்டத்தைக் கூட்டுவோராகப் பணியாற்றலாம் என்றும்;

இரண்டு யோசனைகள் கூறப்பட்டுள்ளன. இந்த இரண்டு வழிகளிலும் நன்மையும் இருக்கிறது; தீமையும் இருக்கிறது. ஆகவே இப்பாதைக்கு இந்த விஷயத்தை அரசாங்கம், கலெக்டருடைய முடிவுக்கே விட்டுவிடுகிறது. எல்லா மாவட்டங்களிலும், இது காரியமாகச் செய்யப்படும் ஏற்பாடுகளைப் பற்றிய ஓராண்டுக்காலத்தில் கிடைக்கும் அனுபவத்தைக் கொண்டு விளக்க அறிக்கை தயாரிக்கப்பட்டு மாநிலம் முழுதுக்குமான ஒரு ஒழுங்கான நடைமுறைத் திட்டம் வகுக்கப்படும்.

சட்ட பூர்வமில்லாத சிறப்புக் குழுக்களின்
தொடர்ச்சிக்கான விளக்க அறிக்கையின் தேவை:

மேற் குறிப்பிடப்பட்ட, சட்ட பூர்வமான நிலைக்குழுக்கள் ஐந்தும், மாவட்ட வேலைகளின் எல்லாப் பகுதிகளையும் கவனித்துக்கொள்ள வேண்டும். இருந்தபோதிலும், இப்பொழுது மாவட்ட வளர்ச்சி மன்றத்துடன் தொடர்பின்றி, மாவட்ட நிலையில் பல குழுக்கள் பணியாற்றி வருகின்றன. மாவட்ட நிலையில் சட்ட பூர்வமற்ற சிறப்புக் குழுக்களால் செய்யப்படும், இணைப்பு வேலைகள். விளக்க அறிக்கை வேலைக்ள் உட்பட நிர்வாக வேலைகளும் வளர்ச்சிப்பணி வேலைகளும் ஆகிய எல்லா வேலைகளும், வருங்காலத்தில் மாவட்ட வளர்ச்சி மன்றங்களாலும் அல்லது அவற்றின் குழுக்களுள் ஒன்றினாலும் நடத்தப்பட வேண்டும், இந்த நோக்கத்தோடு, மாவட்டக் கலெக்டர்கள், அவரவர் மாவட்டங்களில், சிறப்புக்குழுக்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் வேலைகளையும், அக்குழுக்களின் அமைப்புக்களையும் பற்றி விளக்கமாக ஆராயண்டும்வே. அதன் பின்னர், அத்தகைய குழுக்கள் ஒவ்வொன்றினைப் பற்றியும் அவை கலைக்கப்படக்கூடாவா, அவற்றின் பணிகளை மாவட்ட வளர்ச்சி மன்றம், அல்லது அதன் நிலைக்குழுக்களுள் ஒன்றுக்கு மாற்றப்பட வேண்டுமா என்று அறிக்கை அனுப்ப வேண்டும். இவ்வாறு செய்யப்படக் கூடாது என்று கலெக்டர் கருதுவாரேயானால், என் இக்குழுக்கள் தொடர்ந்து இருக்க வேண்டு, மென்பதற்கான காரணங்களை விளக்கி ஒரு விரிவான அறிக்கையை அரசாங்கத்துக்கு அனுப்பி, இது விஷயமாக அரசாங்கத்தின் அனுமதியைப் பெறவேண்டும். ஹரிஜன நல வேலைகளைச் சிறப்பாகக் கொண்டியங்கும் ஹரிஜன நலக்குழு சிலகாலம் தொடர்ந்து தனிக்குழுவாக இயங்க வேண்டும் என்று அரசாங்கம் கருது கிறது. 1961-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 1-ந் தேதிக்குள் கலெக்டர்கள் இது சம்பந்தமாக ஒரு அறிக்கையை அனுப்பும்படிக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1961 ஆண்டு ஆகஸ்டில் தொடங்கும் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்துக்குள், இந்த ஏற்பாடுகள் துரிதமாகச் செயல்படுத்தப்பட்டு, உறுதியாக, முழுவதும் நடைமுறையில் கொண்டுவர அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

[கிராம அபிவிருத்தி—தல நிர்வாகத்துறையின் 1961 ம் ஆண்டு ஜூன் மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண்1694)



வானொலியில் கிராம நிகழ்ச்சிகள்

திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்திலிருந்து 1961 ஆகஸ்டு மாதத்தில் ஒலிபரப்ப இருக்கும் கிராமிய நிகழ்ச்சி களின் விவரம் :—

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் :

நம் மாதர் மன்றம் ; திரைப்பட இசை ; நாட்டுப் பாடல் பயிற்சி ; பாட்டு

ஒவ்வொரு சனிக்கிழமையும் :

முதியோர் இலக்கிய வகுப்பு ; பாரதிப் பாடல்கள் ; பாட்டு

ஒவ்வொரு திங்கட்கிழமையும் :

வாராந்தர மார்க்கட் நிலவரங்கள் ; பாட்டு

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் :

திரைப்பட இசை ; கிராம ரேடியோ மன்றம் ; பாட்டு

ஒவ்வொரு வியாழக்கிழமையும் :

நமது திட்டம் ; மெல்லிசை ; செய்திக்கதிர் ; பாட்டு

இவையன்றி ஏனைய சிறப்பு நிகழ்ச்சிகள் :

செவ்வாய் (1—8—1961). நிகழ்ச்சி நிரல்.

புதன் (2—8—1961). கோழிகளின் உண்ணி சுரம்—விவாதம்.

வெள்ளி (4—8—1961). சத்திய நெறி.

சனி (5—8—1961). மெட்ரிக் அளவைகள்—விவாதம்.

ஞாயிறு (6—8—1961). பாட்டைக் கேளுங்கள்—

என். ராகவன் அளிக்கும் இசை நிகழ்ச்சி.

“ கிராமம் போவோமே ”—செய்திக் கதர்.

திங்கள் (7—8—1961). வானொலியின் டி. எஸ் ஒலிப் பதிவுகள்.

மன அமைதி—தொடர் நிகழ்ச்சி.

‘ பட்டணத்து பாகடர் ’

எம். ஆர். ராஜகோபாலன் அளிப்பது.

புதன் (9—8—1961). சித்தர் பாடல்கள்.

பட்டுப் பருத்தி மர வளர்ப்பு—விவாதம்.

புதுப்புனல்—இசை நிகழ்ச்சி.

வெள்ளி (11—8—1961). சத்திய நெறி.

சனி (12—8—1961). சமுதாய வளர்ச்சி : பாரதத்தின் வரலாறு—பேச்சு.

ஞாயிறு (13—8—1961). ஆராய்ச்சிக் கூடம்—விவாதம் ; நாடோடிக்கலை—உடுக்கடிக் கதை.

திங்கள் (14—8—1961). சுதந்திர தினம் : சிறப்பு நிகழ்ச்சிகள் ; நாடோடிக் கலை.

செவ்வாய் (15—8—1961). விடுதலை—மேடை நாடகம் (வாசுதேவ் தயாரித்தது).

புதன் (16—8—1961). களஞ்சியத் தானியத்தில் பூச்சிகள்—விவாதம் ; கிராம நலக் கழகம் ; திருப்புகழ்.

வெள்ளி (18—8—1961). சத்திய நெறி.

சனி (19—8—1961). காஷ்மீரத் தோட்டங்கள்—விவாதம்.

ஞாயிறு (20—8—1961). விவசாயியின் கடிதம். கிராமப் பஞ்சாயத்து : பஞ்சாயத்து மெம்பர் வழக்கு—(வாசு அளிப்பது).

திங்கள் (21—8—1961). வானொலியின் டி. எஸ். ஒலிப் பதிவுகள்.

தாயின் மணி மாலை II—ஜி. செல்வம் அளிக்கும் தொடர் நிகழ்ச்சி.

புதன் (23—8—1961). வெல்லம் காய்ச்சுதல்—விவாதம்; அருட்பா.

பெரிய குழந்தைகள்—நாடகம் (எஸ். பூமிநாதன் தயாரித்தது).

வெள்ளி (25—8—1961). சத்திய நெறி.

சனி (26—8—1961). தொழிற் பேட்டைகள்—பேச்சு.

ஞாயிறு (27—8—1961). நலந் தரும் திட்டம்—விவாதம்.

குண்டலகேசி—நாடகம் (ஜி. சுந்தரமூர்த்தி தயாரித்தது).

திங்கள் (28—8—1961). வானொலியின் டி. எஸ். ஒலிப்பதிவுகள்.

மாவிளக்கு—சிறு கதை (ஆர். கோபால கிருஷ்ணன் அளிப்பது).

புதன் (30—8—1961). விரயத் தடுப்பு—விவாதம் ; தேவாரம்.

ஒன்றே குலம்—நிகழ்ச்சி.

வியாழன் (31—8—1961). “ வாருங்கள் ஒன்று சேருங்கள் ” (பாட்டு); செய்திக்கதிர்.

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.





1. மத்திய அமைச்சர் டாக்டர். பி. சுப்பராயன் திருச்சியில் பயணர் ஓய்வு மனையை 10—6—61 அன்று திறந்துவைத்தார்.

2. பயணர் ஓய்வு மனையின் (Tourist Rest House) தோற்றம்.

3. தமிழ்நாடு—மண், காகிதப் பொம்மைகள் கண்காட்சித் திறப்பாளர் ஸ்ரீமதி. சௌந்தரம் ராமச்சந்திரன், எம்.எல.ஏ., விழாத் தலைவர் அமைச்சர் ஸ்ரீ பக்தவத்சலம் ஆகிய இருவரும் காட்சிப் பொருள்களைப் பார்வையிடுகின்றனர்.

4. 6—6—61 அன்று திருவொற்றியூர் கன்னியா குருகுலத்தைச் சேர்ந்த வாசுகி மகளிர் உயர்நிலைப் பள்ளியை அமைச்சர் ஸ்ரீ சி. சுப்பிரமணியம் திறந்து வைத்தார்.

5, 6. சென்னைக் கீழ்ப்பாக்கத்திலுள்ள அரசாங்க ஆதரவுப் பெண்கள் பள்ளி ஆண்டு விழாவுக்கு அமைச்சர் ஸ்ரீமதி லூர்தம்மாள் சைமன் தலைமை வகித்தார்.

Regd No. M. 7277.
©
தமிழ்நாடு அரசாங்கம்
1961
பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் நிறைவேற்ற வேண்டிய புதிய பணி'
நீர்ப்பாசன வசதிகளைச் செய்து, கிராம உணவு உற்பத்தியைப் பெருக்குவது, புதிய பஞ்சாயத்து ஆட்சியின் பொறுப்பாகும்.
'குடி மராமத்து' வழக்கத்தைப் புதுப்பிக்க, திட்டமிட்ட நடவடிக்கை அவசியம்.
[புதிய பஞ்சாயத்துச் சட்டம்—பிரிவு 85-ல் அதற்கான அதிகாரம் வழங்கபபட்டுள்ளது.]